ஓம்

பாரத சக்தி மகா காவியம்

முதலாவது

சித்தி காண்டம்

கவியோகி மஹரிஷி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

இந்த புத்தகம் கிடைக்குமிடம்:
சுத்தானந்த நூலகம்,
சென்னை - 600 041.
Ph: 097911 77741

Copy Right : @ Shuddhananda Yoga Samaj,
Sivaganga (Regd)
Shuddhananda Nagar, Sholapuram,
Sivaganga Dt Pin: 630 557

ஓம்

பாரத சக்தி மகா காவியம்

முதலாவது

சித்தி காண்டம்

1. மங்கல வாழ்த்துப் படலம்

வெற்றி கொட்டுக ! விம்முக பேரின்பம் !
சுற்றி ஞானச் சுடரொளி வீசுக !
முற்ற றிவன் முதல்வன் அருளையே
பற்றி வாழப் பயின்றதிப் பாரெலாம் !

அம்மை யப்பன், அருட்பெருஞ் சோதியான்,
எம்மை யாளும் இறைவன், குருபரன்;
தம்மைத் தந்தவர் தாபந் தணிப்பவன்;
செம்ம லரடி யைத்தினஞ் சேவிப்பாம்.

எல்லை யற்றநல் லின்னுயி ருள்ளமே
தில்லை யாகத் திருநடஞ் செய்பவன்;
இல்லை யென்பவ ருள்ளு மிருப்பவன்;
சொல்லைத் தூண்டித் துலக்குக வெற்றியே !

இத்த லத்தொழில் எல்லா மியக்கியே,
அத்தன் ஆணையி னால்விளை யாடுவாள்;
சுத்த சக்தி யருட்சுட ரேற்றுக—
நித்த மிக்கவி நின்று நிலவவே !

மீட்டுவாய் உயிர் வீணையைப் பண்ணுடன்,
ஊட்டுவாய் உயர் வோங்குங் கலையின்பம்,
காட்டுவாய் வழி காசினி யெங்குமே
நாட்ட வுன்னிசை நற்றமிழ் வாணியே !

திங்கள் கண்ட திரைகடல் போலவும்,
பொங்குங் காலையிற் புள்ளிசை போலவும்,
மங்கலஞ் சொல் வசந்தத்தைப் போலவும்,
கங்கை போலுங் கவியருள் வாணியே !
உன்னை யோதி யுருகுவ தல்லது,
பின்னை யேதும் அறிகிலன் பிள்ளையான்;
அன்னை யேயமு தேயென தாவியை,
மன்னு மங்கல மாகவி யாக்குவாய் !

ஊழின் கூத்து முடிந்ததும், ஓர்பகல்,
வீழும் பொய்யுடல் வீழினும், உன்புகழ்
சூழுந் தூய சுடர்க்கவி யாயென்றும்
வாழு கின்ற வரமருள் சக்தியே.

என்பெ யரை மறக்கினும் இப்புவி,
உன்பெ யரை யுருகி நினைத்திடத்
தன்பெ யரைத் தழைக்க விளக்கிடும்,
அன்பு மாகவி யையருள் அன்னையே !

சிலை,அ ருட்கவி சித்திரம், கூத்திசைக்
கலைகள் தெய்வக் கருத்துடன் ஆடிடும்,

மலையி னுச்சியில் என்மனம் ஆடிடத்
தலைவி யேயருள் தாரக சக்தியே !

வள்ளல் வானில், மலைவனக் காட்சியில்,
துள்ளு மாற்றினிற் சூழும் இயற்கையில்,
அள்ளி யள்ளி யளித்திடும் பாட்டையென்
உள்ளப் பொய்கையில் ஊற்றி யருளுவாய் !

கடலைக் காற்றைக் கதிர்வளர் வானத்தை,
இடம கன்ற புவியை, யியற்கையை,
உடலை, யென்னுள் உயிரைப் படைத்தவுன்
வடிவைப் பாட வரமருள் சக்தியே !

பூவி லுன்னருள் பூத்த புலவர்செய்
பாவி லூறிப் பழுத்த கவிதையென்
நாவி லூறிட நல்வரந் தந்தருள்,
ஆவி போர்த்தெனுள் ஆடும் பரமனே.

தோற்றித் தோற்றித் துகளற நாளுமே
மாற்றி மாற்றி மனிதரின் வாழ்வைமுன்
னேற்றி யேற்றி யியற்றுமுன் னாடலைப்
போற்றி சக்தி, புகன்றரு ளென்னுளே !

வித்து வான்கள் விரும்பியுன் னன்பினை
முத்து முத்தென முத்தமிழ் சூட்டினர்
புத்த லர்தொடுத் தேனுனைப் பூசிக்கப்
பித்த னேன்சிறு பிள்ளைத் துணிவினால்.
வீரர் வீறது; வித்தகர் சித்தது;
தீர ரின்சம யோகத் திறனது;
பூர ணம்பெறும் புண்ணியத் தீயது;
தார கம்அது **பாரத சக்தியே**!

துய்ய யோகந் துலங்கிடும் வாழ்விலே,
வைய கத்தினில் வானர சோங்கிடும்,
தெய்வ மானிடச் சங்கஞ் செழித்திடும்,
செய்ய பாரத சத்தியின் சித்தியால்.

பொலிக பூரணம் ! பொங்குக வெற்றியே!
பொலிக நல்ல புதுயுக வாழ்க்கையே!
பொலிக புண்ணிய பாரத பூமியே!
பொலிக மங்கலம் பூவுயிர் யாவுமே.

2. சிருட்டிப் படலம்

(ஊழிவெள்ளம்; சக்தி விழிப்பு; ஓமிசை; புத்துலகும் மனுமதி மரபும் தோன்றுதல்)

எங்கு வந்ததிப் பூவுயிர்? எப்படி? எதனால்?
எங்குச் செல்வதிப் படைப்பணி? இதன்முடி பென்னே?
இங்கு வந்துவந் தியங்கிடும் வாழ்க்கையின் பண்பை,
நன்கெ னக்கருள் என்று நான் சக்தியை நயந்தேன்.

உலகை ஓமெனு மந்திரத் தாலுயிர்ப் பித்தாள்,
அலகி லாவிளை யாட்டுடை யாள்பர சக்தி,
நிலைபெற் றென்னுளத் தேநிறைந் தருள்விழி திறந்தே
இலகு வித்தமெய்க் காட்சியை யியம்புகின் றேனால்:

புது யுக நினைப்பு

வான மாதியைம் பொருளினம் வகுத்தவை தொகுத்தும்,

ஈன லாதியைந் தொழில்களைச் சக்தியால் இயற்றி,
மான வர்முதல் எழுவகைத் தோற்றமு மகிழ,
ஞான நாடகம் புரிபவன் ஞாலநா யகனே.

ஆக்கும் போதய னாகவும், ஆருல குயிரைக்
காக்கும் போதரி யாகவும், கடைவெள்ளத் தாலே,
நீக்கும் போதர னாகவு நிலவுவன் அருளால்;
பூக்கும் போதுறப் புதுயுகம் புலர்கென நினைத்தான்.

ஊழி வெள்ளம்

கடக டத்திடத் திசையெலாங் காற்றுடன் கதிரோன்
படப டத்திட வுருத்திரன் காளியைப் பணித்தான்.
தடத டத்திடி தாவிடத் தண்கடல் பொங்கி
மடம டத்துயி ருலகினை வாரியுண் டதுவே!

பஞ்ச பூதங்கள் பிரிந்தன; பண்டுல கனைத்தும்,
எஞ்ச லின்றியாங் கிரிந்தது; பரந்தது வெறுமை,
செஞ்செ யல்புரி திறங்களைக் கரந்துளே நீடு
துஞ்சி னான்பர மாத்மனுந் துரியமா முடிமேல்!

அகம கிழ்வினால் உலகினை ஆக்குவான், காப்பான்;
உகமு டிந்திட வுருத்திர லீலைகள் புரிவான்;
இகப ரந்தனி லெவையுமா யிருப்பவன், ஒருவன்,
சுகம வன்பதந் துதிப்பதே தொழிலெனக் கொள்வாம்.

மூலசக்தி விழித்தல்

ஏழு தோற்றமாய்ப் பிறந்திறந் துலகினி லியங்கி,
வாழு மன்னுயிர்க் குலத்தினை வளர்த்திடு மிறைவி
ஆழு றக்கம்விட் டெழுந்தெலாம் அழிந்ததை யறிந்து,
பாழு றக்கம்விட் டெழுப்பினள் பரமனைப் பரிந்தே !

"உள்ள வாறுதன் அறிவினால் உலகெலாம் இன்ப
வெள்ளமாய், உயிர்க் குயிரென விளங்கிடும் பொருளே,
விள்ள ருந்தனிக் கருணையே, விலகரும் அன்பு
வள்ள லே,என தாடலை வகுத்திடும் பரனே" !

"ஒருவ னேபல பான்மையாய் ஒளியுடன் கதிர்போல்
மருவு மென்வயின், வானுல காடலை வைத்தாய்;
அருவு மாகுவை, ஆண்பெண்ணாம் அகிலத்தை யாளும்
உருவு மாகுவை யுன்னியல் பறியுமா றுளதோ?"

"விதங்க ளைப்புவி யணிகளை, வியன்களை, வினையைப்
பதங்க ளைப்பரி ணாமத்தின் படிகளைப் பயனை,
இதங்க ளைப்பல மதங்களை இயல்புற வகுப்பாய்,
கதங்க ளைந்தினிப் புதுப்புவி கண்டருள் புரிவாய்"

"அளவி லாவுயி ராலயம், அருவினை யரங்கம்,
வளமி லாதுணர் வொலியுரு, சுவைமணம் வறண்டே,
தெளிவி லாதொரு சூனிய மானதே....! திகைத்தேன்.
உளவி டத்தினில் உள்ளவா றுலகெலா மாவாய்" !

பரமன்

"நன்கு நன்றினி துன்றிரு நயமொழி யுவந்தேன்,
மங்க ளச்சிவ சக்தியே, சின்மய வடிவே !
பொங்கு முத்தொழில் இனிப்புது வுலகினிற் பொலியும்.
எங்கு மென்மய மாகநீ கோயில்கொண் டிருப்பாய் !"

"உன்னு டன்உறங் கியபுவி யுன்னுடன் விழிக்கும்;
என்ன லந்தரும் இச்சையை யேவினேன் இதன்பால்.

மன்னு மங்கல யாழினில் ஓமிசை வழங்காய்!
பொன்னொ ளிர்புது யுகப்புவி பொலிந்திடக் காண்பாய்!"

"ஓமெ னுந்திரு மந்திரம் உலகினை யாக்கும்;
ஓமெ னுந்திரு வொலியதே உயர்மறைப் பொருளாம்;
ஓமெ னும்பர நாதமே உண்மையின் பறிவாம்,
ஓமெ னும்உயி ரொலியினை யுளமகிழ்ந் திசைப்பாய்!"

சக்தி யாழ் மீட்டல்

"நின்று சாட்சியாய்ப் பணித்தெனை யனைத்திலு நிறைவாய்
என்று மென்செயற் கிறைவனே, ஏகநா யகனே,
நன்று மீட்டுகின் றேனிந்த நலங்கிளர் நாதம்,"
என்று மீட்டினள் ஏழிசைப் பயன்களை யிணைத்தே.

பாழி டத்தினிற் பரந்ததோர் பம்பர வியக்கம்;
யாழி சைதரும் அகரத்தால் அம்பரம் விழிக்க,
வாழி சைதரும் உகரத்தால் வளர்தரும் அணுக்கள்
சூழி சைதரும் மகரத்தாற் சுழன்றன விரைந்தே.

நாதம் உண்டுள நாரணன் எழுந்தணு நிறைந்தான்;
வேத மார்த்தனன் விழித்தெழுந் தவன்வயின் பிரமன்,
பூத வாதிகள் பொம்மென வொலிமடுத் தெழுந்த,
சோதி பூத்தது, சுடர்மணிக் கணங்களும் பூத்த.

வெளி நிறைந்தது; சக்தியால் வேகமாம் அணுவிற்
களி நிறைந்தது; கதிரிடுஞ் சுடர்களிற் கனலின்
சுழி நிறைந்தது; கடலுண்டு சொரியும்வா னமுதின்
அளி நிறைந்தது; புதியநல் லழகெங்கு நிறைந்தே!

வல்லி யற்கையின் வளமைகள் வளர்ந்திட நாளும்,
சொல்லொ ணாப்புதுத் தோற்றங்களெழுந்தன தொடர்ந்தே;
கல்லெ ழுந்தது; மலைநதி கனிமரக் காடு
புல்லெ ழுந்தது புசிப்புக ளெழுந்தன பொலிந்தே.

புண்ணிய பூமி தோன்றுதல்

மண்ண ளாவிய மாண்பணி மகுடம்போல் எழுந்தே
விண்ண ளாவிய வெள்ளிமால் வரைமிசை யிருந்தே,
கண்ண ளாவிய தென்புறங் கவினுறக் காட்டிப்
பண்ண ளாவிய செஞ்சொலாள், பகவனுக் கிசைத்தாள்;

"ஆதி யேநம தரியணை யாகுமிம் மலைமுன்,
மேதி னிக்கொரு ஞானமா விளக்கென மிளிரும்
சோதி நாட்டினைத் தோற்றுவாய் சொக்கழ காகத்
தீதி லாச்சமயோகத்தின் சித்தி யோங்கிடவே"

"நன்றி சைத்தனை நலந்தரு ஞாலநா யகியே
என்றி சைத்தருள் இறைவனும் உவகைமீ தெழுந்தே,
தன்றி ருத்தவக் கதிரினைத் தளர்வறப் பரப்பி,
வென்றி சைத்திடும் வியன்பெறு நாட்டினைப் படைத்தான்!"

"பாரெ திர்பர தேவியே பச்சைவிண் ணகத்தைச்
சீரெ லாம்வளர் திவ்வியச் செல்வநா டிதுவே,
பாரெ லாம்புகழ் பாரத சக்திநின் றொளிரும்
பூர ணம்பெறும் பாரதப் **புண்ணிய பூமி**

"நாய கம்பெறு மிதன்மிசை நல்லன யாவுந்
தாயகம் பெறும்; தாரகமாகிய தருமம்
தோய கம்இது; துலங்குக துகளற நாளும்

வாய கங்கடந் தோங்கிடும் வாய்மையைப் போலே!”

ஆக்கும் ஆற்றலை முற்றிலும் காட்டினான் அயனும்;
காக்கும் ஆற்றலைக் கண்ணெனக் கருணைமால் வகித்தான்
பாக்கி யங்களை மிகமிகப் பரவிடப் புரிந்து,
நோக்கி னாள்சிவை பரமனை நூதனந் தோன்ற

“இச்ச கத்தையென் இன்பவீ டாக்கினை இறைவா;
உச்ச நல்லறி வாற்றலும், உன்னரு ளுணர்வும்,
மெச்சும் ஆத்தும சக்தியும் விளங்குமா னிடத்தைச்
சச்சி தானந்த வத்துவே, சகத்தினிற் படைப்பாய் !”

“என்னி லாண்மைநல் லறிவுடன் வீறுபெற்றெழுக !
உன்னிற் பெண்மைநல் லன்புடன் அழகுறப் பொலிக !
இன்னி தின்இரு திறங்களும் இணைந்துநீ டூழி
மன்னு மங்கல மானிட மரபெனத் திகழ்க !”
பூத யாக்கையிற் பொறிபுலன் கரணங்கள் பொருந்தி,
நாத விந்துக லாதியாம் ஆத்தும நாதன்,
போத மாகவுட் புகுந்துயிர் வாழ்வினை யியக்க
ஏதமில் திருக் கோலங்கள் இரண்டெழுந் தனவே !

*“நனிதி கழ்***மனு மதி***எனும் தளிரணிச் செல்வீர்,*
புனித மாகிய மனையறம் பொலிவுறப் பொருந்தி,
இனித நம்பொரு ளின்பம்வீ டிசைவுறச் செழித்தே
மனித மாமர போங்கிட வாழிநீர் மாதோ !”

மாச கல்மனு மதிகளை வாழ்த்திமா தேவி,
பாச மேவிய நகையுடன் சிவன்முகம் பார்த்து,
“நேச, மானிடர் நிலையினி யென்” னெனக் கேட்டாள்.
ஈச னும்பரி ணாமத்தின் இயல்பினை யுரைத்தான்:

“ஈசன் யான்வளர் மானிடம், எனையறி யாது,
பாச முற்றிடிற் பவவினை பற்றிநீ டலையும்.
நேச மென்னிடை நிலைத்திடின், அருளுணர் வோங்கிப்
பாச நீங்கிடும் பதியினைக் கூடிடும் பசுவே”.

“முக்கு ணம்பெறு மாயையின் முடிவறு வலையிற்
புக்கு மானிடர் இருவினைப் போர்களை விளைப்பார்;
பக்கு வம்பெறு ஞானிகள் பதைப்பறப் பார்த்தே
எக்கு ணத்திலுந் தோய்வுறார்; என்னிலே இருப்பார்”.

3. அருட் குலப் படலம்

(மானிட மரபின் வளர்ச்சி, இருட் குலத்தினை வென்று
பரதன் அருட்குலம் நாட்டல்.)

பஞ்ச பூதமும் பரிதியு மதியிளங் கதிருந்
துஞ்சி டாக்குண தொந்தமும் வளர்த்திடும் புவியில்,
செஞ்செ யல்புரி மானிடத் தேவரும் செழித்தார்;
வெஞ்செ யல்புரி அரக்கரும் பெருத்தனர் விரைந்தே.

கரவுந் தீமையும், கடுஞ்சினப் போர்களும் விளைக்கும்
அரவும் வேங்கையும் போன்றவெவ் வரக்கரை யெதிர்த்தே,
விரவு வீரமும் தவமுங்கொண் டெளிதினில் வென்றான்—
***பரத** னென்பவன் மனுக்குலப் பரிதியாம் அவனே.*

திருக் குணத்தினர் அரசெனத் தேர்ந்திசை கூற,
இருட் குலத்தினை இகல்கெட வென்றமெய் வீரன்,
உருக்கொண் டேயறம் ஓங்கிட மீண்டுமிவ் வுலகில்,
அருட் குலத்தினை ஆக்கினன்; அதன்புக ழிசைப்பாம்.

தெய்வக் கற்பகஞ் செழுமலர் கொழுங்கனி தழைத்தே,
வைய கத்தினுக் களித்திடும் வகையினைப் போலே,
துய்ய நல்லருட் குலந்தருஞ் சுடர்பெறு மைந்தர்,
செய்ய வாழ்வினாற் செகத்தினிற் கினியன செய்தார்.

இனிய வாய்மையும், வீரமும், எழில்பெறுந் திருவும்,
முனிவர் போற்றிடு ஞானமு, முதற்குண வளமும்,
புனித வாழ்க்கையும், புலமையும், பொதுநலப் பணியும்,
மனித ராகிய தேவரின் மாண்பிவை யாமே !

புலனை வென்றவர் புவிமிசை அமரராய்ப் பொலிவார்;
நிலனை வென்றவர் நீதிநன் னிருபராய்த் திகழ்வார்;
இலனை வென்றவர், மனைதரும் இன்பமோங் குவர்; தன்
னலனை வென்றவர் பொதுநல நண்பராய் வாழ்வார்.

நாக ரிகத்தினிற் சிறந்தனர் நறுங்கலைச் செல்வர்;
வாகை யோங்கிய வலியதிண் புயத்தினர்; நாளும்
ஈகை யின்பமும், இறைதுலங் கிதயமும் படைத்தார்
பாகி ளந்தமிழ் போன்றனர் பண்பினா லவரே.

செங்கண் மாலுயிர் காத்திடச் சிறப்புடன் அயனும்,
அங்கண் மாநிலத் தாருயி ரணிகளை வகுக்க,
துங்க மாஞ்சக்தி சிவனருட் சுடரினில் வளர்ந்த
மங்க லத்திரு மரபினர் மாண்பினை யறிவாம்.

நிலவு ருண்டையைப் போலவே நிலையிலா அரசும்,
பலகு லம்பறித் தாண்டிடும் பாக்கியப் பணயம்,
வலியர் கைவழி வழிந்துசெல் வழக்குடை யாட்சி,
பொலியு மோர்புறம் புகழின்றிப் போகுமோர் புறமே.

வீர மோங்கிய செந்தமிழ் விரிநில வேந்தர்,
ஆரி யர்மதி யிரவியர், அங்கியர், சிங்கர்,
மோரியர் புத்தர் கிறித்துவர் முகம்மதி யர்கள்,
மார தர்முதல் மிகப்பலர் வழிவழி புரந்தார்.

சிங்க மோங்கிய நெஞ்சினர், செருபடைத் தலைவர்,
வங்க மோங்கிய வாணிகர், தொழில்வளத் தாலே
தங்க மோங்கிய தருகையர், தமிழ்க்கலை முழங்கும்
சங்க மோங்கிய **தென்னவர்** மன்னவர் தாமே.

தண்மையோங்கிய குடையினர்; தானையிற் சிறந்தார்;
வண்மையோங்கிய செல்வர்கள் **பொன்னிநல் வளவர்**,
திண்மை யோங்கிய புயத்தினர் **சேரநாட் டரசர்**;
உண்மை யோங்கிய புகழினுக் குடையவ ரிவரே.
அமரர் உய்ந்திட நஞ்சினை அமுதென நயந்தே,
எமனை யெற்றி, மன் மதனையும் எரித்தவன் அடியார்,
விமல மாலடி யார்—இவர் பாடிய வேதத்
தமர மோங்கிடத் தழைத்தது தவத்தமி ழுலகே.

கடவுள் உள்ளமும், கலைகளுங், கதைகளுங் கவியும்,
கடவு ளாடலைத் தாங்கிய கவின்பெருந் தலமும்,
கடவுட் காதலும், வீரமும், கற்புமோங் கியதாம்
கடவு ளாலய மாகிய கனிதமி ழகமே !

நஞ்சும் வேழமு நாத்திகக் கொடுமையுங் கொண்டே
அஞ்சு வெஞ்சினக் கனகன்செய் இடர்களை அஞ்சான்
தஞ்ச மென்றரி நாமமே தளர்வறப் புகன்றான்
பிஞ்சி ளம்**பிரக லாதனின்** பெருமையைப் புகல்வாம்.

வேத வேள்வியும், வரங்களும், வேந்தெனுஞ் செருக்கும்,
மாத ராசையால் இழந்தனன் மதியிலி யரக்கன்
பாத கத்தலை பத்தையும், ஒருகணை யாலே
தீத றக்கொய்த தீரனாம் **இராமனைப்** பணிவாம்.

யார்தம் அன்னைகை அரணியம் பணிவுடன் ஏற்றார்,
யார்த லைவனை அத்தனை அன்புறத் தொடர்ந்தார்,
யார்இ மைப்பறு பணியுடன் அண்ணலைக் காத்தார்,
யார்**இ ராமனும் சீதையும்**, **இளவலும்** அனையார்?

அண்ண லற்றமன் னரசினை அரசெனப் புரவான்
புண்ணியன் றிருப் பாதுகை பூமுடி யணிந்தான்;
மண்ணி னின்பத்தை மதித்திலன்; வாய்மையன் பினையே
கண்ணிற் போற்றிய **பரதனைக்** கருத்தினி லணிவாம்.

ஆசை மாக்கடல் கடந்தனன்; அச்சுதன் பணிக்கே
ஓசை மாக்கடல் கடந்தனன்; அரக்கரை யொறுக்கப்
பூசன் மாக்கடல் கடந்தனன்; பொருவரு வீரா
வேச மாக்கட லானவன் வெற்றி**மா ருதியே** !

ஊதினான் குழல் உயிர்களின் உளத்தினைக் கவர்ந்தான்;
கோதி லார்தமைக் காத்தனன்; கொடியரைக் குமைத்தான்;
ஆதி பாரத மாக்கினான்; அறம்வளர் **கண்ணன்**,
ஓதினான் அருட் **கீதையை** உலகமின் புறவே !
சூதி னாற்புவி கவர்ந்தனன்; சொற்கட வாத
கோதை நற்றுயில் உரிந்தனன் மதியிலாக் கொடியோன்;
பாத கத்துயர் அனைத்தையும் பரிவினாற் பொறுத்தார்—
மாத வன்பத மலர்தொழும் **பாண்டவர்** வாழ்க !

நல்ல றம்பொறை தாங்கிய **தருமனுக்** கிளையோன்,
கொல்ல றங்கிளர் கும்பலைக் குமைத்திடக் கண்ணன்
சொல்ல றத்துடன், சிவனருள் சுடர்க்கணை தாங்கும்
வில்ல றத்தினன், **விசயனின்** வீரத்தைப் புகழ்வாம்.

தணலும் கற்பினாற் **சானகி** யிலங்கையைச் சுட்டாள்;
குணமி லார்க்கெடத் **திரௌபதி** குறுநகை புரிந்தாள்;
அணங்கு **பார்வதி**, தவத்தினால் அரனுட னமர்ந்தாள்;
வணங்கு வோம்இவர் மலரடி 'சக்தி ஓம்' எனவே.

பேதைச்செல்வத்தைப் பிணியெனத்துறந்து, மெய்த்தவமார்
மேதைச் செல்வத்தை மேதினிக் கினிதுறத் தந்தான்,
போதிச் செல்வனாம் **புத்தனைச்**, சித்தனை, ஞானச்
சோதிச் செல்வனைத் தொழுமனந் தூயது வாமே....

பற்ற றுத்தவன் பத்தறம்* போற்றிய பகவன்,
முற்றும் அன்புரு வானவன், முக்குடை முதல்வன்,
குற்ற மற்றநற் குணநிதி, அதி**மகா வீரன்**
பொற்றி ருப்பதம் போற்றினார் புண்ணியம் புகழ்வாம்

புத்தர் பொன்மொழி புவியெலாம் பரவிட நின்றான்;
கத்தி யின்றிநற் கருணையால் உயிர்களைக் காத்தான்;
குப்த மூரியன் குலமணி, **அசோகனைப்** போலே
இத்த லத்தினிற் **சனகன்**பின் யாவரே யிருந்தார்?

புஷ்ய மித்திரன், சதகர்ணி, புகழ்பெறுங் கனிஷ்கன்,
விஷ்ணு வர்த்தனன், விக்கிர மாதித்தன், சிமுகன்,
ஹர்ஷன், ஆதித்தன், கிருட்டின தேவன், சுவர்ண

வர்ஷத் தாற்கவி வளர்த்தநம் போஜன்வா ழியவே !

"அன்பெ னும்சிவம், அன்பினால், அன்பருக் கறிவாம்;
இன்ப மேயது, தில்லையாம் இதயத்தில் வளரும்;
துன்பப் பற்றினைத் துடைத்தருட் சுடர்வழி சேர்மின் !"
என்பர் தூயசித் **தாந்தத்தின்** இணையறு பெரியார்.

உப்பும் அப்பும்போற் சிவத்துடன் ஒன்றிய தூயர்,
அப்பர் சம்பந்தர் சுந்தரர் வாதவூ ரடிகள்
ஒப்பு **மெய்கண்டார்**, மந்திரம் உரைத்தமா **மூலர்**,
செப்பு மின் இவர் திருப்பெயர் சென்மமுய்ந் திடவே !

வாய் மனங்கடந் தருள்வழி வாய்ந்திடும் பொருளே
தோய ருட்சுடர் **வள்ளலார்**, துறவி **பட்டினத்தார்**
தாயு மானமா முனிவர்தந் தமிழெலாம் அமிழ்தம் ;
தூய காதலோ டருந்துமின் பொருந்துமின் சுகமே !

"பக்தி செய்குமின் ! பதமலர் பற்றிவீ டடைமின் !
முத்தி யின்முதல் வன்ஹரி முகுந்த" னென் றோதும்
மத்து வர்**உடை யவர்நிமை**, மாதவ னன்பர்,
நித்த மும்நம துளமிசை நிலவுக மாதோ !

"சாதி யற்றது; சமரசச் சுடரது; தருக்க
வாத மற்றது; மோனத்தில் வளரும்சுத் தான்மா
போத மானது; பொருளது நீ" யெனப் புகலும்
ஆதி சங்கரர் அறிவினால் ஐக்கியம் அடைவோம்.

மிக்க வுள்ளன்போ 'டிறைவனை மேவுமின்' என்ற
சொக்கத் தூயனாம் **ஜராதுஷ் டிரன்**; சிலு வையிலே
திக்கெ லாந்தொழுந் தியாகத்தீ யெனவளர் **கிறிஸ்து;**
மக்க மாநகர் **மகம்மது** வாழிய மாதோ !

தீர ராகிய **நானகன், கோவிந்த சிங்கன்,**
வீர **ராமதாஸ்** விரும்புசி **வாஜி, ராம் மோஹன்,**
ஆரி யர்க்குயி ரான **தயானந்தன்**, ஞான
வாரி யாம்குரு **பரமஹம் ஸன்**புகழ் வாழ்க !

இனைய வீரரும் இறைவரும் பகவரும் இலகும்
புனிதமாம் அருட் குலத்தினில் இறுதியாய்ப் பூத்தான்—
தனையொவ் வாத்திரு மிகுந்தவன் **சத்தியன்** என்போன்
இனிய வன்வள நாட்டினை இசைத்திடு வோமால்.

4. பாரத புண்ணிய பூமிப் படலம்

வீரரின் அன்னை, ஞான விளக்கொளி பரவு கின்ற
பாரினுக் கன்னை, பொன்செய் பசுவளத் திருவின் ஓங்கும்
சீரினுக் கன்னை, செங்கோற் செழிப்பினுக் கன்னை, யோக
பூரணர்க் கன்னை, எங்கள் **புண்ணிய பூமி** வாழ்க !
வரையெலா முனிவர் கூட்டம்; வனமெலாங் குருகுலங்கள்
திரையெலாம் கப்பலோட்டம்; திசையெலாம் திருவின் காட்சி:
கரையெலாம் செல்வக் குப்பை; கவின்மலர், கனிகு லுங்குந்
தரையெலாம் அமுத வாரி தழைத்துயிர் வளர்க்கு நாடே !

வெய்யிலு மழையுங் காற்றும் விரும்பிய வளமை நல்கச்
செய்யவள் உலாவுஞ் சோலை; செழுமலர்த் தேனை யுண்டு
மையரி யினங்கள் ஊத, மருதயாழ் முழங்கக் கண்ணன்
கைவளர் முரளி பாடக் கலைநடம் புரியு நாடே !

இருதொடர் கடலோ ரத்தில் இலகுகன் னியை வணங்கப்
பருவதப் படிக ளேறிப் பனிவரை வீற்றி ருந்தே,
குருசிவ சக்தி யிந்தக் குவலயக் கோயி லெங்கும்
அருளர சாட்சி செய்யும் அரியணை போன்ற நாடே !

வரநதி க்ருஷ்ணகோதா வரிபொன்னி பெண்ணை வைகை
வருணிகி ழக்கே; மேற்கே வளந்தரும் சிந்து தப்தி,
நருமதை வளர்க்கும் பச்சை நல்வளத் திருவி னோங்கும்
மருதயாழ் கேட்டுக் கோக்கள் மடிசொரிந்துலாவுமன்றே!

ஆறணி வெளிகள்; செங்கால் அன்னங்கள் ஆடும் பொய்கை;
சோறணி பழனம், தெய்வச் சுடரணி திருத்த லங்கள்;
வீறணி பிரம சாரி விரிகலை பயிலுஞ் சாலை;
பாரணிக் கழகு செய்து பயனுற விளங்கு நாடே !

தத்தை, சிச்சிலி, குயில்கள், சாதகம், கருடன், பூவை,
முத்தமிழ் பயிலும் ஓசை; மோகனக் குழலும் யாழும்
மத்தளந் தழுவும் ஓசை; மங்களக் கருவி யோசை;
வித்தகர் அருட்பா ஓசை விண்ணுறப் பண்செய் நாடே !

ஓங்குறு தொழில்க ளோசை, ஓவெனும் கடைக ளோசை,
ஆங்குறு வணிகர் செல்வம் அளந்துபை கட்டும் ஓசை
நீங்கறு வண்மை யாளர் நீடிசை நீளும் ஓசை;
பாங்குறு விழாக்க ளோசை பரவைபோல் ஒலிக்கு நாடே !

பொன்னெலார் வயல்கள் ஓங்கிப் பூந்திருப் பொழில்கள் ஓங்கித்
தென்னை, மா, பனசம், வாழை, செங்கரும் போங்கி யெங்கும்
கன்னலுந் தேனும், பாலுங் கனிரச வளமு மோங்கி
அன்னம்பா லிக்கு நாட்டின் அழகெலாம் அமுத வூற்றே !

வேதமும் வாழ்வும் ஒன்றும்; வீரமும் அறமும் ஒன்றும்;
காதலும் கற்பும் ஒன்றும்; கண்ணுடன் கருணை யொன்றும்;
போதமும் குணமும் ஒன்றும்; புதுமையும் பண்டும் ஒன்றும்;
நீதியும் அருளும் ஒன்றும் நெறியினிற் பெரிய நாடே !

ஊகமுங் கலையுங் கல்வி யொழுக்கமும், பரமானந்தத்
தாகமுந் தவமும், வீரத் தணலுற முயலும் வெற்றி
வேகமு முடைய தீரர், விரிநில முதவு கின்ற
போகமுந் துய்ப்பர்; யோகப் பொருளையும் பொருந்திவாழ்வார்

புலன்களில் அடக்க மிக்கார்; புந்தியில் அமைதி மிக்கார்,
உளங்களில் அன்பு மிக்கார்; உயிர்க்கெலாம் அருளே மிக்கார்
வளங்களில் வண்மை மிக்கார்; வாழ்க்கையில் அழகு மிக்கார்;
நலங்களில் இறைவ னுக்கே நன்றிசெய் தொண்டர்தாமே

ஈதலில் இன்பங்கண்டார்; இன்பத்திற் கடவுள் கண்டார்;
மாதரில் அன்னை கண்டார்; மண்ணிடை விண்ணைக் கண்டார்
காதலிற் கலையைக் கண்டார்; கலையினில் வாழ்வைக் கண்டார்
சாதலும் பிறப்பு மில்லாத் தம்மையே கண்டார் மாதோ !

வெண்மதி, மரைகள் பூத்து, வீங்கிரு கனிக ளேந்தி,
ஒண்கொடி மின்ன லேறி, மயிலென உலாய தன்னார்;
மண்ணில மோங்க வந்த மங்கலத் திருவின் மாதர்
கண்ணொளிர் தெய்வக்கற்பின் கனலினைவணங்கு வோமால்.

மலைதரு வளங்க ளீவார்; மருதநல் வளங்கள் ஏற்பார்;
அலைதரு வளங்க ளீவார்; அரியகான் வளங்க ளேற்பார்;
கலைதரு வளங்க ளீவார், காசினிப் புகழை யேற்பார்;
நிலைதரு ஞான மொன்றி நிகரென வாழுந் தூயர்.

உரிமையைப் பறிப்போ ரில்லை; உரிமையை யிழப்போ ரில்லை
சிறுமைக ளிழைப்போ ரில்லை; சீர்மையைத் துறப்போ ரில்லை

வறுமையை யழைப்போரில்லை; தொழிலினை மறப்போரில்லை
திறமைசால் அறிவும் வீறுந் திருவுட னோங்கு நாடே.

இரப்பவர்இல்லை. 'இல்லை' என்பவ ரில்லை; உள்ளங்
கரப்பவ ரில்லை; பேதங் காண்பவ ரில்லை; அன்பைத்
துறப்பவ ரில்லை. வஞ்சர் தொல்லையும் இல்லை. தன்னை
மறப்பவ ரில்லை. உண்மை மறுப்பவ ரில்லை மாதோ !

தருமத்தால் வெற்றி; யோக சாதன மாகச் செய்யுங்
கருமத்தால் வெற்றி; செஞ்சொற் கவிகளால் வெற்றி; ஆன்ம
வொருமையால் வெற்றி அன்பின் உள்ளத்தால் வெற்றிதெய்வப்
பெருமையால் வெற்றி யோங்கிப் பிறங்கிய திந்த நாடே !

வீரரின் உயிரே, ஆன்ம வெற்றியின் விளக்கே, இந்தப்
பாரினுக் கெல்லா ஞானப் பரிதியே, சுருதித் தாயே !
தீரர்கள் போற்றி செய்யத் தேவர்கள் வாழ்த் தெடுக்கப்
பூரண யோகசக்தி யாகநீ பொலிக மாதோ !
காசினிக் கெல்லாந் தெய்வக் கதிரொளிக் கனலை நன்று
வீசிநீ வாழ்க, மண்ணில் விண்ணர சிலகச் செய்வாய்.
மாசிலாத் தேவ மாந்தர் மரபினைப் பெற்ற தாயே,
ஆசிதா வுனது சீர்த்தி யணிகவி பொலிய நன்றே !

5. சித்தி நகரப் படலம்

அத்தகை நாட்டுடை அரசன், அன்பர்கோன்,
சத்தியன் விளங்கிய தரும பீடமாம்,
சித்திமா நகரணிச் சிறப்பைப் பாடிட
முத்தமிழ் வாணியை முன்னு வாமரோ !

மண்டல மடந்தையின் மதிமு கங்கொலோ?
விண்டலத் தேவர்கள் விளங்கும் வீடிதோ?
பண்டொடு புதுமையும் பயிலுந் தாயகம்
தெண்டிரை முரசதிர் சித்தி மாநகர் !

பூமகள் வாசமோ? புகழின் வாகையோ?
நாமகள் வீணையோ? நாட்டின் உள்ளமோ !
பாமணம், பூமணம் பருகுந் தென்றலில்
ஓமொளிக் கொடிவளர்ந் தோங்கு மாநகர்.

கவினெலாந் திரண்டிதன் காட்சி யானதோ?
தவமெலாந் திரண்டிதன் தரும மானதோ?
சிவமெலாந் திரண்டிதன் சீவ னானதோ?
புவியெலாந் திரண்டிதன் புகழைப் போற்றுமால் !

புனல்வளம், பயிர்வளம், பொங்கு பூவளம்,
இனமணித் திரள்வளம், இலகு பொன்வளம்,
மனைவளம், மாசறு மைந்த ரின்வளம்,
வினைவளங் கலைவளம் விளங்கு மாநகர்.

சுந்தர மலர்வனஞ் சொரியுந் தேன்மழை,
சிந்துரக் கனிவளஞ் செழிக்கப் பாயுமால்;
அந்தரம் வியப்பவோர் அமுதப் பச்சைவான்
பந்தலிட் டிந்நகர் பரவு மாங்கொலோ?

அம்புவி தனைவளர் அன்னை போலவே,
பம்புநல் அருவிகள் பயிர்வ ளர்த்திடும்
நம்புமெய் யடியவர் நாளும் ஓங்கவே,
சம்புவின் அருளெனத் தழைக்கும் வான்மழை!
நதியொலி, புள்ளொலி, நல்ல பாட்டொலி,

கதிமிகு தொழிலொலி, கல்வி நல்கொலி,
விதியையும் வென்றிடும் வீரர் பாயொலி,
மதிமிகு கலையொலி மல்கு மெங்குமே.

ஐந்தினை ஆளுவர் அந்தண் வீரர்கள்;
ஐந்திணை யாளுவர் ஆண்மை வீரர்கள்;
ஐந்தறங் காப்பரில் லறத்தின் வீரர்கள்;
ஐந்தொழி லாளியின் அன்பு வீரரே !

அறமெனும் பூமியில் அன்பை நாட்டுவார்;
உரமெனப் பொருளின்பம் ஊற்றிப் போற்றுவார்;
குறைவறும் அருண்மலர் குலுங்க முத்திசேர்
நிறைகனி யுண்டவர் நீடு வாழ்வரே !

உண்டியிற் றூயவர், ஊனைக் கள்ளினைக்
கண்டிலர், கனவிலும் காமத் தாற்பிறர்
பெண்டிரை நயந்திலர், பெரிய நோக்கங்கள்
கொண்டவர் வண்டெனக் கூடி வாழுவார்.

அறந்தரும் இன்பமே யின்ப மானவர்;
திறம்பல படைத்தவர் தெய்வங் கைதரப்
பிறர்துயர் துடைத்திடப் பிரியங் கொள்ளுவார்.
பிறர்நலந் தமதெனப் பேணும் பெட்பினார்.

திண்ணிய தோளினர்; சித்தம் வென்றவர்;
புண்ணிய வினையினர்; புன்மை யற்றவர்;
மண்ணியல் வாழ்விலு மகிழ்வர்; சாதனம்
பண்ணிய யோகத்தின் பயனு மெய்துவார்.

நித்தியங் கல்வியும், ஆன்ம நேயமும்,
பத்தியுங், காதலும், பணிவும் போற்றுவார்,
சத்தியின் கனலெனத் தருமந் தாங்குவார்;
பத்தினிப் பெண்டிரின் பண்பைப் போற்றுவோம் !

சேயிழைக் கிம்மியும் சிறுமை நேர்ந்திடின்,
ஆயிரம் வாட்கரம் ஆர்த் தெழுந்திடும்.
நாயகர் சக்தியை நாற்பங் காக்கிடும்,
தூயவர் கற்பினைத் தொழுது போற்றுவாம் !

மற்புய வீரரின், மன்னர் நீதியின்,
சொற்பொழி புலவரின், சூழ மைச்சரின்,
பொற்புறு செல்வரின் புனித மாதரார்,
கற்பெழில் அந்நிலக் காவ லாவதே.
தீரரை அமைத்திடுந் தெய்வச் சிற்பிகள்,
வீரரை யாக்கிடும் வீறு கொண்டவர்,
காரினும் கதிரினுங் கருணை மிக்கவர்
பாரிலே தவவொளி பரவும் அந்தணர்.

மஞ்சணை மணிக்கொடி யாடு மாளிகை,
கொஞ்சிளம் பூவையர் கோட்டி யாழுடன்,
அஞ்சலில் வீரரின் அதிச யக்கதை
பிஞ்சிளம் பிள்ளைகள் பேசப் பேசுவார்.

கார்வரை பொடிபடுங் கனத்த தோளினர்;
தேர், பரி, கரிசமர் தேர்ந்த சூரர்கள்,
மார்புடைத் தெண்டிசை அதிர மற்செய்வார்;
'யார்நிகர் இவர்க்' கெனப் பகைவர் அஞ்சவே !

வேளையும் வடிவினில் வென்ற நல்லிளங்
காளையர், கருத்துற நோக்குங் காதலால்

வாளையங் கண்ணினர் மனதை நல்குவார்;
கோளையு நாளையுங் குறிப்பர் யாவரே?

கந்தனும், வள்ளியும் போன்ற காதலர்,
சந்தமும் பொருளும்போற் சார்ந்து வாழுவார்.
இந்திர போகமும், இறைவன் யோகமும்
வந்திவர் வாழ்வினில் வளர்வ தாகுமே.

சுந்தர மாளிகை, சுடர்பொன் முத்தணி
அந்தமில் விருந்தணி, யாவுங் கண்டிங்கே
இந்திரன் உலகமும் இலச்சை கொண்டன்றே
அந்தரத் திரையிடை அவிழ்த்த தேகொலோ?

கொடைகளு மணங்களுங் கொட்டு மேளமும்,
படைகளின் கதிகளும், பவனிக் காட்சியும்,
அடலரி **வீரரின்** அணிவி ழாக்களும்,
நடைகளுங் கலைகளு நல்வி ருந்தரோ !

அருந்தவ நிலையங்கள், அறஞ்செய் சாலைகள்
பெருங்கலை நிலையங்கள் பெண்டிர் சங்கங்கள்,
மருந்தளி நிலையங்கள், மணஞ்செய் மாடங்கள்,
விருந்தளி நிலையங்கள் விளங்கு மெங்குமே !
பயிர்வளம், பசுவளம், பண்ட மாற்றுடன்
உயிர்வளம் பெருகிட வுழைக்கும் வாணிகர்,
இயல்வளம் செயல்வளம் ஏற்றிக் கப்பலில்
அயர்வறக் கடல்கடந் தம்பொன் செய்வரே !

சிலம்பணி யிசைத்திடத் திருந டஞ்செயும்.
பொலங்கொளப் பொன்மணி கிண்கி ணென்றிடும்.
நலங்கெழு சரக்கினம் நாகம் ஊர்ந்திடும்.
கலங்கெழு கடலெனக் கனைக்கும் ஆவணம்.

மன்னுயிர்க் குயிர்தரும் பயிர் வளங்களைப்
பொன்னினும் போற்றுவர், புவியை ஊட்டுவார்;
மன்னவர் மதித்திட மாண்புற் றோங்கினார்
இன்னிய **உழவரின்** ஏரைப் போற்றுவாம் !

சாத்திரக் கூச்சலும் சமயச் சண்டையும்
ஆத்திர வாதமும் அணுகிடாமலே
பூத்திரள் தேனெனச் சுவை பொருந்திடும்
ஆத்தும நேயநல் லன்ப ராயினார்.

விலகறு மெய்வழி விரும்பிச் செல்லுவார்
'வில'கென யாரையும் வெம்மை செய்திடார்
உலகுயர் ஆலயம்; உயிரின் கூட்டமே
இலகுயர் கடவுளென் றிதயத் தெண்ணுவார்.

இனியநல் லிசையினில் எழுத்தின் கூட்டம்போல்,
தனிவினை தாங்கியும் சங்க மாகவே
மனிதர்கள் வாழ்ந்தனர். பலா மரத்திலே
கனிவளர் பான்மையைக் கண்டுள் ளொன்றியே.

கண்ணிலத் தாய்அருட் கைகள் அன்னவர்,
எண்ணறு தொழிலினர், இதயம் ஒன்றுளார்.
புண்ணியர், கண்ணியர், புலவர், பூரணர்
திண்ணியர் ஆத்தும தீர ராவரே.

பழரசந் தேனுடன் கலந்த பான்மையோ !
குழலுடன் வீணையும் குலவும் இன்பமோ !

அழகிளம் பெண்மையும், அறிவின் ஆண்மையும்
பழகிடும் பண்பினைப் பகர லாகுமோ ?

மண்ணக மிலையிது விண்ணை மானுமால்;
விண்ணிலை விண்ணையும் வென்ற வாழ்க்கையால்.
புண்ணிய நதியணி பொன்னின் மாநகர்
கண்ணெனக் காத்தவன் அரசைக் காண்பமால்.

6. சத்தியன் அரசியற் படலம்

ஆதி மன்னர் அமர்ந்த அரியணை
சோதி சுந்தரி யிந்திரை தன்னுடன்
பாதி தாங்கிடப் பாருயிர் தன்னதாய்
நீதி தாங்கி நிலவினன் சத்தியன்.

செங்கதிர் முகத்தான்; ஞானத் தீக்கனல் விழியான்; கோடி
சிங்கத்தை வென்ற வீரத் திண்ணிய புயத்தான்; ஈகை
தங்குநீள் கரத்தான்; சாலத் தயைமிகும் உளத்தான்; வெற்றி
பொங்குயர் புகழான்; மக்கள் போற்றிடு மன்னன் மாதோ !

அன்பரி யணையாய், ஓங்கும் அறமதே செங்கோ லாக,
மன்பதை யுள்ளம் போற்று மாட்சியே மகுட மாக
நண்பருட் குடையாய், நாட்டு நன்மையே நாட்ட மாகப்
பண்புடன் அரசு செய்தான் பழுதிலா வாய்மை யானோன்.

பொறையிலே **தருமன்**; வீரப் போரிலே **விசயன்**; ஞான
நிறைவிலே **சனகன்**; செய்ய நெறியில் **அசோகன்**; ஆட்சி
முறையிலே **பொற்கை**; நல்ல முயற்சியில் **வளவன்** அன்னான்
இறைமைசேர்திறமை தன்னில் **இந்திரன்** போன்றான் மாதோ!

கல்வியிற் பெரியான்; பொங்குங்கருணையில் வானைப்போன்றான்;
செல்வியின் இருக்கை யாவான்; சீர்த்தியில் இராமன் போன்றான்
அல்லலிற் கைகொ டுக்கும் அன்பினில் அன்னை போன்றான்
பல்லுயிர் உலகம் வாழ விளங்கிடும் பரிதி யன்னான் !

குடிகளிற் குடியே யாவான் கோக்களிற் கோவே யாவான்;
அடியவர்க் கடியா னாவான்; அற்றவர்க் கரும்பொன்னாவான்
கொடியவர் கால னாவான்; குவலயத் தோழ னாவான்;
முடிவிலா வுயிரின் உள்ளம், உளத்துடிப் பானான் மாதோ !

அன்னவன் காதல் அன்னம், அமுதவாய்க் குமுதச் செங்கண்,
மின்னிடை, அருணச் சோதி மிளிர் தரும், அழகுத் தெய்வம்,
மன்னறத் துணைவி, நல்ல மனையறத் துணைவி, 'எங்கள்
அன்னை' யென் றுலகம் போற்றும் அருங்குணச் செல்விமாதோ!

பாலுடன் தேன்க லந்த பான்மையர், வாய்மை யாளர்
நாலுடன் ஐந்தும் போற்றி, நல்லன செய்தார்; அன்னோர்,
வேலுடன் வெல்லும் வெற்றி யதனினும், விரும்பி அன்புக்
கோலுடன் கொண்ட வெற்றி குடிகளுக் கினிய தன்றே.
கற்றறி புலவர், காலங் கணக்கிடங் கருவி, செய்கை
முற்றறிந் தொற்ற றிந்து முடிபுரை சூழ்ச்சி யாளர்,
விற்றறி யார்தம் வாழ்வை, வீணுரை யறிகி லாதார்,
சுற்றுல கியல்ப றிந்து தொண்டுசெய் யமைச்சர் மாதோ !

வடுவறு காட்சி யாளர், மனத்தினைக் கரவார், நல்ல
விடுதலை வீரர், நாளும் பொதுநல விரதம் பூண்டார்,
கெடுதலைச் செய்யார், யாரும் கீழென நினையார்; உண்மை
நடுநிலை யாளர்; வேந்து நம்பிய தொண்டர் மாதோ !

முந்தர சேத்தும் ஆசான் **பாரத முனிவ** னாவான்.
மந்திரத் தலைவன் வாய்மை வடிவெனும் **சித்தி மான**ாம்
வெந்திறற் சேனை முற்றும் **விஜயனே** நடத்தி வென்றான்.
தந்தனன் **சுமதி** கல்வி. **சதுரனு**ந் தொழில் வளர்த்தான்.

வங்கர், கோசலர், பாஞ்சாலர், மாரதர், அரச புத்ரர்,
அங்கர், கூர்ச் சரர், கலிங்கர், ஆந்திரர், தமிழர், சேரர்,
சிங்கர், கன் னடர், நேப் பாளர், சிந்தியர், சோனர், சீனர்,
தங்கிடத் தனது நீழல் சத்தியன் அரசு செய்தான்.

பலகிளை யாறு பாய்ந்து பயிர்களை வளர்ப்பதே போல்,
உலகுயிர் வளர்க்கும் அன்னோன் ஓங்கிய செங்கோ லாட்சி.
இலகிடும் இரவி தன்னிற் கதிர்க்கணம் இணைந்த தொப்ப
நிலமொழி யாளர் நீதி நிருபனைப் பொருந்தி வாழ்ந்தார்.

ஒன்னலர், கள்வர், மாக்கள் ஒருதுயர் இழைத்தி டாமல்,
இன்னிய பரிச னத்தார் இதமுடன் பணிகள் செய்ய,
தன்னுயிர் பெருக்கி, மாந்தர்தம்முயிர்க் குயிராய் வைத்து,
மன்னனுந் தொண்ட னாக மன்னுயிர்ப் பணிகள் செய்தான்.

பூவினுக் கமுத மீயப் புயல்அலை முகப்ப தேபோல்,
தேவையி னளவு செல்வர் திறைகளை யேற்றுப் போற்றிக்
காவலும், சுகமும், சீரும், கல்வியும், தொழிலும் ஓங்க
மேவுயிர் உடலைப் போலே வேந்தனும் வேந்து செய்தான். 60

கற்றவர் சொல்லைக் கேட்டுக் கடன்முறை செய்யு மன்னன்,
ஒற்றரால் அறிந்துந் தானே உருக்கரந் தேகிக் கண்டும்,
குற்றமுங் குணமுந் தேர்ந்தே குறைகளை யுடனே போக்கி
உற்றவர்க் குதவி செய்தான் உலகினுக் கினிய னானான்.
குருகுலக் குமரர் கல்வி, கொற்றமெய் வீரர் வீரம்,
திருவுடை அந்தணாளர் செம்மை, நன் மாதர் கற்பு,
பெருகுவே ளாளர் சேமம், வணிகரின் செல்வம் ஓங்கத்
தருமமே பொருள் கொடுக்கத் தழைத்தது மன்னன் செங்கோல்

ஆவியும், உடலும், உள்ளும், அறம், பொருள், இன்பமாகத்
தேவியல் வாழ்வை நோக்கிச் செழித்திடும் சமுதா யத்தைக்
கோவியல் வழுவா தாண்ட கொற்றவன் கதையைச் சொல்ல
நாவினி லிருந்து வாணி நல்குக கவிதை வெள்ளம். 72

7. தியானக் காட்சிப் படலம்

தேவி சக்தியின் அருளினாற் சிந்தையி லுதித்து,
நாவி லோடிய நற்கவி வெள்ளம்போற் செழித்த,
காவி லோடிய வோடையிற் கனிநகை புரிந்தான்
பூவி லாருயிர் வளர்த்திடும் புண்ணியக் கதிரோன் !

ஞால சுந்தரி நாண்மல ரணியுடன் பொலிந்தாள்
கோல மாதவன் குழலெனக் கொஞ்சிட வசந்தம்,
காலை பூத்தது; கமலங்கள் பூத்தன; மன்னன்
வேலை பூத்தது; விழித்தது வினையுடல் வாழ்வே !

புனித மாதவர் உளமெனத் தெளிபுன லாடி,
இனிய புத்தணி யணிந்துநல் லியற்கையின் வனப்பில்,
பனிம லர்நகும் பசுங்குடி லமர்ந்துநங் கோமான்
களிம னங்கசிந் துருகிடக் கடவுளை நினைத்தான்:

"வான கத்தில் வளர்ந்திடுஞ் சோதி நீ!
தேன ளாவு மலரிற் சிரிப்பு நீ,
நானென் றுள்ள நடுமழை மின்னென
மோன மாக நடஞ்செயு மூர்த்தியே !"

"மலைய ருவிவ ளர்வதுன் மாமறை;
கலைய ருவிவ ளர்வதுன் கற்பனை;
அலையி லாடுவ துன்பர மானந்தம்;
தலைவ னேயருள் பாலிக்குந் தந்தையே !"

"உலக மெல்லாம் ஒருகுல மாகவே
கலக மின்றி யுனைக்கலந் தோங்குக !
நலிக தீவினை; நல்லன யாவுமே
பொலிக வுன்னருள் போற்றி, இறைவனே !"
இன்னவா றிறைஞ் சும்புவி வேந்தனை,
மன்ன ரசி வணங்கிட மங்கலப்
புன்ன கைபொலி யப்புனி தத்திரு
மின்ன மின்ன மிளிர்ந்து நெருங்கினாள்.

மயில்க ளாடின; மாங்கனி வாயிளங்
குயில்கள் பாடின; கொஞ்சின கிள்ளைகள்.
பயிலும் பூவைகள் பாய்ந்தன; பச்சிளம்
வெயிலு கந்து விலங்கினந் துள்ளின.

அன்னக் கூட்டம் அணிநடை கற்றுற,
வன்ன மானினம் வாட்கண் வியந்திட,
பொன்வண் டுதிடப் பூமுகங் கண்டதும்,
மென்கை தொட்டதும் பன்மலர் மேவிட.

கொடிக ளோடிக் குளிர்பசும் பந்தலில்,
அடிகள் வைத்தனள் அன்புடன் இந்திரை;
"படியை யாளும் பராசக்தி யன்னையின்
வடிவமே"யென மன்னவன் போற்றினான்.

அருமை யாகும் உயிரதி னின்னிய
வுரிமை நாதனை யொண்சுடர்க் கற்பினாள்,
ஒருமை யன்புடன் போற்றி யுளமிசை,
திருவ டியில் அருச்சனை செய்தனள்.

காதல் வாழ்விற் கடவுளைக் கண்டிடும்,
ஓத ரியவுயர் தவ யோகத்தின்
சாத கர்சிவ சக்தியென் றோரணை
மீத மர்ந்து தியானத்தின் மேவினார்.

பத்தி யோங்கிடப் பார்வையுள் ளோங்கிடச்
சித்த மூன்றித் தியானம் நிலைத்திடச்
சுத்த சக்திச் சுடரை வணங்கினார்
நித்த நித்த நினைத்தது கூடவே.

இதய மொன்றினர்; இன்னுயிர் ஒன்றினர்;
மதியு மொன்றினர் உச்சி மரைமிசை,
பதியை யொன்றினர் பாய்கடல் வெள்ளத்தை
நதிக ளொன்றிய நன்மையைப் போலவே.

அந்த வேளை யிறைவனிவ் வன்பரின்
சிந்தை யாகுந் திருக்குறிப் பீந்தனன்;
இந்தி ரையுள் இலங்குமக் காட்சியை
முந்து வேந்து முகத்தினிற் கண்டனன்.

மங்கலக் காட்சி

“என்னுயிர்க்கமுதே, கற்பின் எழில்பெறும் அழகே, இன்றுன்
பொன்முகம் பூரிக் கின்ற பொருளுரை!” யென்ன வேந்தன்
“மன்னவா ! மனத்தி னுள்ளே மங்கலக் காட்சி கண்டேன்;
உன்னரும் உவகை யாலே யுதித்ததப் பூரிப்” பென்றாள்.

“பங்கய முகமும், அன்பு பாய்ந்தொளிர் மனமும் பூத்த
மங்கலக் காட்சி யென்ன வென்” னென வினவ மன்னன்,
செங்கதிர் முகத்தை நோக்கித் தேன்மொழி தேர்ந்து, நெஞ்சிற்
பொங்கிய மகிழ்வின் ஊற்று வாய்வழி பொழியச் சொன்னாள்:

“நானெனும் உணர் வொடுங்கி, நாதமும் ஒடுங்கி, யாழ்ந்த
மோனத்தி லெனுட் புகுந்த முச்சுடர்ப் பொலிவென்சொல்வேன்
ஞானத்தி னெல்லை கண்டேன், ஞாலத்தி லெங்கு மின்ப
வானத்தின் அரசைக் கண்டேன்;மகிழ்வினுக்கெல்லை காணேன்!

“பொம்மென வுலக மெல்லாம் போரிருள் படரக் கண்டேன்!
வெம்மன வரக்கர் கூட்டம் வீறிட்டுப் பொருதக் கண்டேன்;
செம்மையாந் தருமத் தாயின் சிந்தனை முகத்தைக் கண்டேன்;
‘அம்ம’வென் றஞ்சி நின்றேன். அகன்றதக் கொடிய காட்சி !

“மலர்தலைக் காலை சாந்த மகிழ்வுறக் கதிர்கள் வீசிப்
புலர்சுட ரொன்று கண்டேன்; புதுயுகம் பிறக்கக் கண்டேன்.
பலர்தவம் புரிந்த நல்ல பயனிதென் றுளத்திற் கொண்டேன்
உலகைக்கண் விழித்துக்கண்டேன், உம்முகத்துவகை கண்டேன்.

“ஈதென தருமைக் காட்சி” யென்னுமுன், மன்ன னாங்கே,
காதலின் கனியைக் கண்டேன்; கடவுளின் கருணைகண்டேன்;
பூதலம் வாழக் கண்டேன்; புதல்வனை யினிது கண்டேன்;
ஆதலி னருளால் இன்றென் அகக்குறை யகன்ற” தென்றான்.

“மாசிலா மணியே, சித்தி மரபினை வாழ வைத்த
தேசுலாங் கொடியே, கற்புத் தெய்வமே, திருவே, வாடா
வாசநாண் மலரே, யுன்றன் மங்கலக் காட்சி யாலே
காசினிக் கமுத மாகுங் கனியொன்று பழுத்த” தென்றான். *88*

8. முனியுரைப் படலம்

(காட்சிப்பயனை பாரத முனிவர் விளக்குகிறார்)

இமயமுஞ் சிறிய தென்றே யேறிடப் புயங்கள் விம்மிக்
கமலக்கண் ணிரண்டு மின்பக் கதிர்களால் விரிய, உள்ளம்
விமலனை யெண்ணி யெண்ணி வியந்திடும் அந்த வேளை,
சமதம சித்தி பெற்ற **தவமுனி** வரனும் வந்தான்.
மலையின் மாண்பினன், மடங்கலின் மொய்ம்பினன்; ஆன்மக்
கலையின் ஆழியான்; ஞானமாக் கனல்விரி கண்ணான்;
நிலவு செங்கதிர் மேனியான்; நீளுயர் மின்னல்
உலவு கின்றதை யொத்தனன், உத்தம முனிவன்.

சிறக டித்தன; தீங்குர லார்த்தன; மீது
நறும லர்களை யுதிர்த்தன நளிர்வனப் புட்கள்.
உறுக வென்றன கன்றுகள் உயர்வுறத் துள்ளி,
நிறைத வத்தினர் உயிர்க்கெலா நேயரே யன்றோ !

அருமுனி வரவு கண்டாங் கரசனும் அரசி யாரும்
வருகவென் றுவகை கூறி, மணித்தவி சிருத்தி, வாசத்
திருமலர் தூவிப் போற்றிச் சேவடி பணிந்து நின்றார்;
***குருமுனி** மனங்கு ளிர்ந்து நன்மொழி கூறி னானால்;*

"ஆன்றநல் லறமுஞ் சீரும் அருளொடு பொருளு மோங்கி,
வான்றகு புகழ் சிறக்க, வையகம் புரந்து வாழ்வீர்!
கோன்றகு முறைசெய் யுங்கள் குலமுட னுலகும் வாழத்
தோன்றலைப் பெறுவீர் இன்பத் தூயனின் கருணை யாலே!"

"எனைத்தும் உன் அருளால்" என்றே இந்திரை கண்ட காட்சி
அனைத்தையும்அரசன் சொல்லி அதன்பொருள்இயம்பக்கேட்டான்
இனித்தமென் முறுவல் பூத்து, மனங்குவிந் திருந்து சற்றே,
தனித்தவக்கொழுந்திவ் வாறு சாற்றினான் சாந்த மாக:—

"நல்லதுந் தீயதும் நட்பும் வெம்பகைத்
தொல்லையும் தொடர்ந்துறுந் தொல்பெ ரும்புவி;
அல்லல்செய் தானவர் அமரத் தன்மையைக்
கொல்படை கொண்டினிக் கொடுமை செய்வரால்."

வீரியச் செருக்கினால் வெய்ய செய்திடும்
போரியல் அரக்கராம் பொய் யிருள்கெடச்
சூரியன் போலருட் சோதி மைந்தனுன்
பேரியற் குலத்தினிற் பிறங்கு வானரோ!

மாற்றுவன் பழையன; மற்று நூதனந்
தோற்றுவன்; புதுயுகந் துலக்கி யாளுவான்;
வேற்றுமைச் சமர்களை வேரொ டெற்றுவான்;
போற்றுவன் புண்ணிய பூமி யின்புகழ் !
"இதுபொரு ளிந்திரை காட்சிக் கா" மெனப்
பொதுமறை முனிவரன் புகலக் கேட்டதும்,
புதுமகிழ் வெய்தினர்; போற்றி செய்தனர்;
முதுமுனி பதமலர் வணங்கி முன்னின்றார்.

"முனிவனே போற்றி, ஜீவன் முத்தனே, யுலகிற் கெல்லாம்
இனியனே போற்றி, யெங்கள் இறைவனே போற்றி" யென்று
பனிமலர் சொரிந்து பாதம் பணிந்தவுள் ளன்ப ருக்குப்
புனிதநல் லாசி கூறிப் போயினன் புரையி லாதான்.

என்னுடை மரபும் இந்த வுலகமும் இனிது வாழப்
பொன்னொளிர் புனித மைந்தன் பொலிவனென் றுவகை பூத்து
மன்னவன் அறங்கள் செய்தான்; மகிழ்ந்தனர் குடிகளெல்லாம்.
தன்னிக ரற்றோன் வந்த கதையினிச் சாற்று வோமால்.

9. சுத்த ஜனனப் படலம்

(சுத்தன் பிறத்தல், உலகம் மகிழ்ந்து பொலிதல்)

இலங்கு செய்யவள் போன்றநல் லிந்திரை,
விளங்கு வெண்கலை வாணியை யொத்தனள்
பளிங்குக் கூட்டிற் பகலவன் போலொளி
துலங்கு சேயைச் சுமந்த திருவினால்.

மூன்று காலமு முற்ற வுணர்ந்தனள்;
ஆன்ற வேதப் பொருளறிந் தோதினாள்—
சான்ற மாதவர் சாற்றிடும் பூரணத்
தோன்றல் வந்து துலங்கிய மாண்பினால்.

மூல சக்தியின் முத்து முகமெனக்
காலை வாணகை காட்டி யெழுந்தது.
சோலை மாருதஞ் சோதி யுதயத்தை
ஞால மெங்கு நவின்றதந் நாளிலே.

முழவும், பாடலும், வீரர் முரசமும்,
குழலும் வீணையுங் கொஞ்சிளஞ் சேய்களின்
மழலையும் சுப மங்கல வேதமும்,
எழுமி னென்றிசை பொங்கின எங்குமே.

பூக்கள் ளுண்டு புலம்பின வண்டினம்;
பாக்க ளுண்டு பறந்தன புள்ளினம்;
கோக்கள் பொங்குங் குடமுலை கொட்டின;
மாக்க ளெல்லாம் புதுமகிழ் வெய்தின.
பத்தி ஞானம் பரிவரு ளீகையால்
ஒத்தி யல்பினில் ஒன்றினர் மாந்தர்கள்;
சத்திய யுகம் வந்ததென் றாத்துமச்
சித்தர் செப்பினர் சேம வுரைகளே.

வெற்பி னூற்றிற் படிந்திள வேனிலின்
பொற்ப ணிந்த புதுமலர் கொய்துடன்,
கற்ப ரசி கணவனைக் கண்டுபின்
இற்பு குந்ததும் இன்பமொன் றெய்தினாள்.

பொன்னின் காலையிற் பூத்த பரிதிபோல்,
உன்னு முள்ளத் தொளிர்தவத் தீயைப்போல்,
அன்னை தாங்கும் அருட்சுடர்ச் சோதியான்,
மின்ன லென்ன மிளிர்ந்து பிறந்தனன்.

பாடி னார்திருப் பாவையர் பாசுரம்;
ஆடி னார்பர மானந்தங் கொண்டவர்;
ஓடினார்உரைத் தார்அர சன்வரக்
கூடினார்; சுப வேளைகொண் டாடினார்.

விரைந்துதன் குலமொளிர் விளக்கை வேந்தனுங்
கரந்தனி லேந்தினான்; களிசி றந்தனன்,
சிரந்தனை மோந்தனன்; செல்வ முத்திட்டான்;
கரந்தனைக் கொஞ்சினன்; காதல் விம்மினான்.

"பொங்குக பூவினிற் புனித னாட்சியே;
மங்குக தீவினை, மறைக வெம்பகை;
தங்குக சத்திய தரும" மென்றுவான்
மங்கல துந்துமி வழங்கிற் றெங்குமே.

வசையறு வரதனும் வந்த வாசகம்
திசைதிசை பரவலுஞ் செய்ய நல்லவர்
விசைபெற வந்தனர், வேந்தைக் கண்டனர்
இசைகளைப் பொழிந்தனர் இறைவன் வாழ்கெனா.

மலர்விழி, மலர்முகம் மலர்ந்த புன்னகை,
மலர்க்கரம் மலர்ப்பதம் மலரின் மேனியால்
இலகிடும் புனிதனை இனிய **மாமுனி**
உலகள வுவகையி னுவந்து போற்றினான்.
"கண்ணினில் அறிவொளி கனலும் கண்ணனை,
எண்ணரு மாதவர் ஏத்துந் தீரனை,
மண்ணக வாழ்வினில் வாய்க்கப் பெற்றவர்
புண்ணியம் புண்ணிய" மென்று போற்றினான்.

ஓடினர், உரைத்தனர்; உரைத்த யாவர்க்கும்
சூடினர் மாலைகள்; சுகந்தம் பூசினார்;
கூடினர்; அரியநன் கொடைக ளீந்தனர்;

நாடிய பொருளிங்கு நயந்த தென்றனர்.

பாலொடு, நெய்தயிர், பாய சங்களும்,
கூலமுங் கனிகளுங் கொம்புத் தேன்களும்,
ஏலுநர் ஈபவர் இருவர் கைகளுஞ்
சாலவுந் தழைத்திடத் தருமஞ் செய்தனர்.

கேட்டவர் கேட்டவர் கிளர்ச்சி கொண்டு, தம்
வீட்டிலே மகக்கனி விளைந்த தென்னவே
காட்டின ரானந்தக் கண்ண ருவியே
பாட்டுடன் அணிபெறப் பவனி வந்தனர்.

"மங்கல மாகுக வாழ்க மாநிலம்
பொங்குக தொழில் வளம்! புலமை யோங்குக!
மங்குக தீவினை என்ன மன்னவன்
எங்கு நல்லறவினை இனிது செய்தனன்.

10. சுத்த நாமப் படலம்

செய்கடன் செய்முறை செய்து மன்னனுந்
துய்யநற் பெயரினைச் சூட்ட வேண்டியே,
பொய்யறு புலவர்கள் பொருந்தும் ஆலயம்
தெய்வநற் சந்நிதி திகழ நின்றனன்.

பொன்னிடை யரதனம் பூத்த தென்னவே,
அன்னைகை விளங்கிடும் அமுதச் சேயினை,
உன்னத முனிவரும், உலகு போற்றிடும்
மன்னரும், வீரரும் வாழ்த்தி நின்றனர்.

இம்பரும் உம்பரும் இனிது வாழவே
அம்பல நடஞ்செயும் அருளி றைவனை
என்புநெக் குருகிடும் இதயக் காதலால்,
அன்பர்நன் மலர்சொரிந் தடிப ணிந்தனர்.
"வானெனப் புவியென, வடிவு கொண்டுலாம்
ஊனென, வுயிரென, வுயிரு ளேவளர்
நானென நடுநிலை நின்ற சாட்சியே,
தானென நிலவிடுந் தனி முதல்வனே !"

"ஊட்டியும், உறக்கியும், உலக நாடகம்
ஆட்டியும், பிறவியின் அனலிற் பொன்னென
வாட்டியும், உயிரினை மாச றுத்தொளி
காட்டியும் அருளுவை கருணை வள்ளலே !"

"உனதரு ளிச்சையே உலகக் கோயிலில்
இனிதுற வுயிர்க்கெலாம் இன்ப மோங்கவே,
எனதருஞ் சேயினை யேற்றுப் போற்" றெனப்
பனிமலர் தூவினன் பாரின் **மன்னனே**.

கருத்திலுங் கண்ணிலுங் களிது லங்கிடத்
திருத்தகு சேயினைச் செங்கை யேந்தியே,
நிருத்தங்க ளாடிடு நிமலன் பாதத்தில்
இருத்தினன் **முனிவரன்** இசைமு ழங்கவே.

"அயர்வறு தவக்கனல் அருளும் யோகியே,
உயர்குல விளக்கினுக் குவந்த சீர்பெறும்
பெயரினை யிதுவெனப் பேசி யாள்" கென

வியனுறு முனிவனை **வேந்து** நோக்கினான்.

"சித்தியின் மரபொளி, திருவி னோங்கிடும்
சத்தியன்-இந்திரை தந்த நல்லொளி,
அத்தனின் அருளொளி, ஆத்மச் சோதிபோல்,
'சுத்த' னென் றுலகெலாம் துலங்கி வாழ்கவே."

"சுத்தமே கடவுளின் சொரூபம்; ஆத்தும
சுத்தமே கடவுளைத் துலக்குஞ் சக்தியாம்
சுத்தமே சுகமெனச் சொல்வர்; ஆதலால்
சுத்தனென் றரசிளஞ் சோதி வாழ்கவே"

எல்லையில் அருந்தவன் ஈதி யம்பலும்,
பல்லிய முழங்கின, பரந்த தீம்புகை;
மல்லிகை சண்பக மாரி பெய்தன;
நல்லிசை முழங்கின ஞால மெங்குமே !
மன்னவன் மகிழ்வுற மக்கள் யாவரும்,
"தன்னிக ரற்றதோர் தருமக் காவலா,
உன்குல மொன்றல; வுலகில் வாழ்ந்திடும்
இன்னுயிர்க் கின்பமே இவ" னென் றோதினார்.

"வானர சாட்சியிம் மாநி லம்பெறும்;
ஈனவெவ் விருட்பகை யின்மை யாகிடும்;
ஞானநல் லொளிதரு ஞாயிறே யிவன்
மானவர்க் குய்வுறு மாதவன் என்றார்.

வாழிய சத்தியன் ! வாழி யிந்திரை !
வாழிய வையகம் வாழ வந்தசேய் !
வீழிய தானவர்; விளங்கு நல்லருள்
சூழிய வுலகெலாம் சுத்த மங்களம் !

நாளொடு கோளையு நன்கு பார்த்தவர்,
"வாளொடு வென்றவர் வெற்றி வெற்றியோ?
தாளொடு மூறிடுந் தவத்தின் சக்தியால்
ஆளுவன் உலகெலாம் அமரச் சே" யென்றார்.

"பொன்னினும் அரியது புதனென் றோதுவார்;
மின்னிய மீன்களில் மூலம் மேலென்பார்
கன்னிகை மேலென்பார் கணித்த ராசியில்
இன்னவன் பிறவியின் ஏற்ற மென்சொல்வோம் !"

"ஆவணி மூலத்தில் அவத ரித்தவன்
பூவணி யாகவே பொலிவன்; புண்ணியர்
நாவணி யெனத்திரு நாம மோதுவார்;
பாவணி புலவர்கள் இவனைப் பாடுவார்."

பெரியவர் இனையவை பேசக் கேட்டலும்,
அரியபே ரின்பம்வந் தடைந்த தாமென்றே,
வரையறப் பொன்மழை வழங்கித் தானங்கள்
புரிந்தனன் உலகினைப் புரக்குந் தந்தையே.

கவிதையுங் கல்வியுங் கலையும் வீரமும்,
நவையறு தொழில்களு நாளு மோங்கவே,
அவரவர்க் கேற்றவை யள்ளி யீந்தனன்
தவம்பெறு மைந்தனைத் தந்த தந்தையே.

11. குழந்தைப் படலம்

கண்ணே, மணியே, கனகக் கிளியே, கனியே, செம்
பொன்னே, புகழின் பொலிவே, புனிதத் தவமீன்ற
விண்ணே, யமுதின் விளைவே, யழகே, யிசையாழின்
பண்ணே, யருளின் பயனே, வியனே, பகவானே !

சத்திக் கனியே, சாந்தக் கனியே தவமோங்கும்
சித்திக் கனியே, செல்வக் கனியே, செகசீவன்
முத்திக் கனியே, முருகார் திருவே, ஒருமுத்தம் !
சுத்தக் கனியே, சோதிக் கனியே, சுகவாழ்வே !

இன்னன தீஞ்சொல் ஏந்தி யிளஞ்சேய் இனிதான
புன்னகை பொங்கும் போதுள மெல்லாம் புளகிக்கும்:
அன்னை 'கை வீசம் மா' வென வீசும் அழகாக;
தன்னிணை யில்லா இன்பம் வளர்சேய் தருமின்பம் !

அம்புலி கூவும்; அம்மையப் பாவென் றழகாகப்
பம்பி நடக்கும்; பைங்கிளி போலத் தமிழ்பேசும்;
பொன்பொலி காலை பூத்து வசந்தம் அசைபூவின்
கொம்பொடு கொஞ்சும்; கன்றுகள் பின்னே குதித்தோடும்.

பன்மணி மாலை மின்னொளி பாயப் பரியாடும்;
கிண்கிணி கொஞ்சப் பந்தை யுருட்டும்; கிளர்புள்ளின்
பண்க ளிசைக்கும்; பச்சை மயில்போல் நடமாடும்;
கண்மணி நோக்கிக் 'கண்ணனிதோ பார்' எனப்பொங்கும்.

செங்கதிர் காணப் பொங்கி நகைத்துச் செயவென்னும்;
திங்களை யன்புத் தீங்கனி யென்னுந் திசையெட்டுந்
தங்க வியற்கைத் தாயெழில் காணும்; தனி நின்றே
"எங்குமென் அன்னை எங்குமென் அப்பன்" எனஓதும்.

இந்திரை சொல்லும் இன்கதை கேட்கும்; இருகையால்
மந்திர மென்னா மத்தை யலைக்கும்; மறுராமச்
சந்திரன் என்னா வில்லை வளைக்கும்; சகசாம
சுந்தர னென்னாப் பூங்குழ லூதுந் துவர்வாயால்.

பூமியை நீவும்; பூங்குடி லாக்கும்; பொதுவான
சாமியை நாட்டும்; தண்மலர் தூவும்; சிவசக்தி
ஓமென வோதும்; உற்ற துணைவர் மகிழ்வெய்தத்
தேமது ரச்செஞ் சொற்கதை சொல்லுந் திருவோங்கும்!
தேரணி யாக்கித் தோழரோ டாடுந் திருநாளால்
ஊரணி யாக்கும், கொட்டு முழக்கும், உலகாளுந்
தோரணை காட்டும்; துட்ட ரடங்க நலமெல்லாம்
பூரண மாகப் போற்று மிளஞ்சேய் புகழோங்க !

வீரன் இருந்தான், வீரன் எழுந்தான், கரம்வீசி
வீரன் விரைந்தான், வீரன் மொழிந்தான், விறலோங்கும்
வீரன் வளர்ந்தான், வீரன் உயர்ந்தான்; இனியெய்தும்
வீரன் பொலிந்தான் வீரமணிச்சேய் விளையாட்டில்.

பாரினுக் காருயிர் போன்றநம் பாலனைச்
சீரிளஞ் செல்வனைச் செஞ்சுடர் வண்ணனை,
நேரினிற் கண்டவர் நெஞ்சமின் புற்றனர்
காரினைப் பைம்பயிர் கண்டதைப் போலவே.

“முத்து தா, மொஞ்சியுண், மோகனக் கண்ணனே,
சித்தனே, சித்தியின் செல்வனே, செம்மலே,
எத்தனை இன்ப”மென் றேந்திழை மாதரார்
மெத்தெனக் கொஞ்சுவார் மென்முலை விம்மவே.

புண்ணியப் போதனைப் போற்றிடாப் போதெலாம்
விண்ணவர் வாழுறா வெற்றுநா ளென்பரால்;
கண்மணிப் பிள்ளையைக் காதலாற் கண்டவன்
எண்ணமே யாயினார் இந்நிலத் தோரெலாம்.

மூன்றுகா லந்தனை முற்றவுங் கற்றநல்
ஆன்றவர் போற்றிடும் அற்புதச் சுத்தனை
வான்றருஞ் சோதியை வையகத் தாருயிர்
போன்றுநே சித்துளம் பொங்கினர்... விந்தையென்?

அணிகளைச் சூட்டுவார்; அன்புபா ராட்டுவார்,
பணிகளைக் காட்டுவார்; ‘பார்புகழ் வீரமா
மணிகளைப் போல நீ வாழ்’ கெனப் பேசுவார்;
துணிவருள் சூரனைச் சுத்தனிற் காணுவார்.

அரியசெஞ் சொல்லுடன் ஆடலும் பாடலும்,
உரியநற் செய்கையும் ஓங்குயர் தன்மையும்,
பெரியனைப் பேசிடும் பிள்ளையுங் கற்றிடத்
தெரிவுயர் குருகுலஞ் சேர்ந்ததைச் செப்புவாம்.

12. குருகுலப் படலம்

அளந்தநல் ஆயுளும், அறமும், ஆற்றலும்,
தெளிந்தநல் லறிவுடன் சீர்பெற் றோங்கவும்,
உளந்தனைப் பயிற்றவும், உயிரைப் போற்றவும்
இளந்திரு வயதினிற் கல்வி யீதலே.

உன்னதப் புலமையோ டுதித்த தெய்வச்சேய்
துன்னறி வொளியினைத் தூண்டி, வேண்டிய
மன்னறம் பயின்றிட வாய்மை வேந்தனுந்
தன்னிக ரற்றமெய்த் தவனை நோக்கினான்.

“கற்பது கற்றுநின் றறத்தைக் காத்திடப்
பொற்புறு குருகுலம் பொருந்தி வாழ்” கென்றே
அற்புத மைந்தனை யளிக்க, மாதவன்
“கற்பகங் கனி” கெனக் களிப்போ டேற்றனன்.

“செழுந்தவச் செல்வனே தீர னாகிநீ,
எழுஞ்சுடர் வனப்புடன் இலகு ஞானமும்,
பொழிந்திடு வானெனப் புகழும், ஈகையும்,
தழைந்தினி தோங்” கெனத் தாய்மொ ழிந்தனள்.

“அறிவுடன் ஆண்மையும், அருளும் இன்பமும்,
அறம்பொருட் செழிப்புடன், ஆத்ம ஞானமும்,
பொறிபுல னடக்கமும், புனித வாழ்க்கையும்
திறமுடன் பெறுகநீ, தெய்வ மைந்தனே !”

“குருவர னேமுது குரவர் போன்றவன்;
குருமனை யேயினிக் கொற்ற மாளிகை;
குருவடி யேநலங் கொடுக்குங் கற்பகம்

குருவருள் பெறுகநங் குலம் விளங்கவே !"

"உத்தமக் குருவடி யுள்ளங் கொண்டு நீ
பத்தியும் பணிகளும் பரிந்து போற்றியே,
வித்தக னாகியென் குலவி ளக்கென
நித்திய மோங்குக நிமலச் செல்வனே !"

"கண்ணெனுங் கல்வியைக் காத்து மாணவர்,
உண்ணலும் உறங்கலும் உடை யணிதலும்,
எண்ணலும் இயற்றலும் இயம்பல் யாவினும்,
உண்மையும் தூய்மையும் ஒளிர வாழ்வரே !"
"சீரிய முனிவரன் செய்யு நன்மையால்,
வீரமும் சக்தியும், வேந்தர்க் காகிய
காரிய வெற்றியும் கல்வி கேள்வியும்
பூரண வாழ்க்கையும் பொலிக, செல்வனே !"

இன்னன விளம்பித் தாதை இனிதுற மகனை நோக்கச்
சென்னியிற் கரங் குவித்துச் சேவடி தொழுது மைந்தன்,
"சொன்னநன் மதியைப் போற்றித் துகளறக் கல்வி கற்றுப்
பன்னிரண்டாண்டென் ஆசான்பணித்திறம்பயில்வ"னென்றான்

"தருதிர்நல் லாசி" யென்று தாள்பணி சேயைப் பெற்றோர்
"வரதநீ வாழ்க" வென்று வளர்த்தகை யால் அணைத்தே,
குருபர னிடங் கொடுத்தார்; குணநிதி முனிவ னாங்கே
"பெருகு மானந்த" மென்னப் பிள்ளையை நடத்திச் சென்றான்.

வாத்தியம் பலமுழங்க, வாழ்த்துக்கள் ஒலிக்க, வேத
சாத்திரம் பலமுழங்க, தமிழ்மறை முழங்கத் தெய்வத்
தீத்திகழ் முனிவன் கோயில் சிறப்புறச் சென்றெல் லாரும்
பூத்தருள் பொலிக ! வென்று புதல்வனை விடுத்து வந்தார்.

அன்புந் தெய்வமும், அருளுடன் அழகணி யறிவும்
நன்புங் கொண்டொளிர் நவையறு குருகுல மதனில்
இன்ப மாகுநல் இயற்கையின் மடிமிசை வளர்ந்தான்
மன்ப தைகளைக் காத்திட மங்கலப் புதல்வன்.

திருந்து செந்தமிழ், ஆரியம், ஆங்கிலம், இந்தி
பெருந் தொகையினர் பேசிடும் பிறசில மொழிகள்,
வருந்திக் கற்றனன்; வாணியின் வரம்பெறு புலவர்
விருந்தெனப் புகழ் வியன்கவிக் கலையிலுந் தேர்ந்தான்.

வேந்தர்க் காகிடும் வீரமும் போருடன் பொருளும்,
சாந்தர்க் காகிடும் யோகமுந் தருமமும் தவமும்,
தேர்ந்த நீதிசெய் முறைமையுந் திருவுறப் பயின்றான்—
வாய்ந்த சுத்தசன் மார்க்கத்தின் வாய்மையே யானோன்.

கவியுங் கானமும் கணக்குடன் அறிவுநூல் வகையும்,
புவியில் அற்புதம் புரிந்திடும் பொறிகளின் அமைப்பும்,
செவியுங் கண்களுஞ் சிந்தையுந் திருந்திடக் கற்றான்
தவமுங் கல்வியுந் தந்தநன் முனிவரன் அருளால்.
வையம் ஓங்கிட வந்தவன் வளர்பிறை போலே
தெய்வ ஞானமும் உலகியல் அறிவுடன் சிறக்க,
துய்ய சாதன வாழ்க்கையுஞ் சுருதியும் அளித்த
செய்ய மாதவன் சேவையே சேவையிற் சிறப்பாம்.

ஓங்கு மாமலை ஓமெனும் அருவியும், அன்னம்
தூங்கு தாமரை வாவியும், தோகையுங் குயிலும்
நீங்கு றாப்பசுஞ் சோலையும், நீலவான் பொலிவும்,
ஊங்கு யர்கலை தூண்டின வுத்தம னுளத்தே.

சோதி மாதவன் சுடர்பெறும் அறிவினைத் தூண்ட,
நீதி மந்திரி யினிவரு நிருபனை யமைக்க,
ஆதி சக்தியின் அருளொளி யாகிய மைந்தன்,
மேதினிக் கொரு வரமணி விளக்கென மிளிர்ந்தான்.

அன்பர் வாழ்த்தி "யிவ் வதிசய மைந்தனா லுலகம்
இன்ப மாகு" மென் றிசைத்தனர்; இன்னொரு புறத்தில்
வன்பகை செய்யும் வலியவன் ஒருவனும் எழுந்தான்;
துன்பமே வடி வாமவன் சூழ்ச்சியை யறிவாம்.

13. பொறாமைப் படலம்

நன்மையுந் தீமையு நட்புஞ் சண்டையும்,
புன்மையும் பெருமையும், புகழும் வீழ்ச்சியும்,
இன்மையும் உண்மையும் இருவ கைமனத்
தன்மையின் பரிசெனச் சாற்று வாமரோ !

நல்லது நினைத்திடின் நன்மை யாகிடும்;
அல்லது நினைத்திடின் அல்ல லாகிடும்;
இல்லதும் உள்ளதும், இம்மை யம்மையும்,
செல்வதும் வருவதும் சிந்தைச் செய்கையே.

பழிப்பறு புகழ்பெறும் பரத நாட்டிலே,
செழிப்புறு சித்தியின் சீர்த்தி யாவையும்
அழிப்பனென் றெழுந்தனன் அகந்தை கொண்டொரு
முழுப்பதர் **கலியனாம் மோகி** கேள்வனே.

விடந்தரு நோயென, வேந்தன் சத்தியன்
உடன்பிறந் தானவ னுடன்பொ றாமையும்
இடர்செயுந் தீமையும் இகலும் வெம்மையும்
படர்ந்தன புதருடன் பாம்பு மென்னவே.
வாளெனப் பாய்வது; வஞ்சந் தீர்த்திட
நீளெரி புகுந்தென நெஞ்சில் வேவது;
கோளினா லுயிர்ப்பது; கொடுமை செய்துபின்,
ஆளினை யுண்பது **பொறாமை** யாகுமே.

திசைதொறும் அண்ணலின் சீர்த்தி கேட்டுளம்
பிசைதுயர் கொண்டவன், பிள்ளை சுத்தனின்
இசையினைக் கேட்டதும் எரி மிகுந்தனன்;
விசையினில் இவர்களை வீழ்த்த வெண்ணினான்.

வலிகொளும் சித்தியின் மரபைக் கண்டதும்,
கிலிகொளு நெஞ்சினான், கேடு சூழவே
புலிகொளும் புதரெனப் பொல்லர் வாழ்ந்திடும்
கலிநகர் கண்டனன் காலன் அஞ்சவே.

இந்திர சாலங்கள் இருட்பொய் வித்தைகள்,
மந்திர மாயங்கள் மாறு பாடுசெய்
தந்திரச் சூதெலாந் தரும நீதியைத்
தொந்தரை செய்தன; துணிந்து வீழ்ந்தவே.

இணைகரும் பூனையின் எரி விழிகளும்,
பணியுடன் காகமும், பச்சை யோந்தியும்
பிணங்களின் மூளையும் பெண்க ருக்களும்,
புணைகரு மைசெயப் புகுந்துந் தோற்றனன்.

"கருவினைக் கலைத்திடக் கருவினை செய்தேன்
உருவினைக் குலைத்திட, வுளத்தை மாற்றிடப்
பெருநிணப் பேய்களை ஏவினே னந்த
ஒருவனைச் சிறுவனை உம்ப ரேற்றவே."

"ஆளத்தான் உலகினை அண்ண லுக்குப்பின்
நீளத்தான் கருதிய நெஞ்சம் புண்ணுற்றேன்;
மூலத்தான் வந்தனன், மூன்று லோகமும்
வாழத்தான் வாழ்ந்தனன்; வயிறு வேகுமே !"

"தேனெனப் பேசிய தீய சூனியர்,
ஊன்மது வுண்டவன் உயிரை யுண்கிலார்;
யானினி யென்செய்வேன், அடவிப் பேய்க்குலம்
ஏனெனை யேளனம் செய்த ! வஞ்சமே !"
புயலெழு மனத்தினான் புன்வ லைப்படுங்
கயலெனத் துடித்ததைக் கண்டு, நீள்விழி
மயலெழ வீசித்தன் மாய வித்தையாற்
செயம்பெறு மோகியும் சிரித்து வந்தனள்.

கொஞ்சுமென் மொழிசொலிக் குமுதக் கைகளால்,
துஞ்சறு விழிகளைத் துடைத்து நோக்கிடும்,
அஞ்சன விழியளை யணைத்துத் தன்மனம்
சஞ்சலக் கலியனுஞ் சாற்றி னான்கொலோ.

"அரியணை யிருந்துநான் சித்தி யாண்டிடும்
உரிமையை யிழந்தனன் ஒருவன் வந்ததால்;
பெரியசிந் தனையெலாம் பேச வாயிலேன்......!
பரிந்தெனக் கிதமொழி பகர வல்லையோ?"

மோகி

நோயுறு கலியிவை நுவல, மோகியும்
"ஓயுக கவலைகள்; உலகை வென்றிடப்
பாயுறும் அரக்கரின் படையைத் தூண்டுவேன் ;
ஏயெனு முன்னுன திச்சை யா" மென்றாள்.

"ஏனினி யோசனை ; யெவனை யஞ்சினை
யானவன் அழியவென் அண்ணல் மாவலி
சேனையைத் தூண்டிடச் செல்கின்றே னின்றே
தானவத் தீ" வெனச் சபதஞ் சாற்றினாள்.

"கவலையும் ஒழிந்தது ; கனவு மெய்த்தது ;
புவனமுங் கிடைத்ததுன் பொன்சொ லால் ; இனி
எவருமென் னிகரிலை " என்று விம்மினான்
அவஞ் செயும் தீயருக் கரசனாயினான்.

"வருகுது சித்தியை வீழ்த்தும் வன்படை !
பெருகுதுன் புக" ழெனப் பெரிய பாதகி,
வெருவுறு மரக்கரை விளைத்த தானவம்
இருமுழு மதியுடன் ஏகி னாள்கொலோ.

நகையினை யுதட்டிலு, நஞ்சை நெஞ்சிலும்,
பகையினைச் செயலிலும், பரிவை நாவிலும்,

வகையுறக் கலியனும் வைத்து நாட்டிலே
மிகையுறு பிரிவினை விரைவிற் செய்தனன்.
பதரெனும் பதகனின் பழியி னால்விளை
அதர்மங்க ளனைத்தையும் அறியு முன்னரே,
கதிர்மணி போல்வளர் கடவுட் சுத்தனின்
புதியநல் வாழ்வினைப் புகலு வாமரோ.

14. புறப்பாட்டுப் படலம்

மூன்று காலமு முற்றறி சித்தன்பால்,
ஆன்ற ஞானம் அனைத்தையுங் கற்றபின்
சான்ற வர்சொலச் சத்திய சுத்தனும்
தோன்று லகை யறிந்திடத் துன்னினான்.

ஏட்டிலேயிசை யெத்தனை கற்கினும்,
பாட்டி லாதவர், பண்செய் கருவியில்
மீட்டிலாதவர் வித்துவ ராவரோ?
ஆட்டி லாதவர் ஆடுந ராவரோ?

சுற்று ணர்ந்திரு தோற்ற வுலகினை
முற்று ணர்ந்ததன் முக்குண நாடகம்
இற்றெ னத்தெளிந் தார் இயல் பாகவே
கற் றுணர்ந்த கலைக்கட லாவரே.

ஆத லால் "என் அரசிளஞ் செல்வனும்
ஓத லால்வரு ஞானம் உரம்பெற
நீதி யாட்சி நிலவுநன் னாடெலாம்
போத" லென்று புகன்றனன் சத்தியன்.

"புத்தி மான், புவி யாளுங் கலையினில்
எத்தி சையும் இசைபெற்ற மந்திரி
சித்தி மானுடன் செல்வகை செல்" லெனச்
சத்தி யனுந் தனயனை யேவினான்.

அன்ன செய்தி யறிந்து மகிழ்ந்துடன்
முன்னர் தூது விடுத்து மகிபரும்,
மன்னர் மன்னனின் மன்னிளஞ் செல்வனை
இன்ன நாள்வர வேற்பமென் றோதினார்.

பூக்குங் காலைப் புதுமலர் தூவியே,
காக்கும் அன்புக் கடவுளை யேத்தியே
வாக்கு மிக்க வரமுனி வாழ்த்துகள்
ஊக்க வுள்ள முவந்தனன் கோமகன்.
ஆனை, தேர்,கு திரையணி சேரவே,
சேனை வீரர் "செயசெய" வென்னவே,
வானை யெட்டக் கொடிகள் வளரவே,
மோனை முத்தமிழ் போன்முர சார்த்தவே.

படையின் மின்னலும் பார்விழி மின்னலும்,
உடையின் மின்னலும், ஊர்தியின் மின்னலும்,
குடைசெய் வானங் குலாவிடு மின்னென
நடையின் மின்னலு நல்லணி மின்னலே.

முக மலர்களு, முல்லை விரிந்தென
நகை மலர்களு, நற்கரந் தூவுபல்
வகை மலர்களும் வானத்து நாண்மலர்,
தொகை மிகுத்திங்கு தோன்றுவ போன்றவே.

மார் நெருங்கின; மார்பணி நன்மணி
தார் நெருங்கின; தண்மலர்க் கூந்தலாங்
கார் நெருங்கின; காலு நெருங்கின;
ஊர் நெருங்கின ஓருட லாகவே.

பாண்டி லோசையும், பாவலர் பாடும்பல்
லாண்டி னோசையும், ஆசிக ளோசையும்,
தூண்டு மாமதி தோன்றக் கடல்மிசை
நீண்ட வோசையைப் போல நிகழ்ந்தவே.

கிரணம்வீசிக் கிளர்ந்தெழும் சூரியன்
அருணத் தேரில் அமர்ந்தது போலவே,
திருவ ணிந்தபொற் றேர்மிசை ஏறியே
கருணை மாமுகங் காட்டினன் கண்ணனே.

விழிகண் டார்அருள் விண்ணொளி கண்டனர்;
பொழிமு றுவலைக் கண்டவர் பொன்கண்டார்;
செழிமு கத்தைக்கண் டார்திரு வேகண்டார்
அழகை முற்றும் அளந்தவர் யாவரே ;

பொது விழியினாற் புண்ணியர் எங்குமே
அதுவென் றேயுணர் ஆதிப் பிரமத்தை,
மத விழியர் மதிப்பது போலவே,
"இதுவி துவழ" கென்றனர் மாந்தரே.
கந்தன், கோகுலக் கண்ண னிவனென்றார்,
இந்தி ரனும் இணையிலை யென்றனர்,
சிந்தை யெப்படி யப்படிச் சித்திரம்
தந்த தந்தத் திருவுருத் தன்மையே.

உடைநெ கிழ்தலும், உள்ளம் வெதும்பலும்,
கடையர் காமக் குறிகளும் இன்றியே,
நடையு யர்சுத்த ஞாயிறைக் கண்டவர்
மடமை நீங்கி மதிப்பொலி வெய்தினார்.

ஆசை மாமல ராமெனக் கண்டவர்
பூசை மாமல ரேபொலி யக்கண்டார்.
வேசை நெஞ்சும் விலைமயக் கற்றது;
தேசை வீசிடுந் தெய்விகக் காட்சியால்.

"சென்ற தேசங்க ளில்வர வேற்றிடும்
வென்றி வேந்தர் புதல்வியர் யாரிவன்
மன்றல் மாலை யணிந்து மகிழ்வரோ!"
என்று மட்டும் இயம்பினர் மாதரே.

நோக்கும் ஒற்றர்முன் னோக்கிட, நுண்ணறி
வாக்கு வல்ல புலவர் உடன்வரக்
காக்கும் வீரக் கனற்படை சூழத்தேர்
ஊக்க மாகமுன் ஊர்ந்தது காலம்போல்.

புதனும் பூரணச் சந்திர னும்என
மதிய மைச்சுடன் மன்மக னுஞ்செலும்
பதிக ளைப்பலர் பேசினர்; நாமுமக்
கதியைப் பின்பற்றிக் காண்பன காண்பமால்!

15. யாத்திரைப் படலம்

கொட்டுவார் முரசினங் குதிகடலைப் போலவே,
எட்டுத் திக்கும் வெற்றிவெற்றி யென்றிசை முழங்கவே,
திட்டமாகச் சிற்றரசர் தேர்கரி பரியுடன்,
வட்டவெண் குடைநிழற்ற வாழிபாடி வந்தனர்.

“வருகமன்னர் கோமகன், வருகசித்தி மந்திரி,
வருகசக்தி மாமரபின் வான்சுடர் மணியெனாஅ,
உருகுகாத லோடுமன் னுயிர்களுள்ளம் பொங்கியே
பெருகுமன்பு டன்வரும், பிரானைமுன்சென் றேற்றனர்.
மண்ணில்வான மீனினம் வயங்குகின்ற வாறுபோல்,
எண்ணிலா மணித்திரள், இருள்பருகி வில்லிட,
விண்ணுலாங் கதிர்க்கொடி பிடித்தவேந்தன் மைந்தனைப்
பண்ணுலாஞ் சிறப்புடன் பவனிசெய்து பார்த்தனர்.

மாடமாளி கைமிசை, மணிக்கொடிகள் ‘வா’ வெனும்
ஏடவிழ் இனமலர் இடைவிடாது கொட்டிடும்,
கூடச்சாள ரத்திலே கொழுமதிகள் பூத்திடும்,
தேடரிய செல்வனுந் தெருவில்வந்த போதிலே.

நாடினார் குமுதவாய் நகைகுலுங்கு மாதரார்;
கூடினார் மயிலெனக் குயிலெனக் குழலெனப்
பாடினார் பல்லாண்டுகள், பரதநூன் முறைப்படி
ஆடினார் அணியிழை யரம்பையும் வியக்கவே.

தோரணக் கலையெலாந் துலங்குகின்ற வாயிலில்,
வாரணங்கள், வாத்தியங்கள் வாழ்த்த ஓமொலியுடன்,
பூரணக் கலசமேந்திப் பூவையர்முன் செல்லவே,
ஆரணங்க ளோதிச்செல்வர் ஆண்டகையை யேற்றனர்.

“ஞானஞாயி றேயருள் நடம்புரியும் ஆழியே,
வானமுதம் போலுயிர்க்கு வாழ்வளிக்கும் வள்ளலே,
தீனர்செல்வ மே !” யெனத் திருவுடைய மன்னவர்,
கோனருள் குமரனைத்தங் கோயிலுட்கொண் டேகினார்.

அரியணையில் ஏற்றினார், அரசியற் சிறப்பெலாம்
வரிசையாகக் கூறினார் ; வழங்கினார் பரிசுகள்.
விரிகடல் பருகத்தாழும் வெண்முகிலைப் போலவே,
வரதனும் பணிந்துவாங்கி மன்னுயிர்க் குதவினான்.

தேனும்பாலுந் தீஞ்சுவைக் கனிகளும் பலவகை
யானநல் லடிசிலும், அமுதனார் அளித்தனர்,
தீனர், செல்வர் யாவரும் செறிந்துடன் அருந்திடத்
தானுமவ் விருந்தருந்தி னான்சம ரசச்சுடர்.

இளங்கதிர் முகத்தனை, யிருமலர் விழியனை,
உளங்கவர் குணத்தனை, உயர்வரைப் புயத்தனைக்
களங்கமற்ற கல்வியிற் கரையிலாக் கடலனை,
விளங்கருட் புலவனை விளம்புவா யினிக்குமே.
காணுங்கண்கள் இன்னுமின்னுங் கண்டுகண் டுவக்கவே,
ஆணும்பெண்மை வேட்குநல் லழகனை நினைத்ததும்,
பூணிலங்குங் கொங்கைமாதர் பொங்குகாதல் வெள்ளத்தால்,

நாணவேலி போக்கினார், நவில்வதென்ன விந்தையே?

கொண்டைநாண் மலர்சொரியக் கொங்கைவிம்மிப் போர்செயத்
தொண்டை வாய்க் கிளியனார் துடியிடை துவளவே,
தண்டையஞ் சிலம்பொலிக்கத் தாவிவந்து சுத்தனைக்
கண்டது மியம்பொணாக் கனவுலகி லாழ்ந்தனர்.

தேர்ந்தெடுத்த சிற்பிகள் செதுக்கிய சிலையனார்,
கூர்ந்தவாள் விழிகளாற் குரிசிலைப் பருகியே,
பேர்ந்திடாது நின்றனர்; பிரானொருவ னேயுடல்
சோர்ந்திடா வுயிரெனத் துடித்தன னவருளே.

வான், கடல் மலை, நதி, யியற்கையின் வனப்புகள்,
மேனியா யமைந்த தன்ன வீரனைமுன் கண்டதும்,
தேன்மலர், தளிர், கனி, மதிகலந்த பொற்பினார்,
ஊன்கலந்த வுள்ளுயிர் இவன்ஒருவ னென்றனர்.

தோகை, கோகி லங்கிளி தொகுத்தசுந்த ராங்கிகள்,
தாகமாகப் பார்த்திருந்த சக்தி மைந்தன் வந்ததும்,
மேகமார்பி னைப்பிளக்கும் வேகமின்ன லென்னவே,
மோகமார்பி னின்றொளிர் முறுவலள்ளி வீசினார்.

அல்லிமார்பைக் கொஞ்சிடும் அமுத வெண் ணிலாவினைப்
புல்லியாடுந் தென்றலைப் பொறாமை கொண்டு நோக்குவார்;
மல்லிகையில் ஊதுகின்ற வண்டைத்தூ தனுப்புவார்,
மெல்லிதழ் குவிந்தபூ விழித்திருக்க வேண்டுவார்.

வில்லினைக் குனித்திரண்டு வேல்விழிகள் வீசியே,
சொல்லிலாது மாந்தரைத்தம் சொக்கிலே பிடித்திடும்,
மெல்லியர் வலைகளில் விழாதடக்கி, ஐந்தினை
வெல்லு மாண்மை கொண்டவீர தீரன்வாழ்க வாழ்கவே !

பன்மணி யணிகளெங்கும் பத்திபத்தி யாகவே,
மின்னலிட்டுக் கண்பறிக்கும் வேந்தர்மாளி கைகளின்
பொன்னுயிர்த்த போகபோக்கி யத்திற்புந்தி விட்டிடான்;
இன்னொரு புறத்திலேதன் எண்ணமூன்றிப் பார்த்தனன்.
பொன்னரசர் கோயிலியும் போகவாழ்வை வேண்டிலன்.
மன்னர்தங் குமரிகள் வருந்துவேட்கை தீர்க்கிலன்.
கன்னியர்கள் வீசுகின்ற கண்வலையுங் காண்கிலன்
மன்னுயிர்த் துடிப்பையே மனத்துடிப்பி லேந்தினான்.

கொற்றவாழ்வி னுச்சியிற் குலாவுமின்பம் வேண்டிலான்,
நெற்றிவேர்வை சொட்டச்சொட்ட நீடுழைக்கும் ஏழைகள்
வற்றிக்கஞ்சி யின்றிவாடிடும் வன்கொடிய காட்சியைச்
சுற்றியெங்குங் கண்டவர் துயர் கெட வுதவினான்.

செல்வர்தந்த செல்வமெல்லாந் தேசதேச மாகவே,
கல்வியுந் தொழிலுமோங்கக் கைநிரம்ப நல்கினான்.
நல்லதொண்டர் செய்பொது நலம்வளர வூக்கினான்,
எல்லையில்லாத் துன்பமிந்த நாட்டிலேனென் றெண்ணுவான்.

வண்மையும் வளமையும் வளருகின்ற நாட்டிலே,
உண்மையும்உள் ளன்புமெங்கு மோங்குயர்பொன் னாட்டிலே
கண்ணினீர் பெருகிடுங் கவலைமேக மேனென்பான்
புண்ணிய வமைச்சுடனிப் பூவியல்பை நோக்குவான்.

ஆதிமன்னர் வாழ்வுமின் றரியணை யிருந்திடும்
நீதிமன்னர் மாட்சியும், நிகரிலாச் செயல்களும்,
தீதினைத் தகர்த்தவர் செருக்களஞ் செயித்ததும்,
ஓதினான் உளங்கைநெல்லி போலுணர்ந்த சித்திமான்.

செல்வச்சேயை மார்பிலூட்டுந் தெய்வத்தாயைப் போலவே,
பல்வளந் தழுவிப்பாய்ந்து பாரை யூட்டும் ஆறுகள்,
சொல்லரசர் பாடியன்புத் தொண்டுசெய் திருத்தலம்,
தொல்வளஞ் சுமந்தமா மலைக டோறுஞ் சென்றனர்.

செஞ்சி, சென்னை, தஞ்சை,மா மதுரை, கேர ளம்,முனை,
கஞ்சி,காசி,கல்கத்தா, கயாஅயோத்தி, சீநகர்,
பஞ்சவடி, ஹம்பி, பம்பை, பாலைவீரர் பட்டினம்,
எஞ்சுபல் லிடங்களு மிருந்திருந்து சென்றனர்.

சென்றசென்ற வூர்களிற் சிறந்தகாட்சிச் சாலைகள்,
குன்றிடா தறிவினைக் கொடுக்குங்கல்விச் சாலைகள்,
வென்றமா முனிவர்தீரர் வீரர்தம்மைக் கண்டனர்,
தொன்றுதொட்ட வாழ்க்கையும் துளக்குறக்கண் டேங்கினார்.
கல்வளர் குறிஞ்சியும், கடிய பாலையும்,
புல்வளர் முல்லையும், பொங்கு நல்வளம்
மல்கிய மருதமும், வங்கக் கூட்டங்கள்
பல்கிய நெய்தலும் பார்த்துச் சென்றனர்.

முத்திறை தென்றிரை முத்த மிட்டிடும்;
சித்தரின் மலைதருந் தேன ருவிகள்;
பக்தரின் பாடலைப் பறவை பாடிடும்
முத்தமிழ் நாட்டினை முந்து கண்டனர்.

"வருகநங் கோமகன் ! வருக சித்திமான் !
வருகநல் வர" வென வரிசை கொண்டெதிர்,
தருகைநீள் செம்மலாந் தமிழர் நாடனும்,
முருகிள மன்புடன் முன்வந் தேற்றனன்.

"எந்தையின் கண்ணெனு மினிய நாடிதே.
செந்தமிழ் இசைமலி தெய்வ நாடிதே;
சொந்தநம் வீடிது; சுதந்த ரத்துடன்
வந்தனம், உவந்தனம், வரம்பி லின்பமே.

"வள்ளுவர் பொதுமறை, கம்பன் வான்கவி,
ஒள்ளிய யோகியர் உரைத்த வாசகம்,
தெள்ளிய திருமுறை, திருவ ருட்கவி,
உள்ளத்திற் கமுதென வூறு நாடிதே,

"குரைகடல் உண்டதோர் குமரிக் கண்டத்தின்
கரையறு கலைத்திரள் கரைந்த பின்னரும்,
அரியநல் லறிஞர்செய் யருங்க லைத்திரள்
வரையெனக் குவிந்திசை வளரு நாடிதே !

கடற்படை நிலப்படை கணக்கி லாதது;
மடைதிறந் ததுவென வாணி கத்திரு
வுடையது; வண்மையி லுயர்ந்த சீர்த்தியே
இடைவிடா திதன்புகழ் இயம்பு மாமரோ !

"உலகெலாம் ஒருகுல மாகு மன்பொளி
நிலவிடுஞ் சமரச நிலைய மிந்நிலம்,
நலமுயர் அருட்பெருஞ் சோதி நாதர்கள்,
இலகிடுந் தவக்கனல் ஏறு நாடிதே."
"கண்ணிய மாகவென் றந்தை காத்திடும்,
புண்ணிய பூமியின் புனிதச் சோலையாம்;
எண்ணினும் இயம்பினும் இதயம் இன்புறப்
பண்ணிடுந் **தமிழகப்** பண்பு வாழ்கவே. !"

இவ்வகை போற்றிடும் இளவல் சுத்தனைச்
செவ்விய செந்தமிழ்ச் செல்வர் கோமகன்,
திவ்விய விருந்துகள் செய்து கோயிலில்,
ஒவ்விய சிறப்புடன் உபச ரித்தனன்.

உயிர்களுக் குயிரென வுலவும் ஒன்றைப்போற்
பயிர்களுக் குயிரெனப் பாயுங் காவிரி
வயல்வளம், வருணிநல் வைகைப் பொன்வளம்,
உயர்மலை வளங்களும் உபசரித்தவே.

ஆர்த்தெழும் அருவிகள், அடர்ந்த தென்னைகள்,
கூர்த்தெழும் கார்வரை குலவுங் **கேரளம்** ;
வேர்த்திட வுழைத்திடும் வீரர் **சேரமான்**
சீர்த்திகள் கண்டனன் சித்திச் செல்வனே.

பொன்னியின் மாலையைப் பூண்ட பொன்னிலம் ;
இன்னிற மலர்கனி யிலகு மின்பவிண் ;
பன்னலத் தொழில்வளம் பரவி யோங்கிடுங்
கன்னடங் காட்டிய கனிவிற் பூரித்தான்.

மானத்தை யுயிரினு மதிக்கு மல்லர்கள்,
நானென, நாடென நன்மை தேடுவார்.
தேனிசை தவழ்ந்திடுந் **தெலுங்கு** பேசுவார்
கோனிசை கேட்டுளங் குளிர்ந்து சென்றனன்.

கங்கையாழ் இசைப்பது ; கலைசி றந்தது ;
பொங்கிய ஞானமும் புகழு மிக்கது ;
மங்கலப் புதுயுக வசந்தச் சோலையாம்,
வங்கத்தின் வரையறு வளங்கள் கண்டனன்.

பாசவெவ் வலைகளைப் பறித் தெறிந்திடும்
மாசறு புலவர்கள், வடமொழிக் கலை
பேசிடும் புலவர்கள் பெருமை செய்திடுங்
காசியிற் சங்கரன் கழல் பணிந்தனன்.
ஓம்என ஓதிடும் வேதத் தென்றலில்,
பூம்பயி ராடிடும் புனிதக் **கோசலம்**,
தீம்பழச் சுவையெனுந் தெய்வ நூல்களை
ஓம்பிடுந் திறமைகண் டுள்ளம் பூரித்தான்.

திண்ணிய வுடலினர், சிங்க நெஞ்சினர்,
எண்ணிய வினைகளை யியற்றும் வீரர்கள்,
புண்ணியச் **சிந்துவின்** புனலுண் டோங்கிடுங்
கண்ணிய மைந்தரைக் கண்ணிற் கண்டனன்.

சிங்கத்தைக் குகையினிற் செருக்கும் வீரர்கள்,
அங்கியின் குலத்தினர், அரச புத்திரர்,
பொங்கிய போர்ப்புகழ் புகலக் கேட்டனன்—
செங்கதிர்க் கொடியுயர் சித்தி வீரனே.

இவ்வகை நாடெலாம் இனிது கண்டபின்,
செவ்விய கேள்வியின் செல்வன் சித்திமான்,
ஒவ்வரும் புகழுடை யுலக வீரனாம்
திவ்விய **சிவாஜியின்** தேச மீதென்றான்.

அத்தகை வீரனின் அற்புதக் கதை
எத்தகை யுளத்திற்கும் இனிமையாகிடும் ;
சித்தியின் அமைச்சனே செப்பிக் கேட்டிட
மெத்தவும் விரும்பினன் வீரக் காளையே.

மாரத நகர்களை வலம்வந்தானபின்,
தாரணி வீரனின் சடலந் துஞ்சிய
ஊரினுக் குற்றதும், உரைக்க லுற்றனன்
தீரனாம் சித்திமான் சிவாஜி காதையே. 192

16. வீர சிவாஜிப் படலம்

வீரர் போற்றிடும் வீர சிகாமணி
பார தத்தின் பழுதறு காவலன் ;
மார தக்குல மன்னன் சிவாஜியின்
சார மான சரித்திரங் கேட்டியால்:

வீர சக்தியின் மார்பென விளங்கும ராட்டின்
ஆர மானது ; பழம்புகழ் அணிந்தது ; தூய
பார தத்திருத் தாய்புனை பதக்கமே போன்ற
ஊர தன்பெயர் பூநகர் உரைப்பதற் கினிதே.
இந்த வூரினில் ஷஹஜியென் றியம்பிடும் அமைச்சன்
சிந்தை தூய ஜீஜாவுடன் சிவநெறி வாழ்ந்தான் ;
அந்த வந்தணர் அருந்தவக் கனிபழுத் ததுபோல்,
வந்து தோன்றினன் வரம்பெறு வீரசி வாஜி.

நாரி யர்க்கணி யாகிய நன்னலத் தாயும்
ஆரி யச்சுட ராகிய தன்மகனுணர
வீரர் வீரமுஞ் சோற்றுடன் மிசைந்திட வூட்டித்
"தீர னாயிரு" வென்றனள் ; சிவாஜியு மிருந்தான்.

காண்ட தேவெனும் காட்சியான் காதலால் அமைந்தே,
வேண்டு போர்க்கலை வீரமாக் குரிசிலுக் கீந்தே,
தூண்டி யுட்சுடர், துகளறு சிற்பியைப் போலே,
ஆண்ட கைதனை யற்புதப் பொலிவுட னமைத்தான்.

அந்த நாளினில், அறமிழந் தாற்றுலு மிழந்தே,
பந்த முற்றிடர் தவித்தனள் பாரத தேவி ;
சொந்த நாட்டினிற் சுதந்தரம் நாட்டுவ னென்றே,
சிந்தை கொண்டிளஞ் சிங்கம்போ லெழுந்தனன் சிவாஜி.

உலகம் யாவையுந் தாங்கிடும் ஒருபரம் பொருளை,
நலமெ லாந்தரும் அருட்பெருஞ் சோதியை நம்பார் ;
பலம தஞ்சொலி யொருவர்மற் றொருவரைப் பகைத்தே,
கலகக் காடெனச் செய்தனர் கண்ணிலா ருலகை.

ஒத்த மானிடர், ஒளிவளி நீர்நில வளமை
ஒத்த மைந்தவர், ஒருயிர்ச் சக்தியால் உயிர்ப்பார்,
ஒத்து வாழ்ந்திடும் உணர்விலார், உண்மையொன் றறியார்;
சத்த மாமதச் சந்தையிற் றலைதிரிந் தலைவார்.

என்ன தேயெனக் கேயெனும் ஆணவத்தாலே
சொன்ன தேசொலிச் சுத்தசத் தியப்பொருளறியார் ;
மன்னு ஞாலத்தில் அருட்பெரு மங்கல வாழ்வை
இன்ன தீயவர் தடுப்பரே இன்னமும் அந்தோ !

இத்த கைமத வெறிகளும் இடர்களுங் காமப்
பித்த லைத்திடும் பிழைகளும், பேயர்வெங் கொலையும்,
சத்து ருக்களின் சங்கடத் தீமையுங் கண்டே,
உத்தமர் உளங் கொதித்தனர் உய்வகை யறியார்.
பயமு றுத்திடும் பாதக வெறியெழுந் தெறியும்
புயலி லேயிருட் சுழியிலே, புகலது காணார்.
இயம்பொ ணாதிடர்க் கடலினில் எளியவர் தவித்தார்.
செயப் படாங்கொளும் வங்கம்போல் வந்தனன் சிவாஜி ;

உண்ணும் ஊணினை, உயிர்த்திடும் உயிர்ப்பினை, உரையை,
எண்ணும் எண்ணத்தை, இயற்றிடும் பணிகளை யெல்லாம்,
கண்ணி னும்அரி தாகிய கற்பக நாட்டின்
புண்ணி யப்பயன் வாழவே பூசனை புரிந்தான்.

“இச்சை யால்உல காடலை யியற்றிடும் பரமா,
நச்சி ருட்பகை நலிந்திட, நரகினுங் கொடிய
கொச்சை வாழ்விந்த நாட்டினிற் குலவிட லாமோ?
அச்ச மற்றநல் லமரவாழ் வருள்புரி” யென்பான்.

“பாரில் யாவரும் பரம்பொருட் பங்கெனப் பகரும்,
பார தாத்தும தருமமே பரவிட வேண்டும்.
போரி டர்களைப் போரினால் ஒழித்திட வேண்டும்,
வீரத் தீயெனக் கருளுவாய் வெற்றிநா யகனே !”

சொல்லுஞ் சொல்லினைச் செயலினிற் காட்டிடத் துணிந்தே,
மல்லர் சேனையைப் பயிற்றினான் மாரதச் சிங்கம் ;
பொல்ல வர்தமைப் பூண்டுடன் போக்கிடக் கருதி,
நல்ல வர்தமை நாடொறுங் காத்திட நயந்தே.

மாரன்போல் அழகி னானை, மடங்கல்போல் நெஞ்சினானை,
கார்வரைப் புயத்தி னானைக் காலனும் வெருவுகின்ற
வீரவாட் கரத்தி னானை, வெற்றிக்கு வெற்றி செல்லுந்
தீரனைக் கண்ட பேர்கள் சிவக்கன லுருவே கண்டார்.

கல்லுடைக் தோளைக் கண்டார் கலங்கறு வீரரானார்.
சொல்லுடைத் திறனைக் கேட்டுச் சொல்லறப்பணிந்து நின்றார்.
வில்லுடைத் திறத்தைக் கண்டார் வில்லரா யெழுந்து வந்தார்;
மல்லுடைத் திறத்தைக் கண்டார் மல்லராய் முன்சென்றாரே.

கண்டவர் கருத்தை முற்றுங் காந்தம்போற் கவரும் வீரன்,
கொண்டதே கொள்கையென்றார், குறித்ததே கடமை யென்றார்
பண்டறம் பிழைக்க, ஞான பாரதம் பிழைக்க வின்னோன்
விண்டதே வேத மென்றார்... “வெல்கநீ ! வாழ்க” வென்றார்.
அலையெறி கடலைப் போலே, ஆர்த்தெழும் படையி ருந்தென்?
மலையெனப்பொருளும்வேண்டும்,வயிறன்றோஉயிரைத்தாங்கும்?

“நிலைபெறத் தரும மிங்கே, நீணிதி யரு” ளென் றன்பன்
தலைவிப வானி யன்னைத் தாள்பணிந் திறைஞ்சி னானே:—

“ஒன்னலர் கொடுமை போக்கி, ஒற்றுமை யாக நாடு,
தன்னறம் போற்றி வாழத் தருமவீ ரரைநீ தந்தாய்.
அன்னவர் உண்டு டுத்தே, ஆண்டகைப் பணிகள் செய்யப்
பொன்னருள் புரிவாய்தாயே, போற்றியுன் சரணம் பூண்டேன்.

“சத்திய சீலர் வாழச் சநாதன தருமம் வாழ,
பத்தினிப் பெண்டிர் வாழப் பசுவளம் வாழ வேண்டி,
இத்தினம் எழுந்து நின்றேன் ; இறைவியுன் னருளி னாலே;
உத்தமர்க் குணவு தாராய், உலகினை யூட்டுந் தாயே !”

பூரண சக்தி யன்னை புதல்வனுக் கருள் புரிந்தாள்:
தாரணிக் கோட்டைக் குள்ளே தங்கமாப் புதையல் கண்டான்.
“பாரணி யருளே, யுன்றன் பரிவினாற் பிழைத்தே” னென்று,
போரணி வகுக்க நின்றான் புவியெலாம் புகழும் வீரன்.

ஆவியும் உடலும் போலே யாட்களும் பொன்னும் வந்து
மேவிய வுடனே வீரன், மேவலர் அணுக வொண்ணாக்
காவல்க ளமைத்தான் ; கல்லாற் கட்டினான் அரண்கள்; சக்திக்
கோவில்கள் அமைத்து வீரப் பயிற்சியுங் கொடுத்தானாங்கே !.

கூட்டினான் சேனை ராஜ சிங்கமாக் கோட்டைக் குள்ளே ;
காட்டினான் காலம் வேண்டுங் கடமையும் இடமும்; வாளை
நீட்டினான்: “பவானி, சண்டி, பைரவி போற்றி” யென்றே;
பாட்டுகள் முழங்கச் செய்தான்; பயனுரை கூறி னானே.

“இறைவியின் அருளினால், எழுந்தவீரர்காள்,
பொறைகெட வருந்திடும் புண்ணி யத்தினைக்
குறையறக் காத்திடக் கொண்ட கொள்கையை
நிறைவுறப் போற்றிட நேரம் வந்ததால்.”

“வேங்கைபோல் அதருமம், வேதத் தேனுவைத்
தீங்குறு கைகளாற் செகுக்கக் கண்டுமே,
ஓங்கிய மாமலை யொத்த தோளினர்
தூங்கினார் என்கிற சொல்லைக் கேட்பமோ ?”
“கோவில்கள் யாவையுங் கொள்ளை போகையில்,
ஆவினம் படுகொலை யாகும் போதினில்,
பூவையர் மானமும் புண்பட் டேங்கையில்,
பாவியர் தீமையைப் பார்த்தி ருப்பதோ?”

“செல்லுமின், அதர்மத்தைச் செகுமின், வெம்மையைக்
கொல்லுமின், அறத்தினைக் குலவ நாட்டுமின்,
சொல்லுமின் “சுதந்தர சக்தி ஓம்” என்றே,
வெல்லுமின் பகைவரை வீர ராமன்போல்........ !”

சூரன் இன்னவை சொல்லி நடத்தலும்,
“பாரின் சக்தி பவானிக்கு ஜே” யென்றே,
மார தப்பெரு மல்லர்கள் பீஜபூர்
ஊர்க ளிற்கொடி யூன்றினர் வெற்றியால்.

அந்த வூர்களை யாளுஞ்சுல் தானுக்குத்
தந்தை ஷாஜி தகவுடை மந்திரி.
சொந்த மைந்தனைச் சொல்லி யடக்கென,

மந்தி ரியைப் பணித்தனன் மன்னனே.

"நான் அமைச்சு நடத்திடும் பீஜபூர்,
கோனுக் கேபல குற்ற மிழைத்தனை !
ஏன் எனக்கு மகனென வந்தனை?
மானம் போனதுன் மர்க்கடச் சேட்டையால்."

"நஞ்சர் என்னினு நாட்டினை யாளுவோர்
தஞ்ச மென்றடி தாழ்ந்தவர் கட்டளை,
செஞ்சொல் வேத மெனச்செய லேமதி!
அஞ்சத் தக்கதை யஞ்சிடத் தக்கதே !"

"வரம்பை மீறினை வாலிபத் தெம்பினால்,
நிரம்ப வுஞ்செருக் குற்று நிமிர்ந்தனை ;
பரம்ப ரையர சைப்பதம் பார்த்தனை!
வரம்பெற் றோர்க்கும் வணக்கம் அழகன்றோ?"

"பழிப்பு றுஞ்செயல் செய்தனை மைந்தவென்
பிழைப்பி னுக்குப் பெருந்துய ராயினை;
அழைப்பன் மன்னன்; அடக்கமாய்ப் பே" செனப்
பழுத்த தந்தை பயலை வெருட்டினான்.
"மாதரைக் கெடுத்திட்டேனோ? மன்னறம் பிழைத்திட்டேனோ?
பாதகக் கள்ளுண்டேனோ! பசுக்களைக் கொலைசெய் தேனோ?
கோதறு முனிவர் வாழுங் கோயிலைக் கொளுத்தி னேனோ?
யாதிடர் செய்தேன் ஐயயா"னென ***மைந்தன்*** *சொல்வான்.*

"இந்தநம் புனித நாட்டின் இரத்தத்தை வடித்த வர்க்கும்,
விந்தையாய்ப் பரிந்து பேசி, விடுதலை செத்து, நீசெய்
மந்திரி வேலை யன்றோ மானத்தைக் குலைப்ப தையா...!
தந்திர வேசைக் காளாய்த் தாயினை மறப்ப துண்டோ?"

"வருந்திய தனது தாயை வருத்திடும் இரத்தக் கையால்
விருந்தினை யுண்டு, நாளை விற்பதும் ஆண்மை யாமோ?
திருந்திட வேண்டும் நீயே, தீரர்முன் தலைநி மிர்ந்தே
இருந்திடவேண்டின் என்போல் இருந்திடவேண்டு" மென்றான்.

"தந்தைசொல் எனது தாய்க்குத் தருவது பெருமையாயின்,
மந்திர மென்னக் கொள்வேன்....மற்றது சிறுமை யாயின்,
பந்தனை தருவ தாயின், பதரெனத் தள்ளி, வீரச்
சிந்தனை செயலிற்காட்டிச் செயக்கொடி பிடிப்பே"னென்றான்

"உடலைநீ தந்த துண்மை. உடலினுள் எரியும் வீரச்
சுடரைநான் பெற்றேன், அன்னை சூலிபவானி தந்தாள் ;
இடர்தரு மிகலை வீட்டி யினிதறம் போற்றி யெங்கும்
படர்துடைத் தாளு வேனிப் பாரத நாட்டை" யென்றான்.

"அறத்தினைக் காத்த ராமன் அவதரித் திருந்த நாட்டில்,
கரத்தினைக் கட்டி வாழேன், கருமவீ ரத்திற் கென்றே,
வரத்தினைப் பெற்றவீர மாருதி போல வெற்றிச்
சிரத்தினையுயர்த்தியே நான் சிங்கம்போல் நடப்பே"னென்றான்.

"நானுரைமொழியில் உண்மை நன்மையொன்றுள்ளதாயின்,
ஏனெனும் எதிர்ப்பில் லாமல், இதயத்தில் உனக்கு நாட்டின்
மானமே துடிப்ப தாயின், மந்திரி வேலை விட்டென்
சேனைசெய் தேச சேவை செய்வதே கடமை!" யென்றான்.

கட்டறு வீர மைந்தன் கருத்தினை யறிந்த தந்தை
விட்டவன் போக்கிற் சென்றான்...விடுதலை மனத்தி னுக்கும்
வட்டவான் மழையி னுக்கும், மதிவளர் அலைக ளுக்கும்
சட்ட திட்டங்கள் செய்வார் சகத்தினி லில்லை யன்றோ?
தூண்டு வீரத் துடிப்பை யடக்கிலான்,
மீண்டும் ஊர்களை வென்றுதன் சேனையால்,
ஆண்டு தன்கொடி யாடிடச் செய்தனன்,
ஈண்டு சுல்தா னெரிசின மேறவே !

மல்லரால் இந்த மல்லனை வெல்வலி
யில்ல னாகி, யிணங்கவும் இல்லனாய்,
தில்லி மன்னன் செவியுறச் செய்தனன்,
தொல்லை செய்யத் துணிந்தவன் மாற்றமே.

“கள்ள மாகக் கரந்து மலைகளில்,
மெள்ள வந்து மிடற்றினைப் பற்றுவான்,
கொள்ளை யிட்டுக் கொலைசெயுங் கூற்றிவன் !
சள்ளை சொல்லிற் சரித்திர மாகுமே !”

“ஒடுக்க வேண்டு முடனிவன் கொட்டத்தை ;
தொடுக்க வேண்டுஞ் சமர்” எனச் சொல்லவே,
திடுக்கெனச் சினந் தேதில்லி மன்னவன்
கொடுத்த னன்ஒரு கோபக் கனற்படை.

அறமும் ஆண்மையும் அன்பும் பொருந்திய
திறமை கொண்ட திருவினன் ஓர்பகல்,
இறைவி தன்னை யிறைஞ்சிடும் போதினிற்,
பறை முழக்கொலி பாய்ந்தது காதிலே.

“எந்தை யே**அஃப்சுல் கான்** எனும் வெய்யவன்
வந்த னன்வழி யெங்கும் இரத்தமே
சிந்தி னன்; உமைச் சிக்கெனப் பற்றிட
முந்தி னான்” என ஒற்றன் மொழிந்தனன்.

கொல்ல வந்தவன் குட்டறி ஒற்றரும்,
புல்லை விற்பவர் போல்உள வாய்ந்தனர்.
வெல்ல வோர்வழி கண்டுநம் வீரனும்
மல்ல ராங்கு மறைக வென் றேவினான்.

மாசி லாத மராதிய மாமணி,
வீசி வாளை விரைந்திடும் போதிலே,
“நேச மாய்நினை நேரினிற் கண்டிடும்
ஆசை யேன்” என் றழைத்தனன் அஃப்சுலே !
எப்ப டையுமில் லாமல் எதிர்ந்திடும்,
அஃப்சுல் கானை யறிந்தநம் வீரனும்
“குப்பெ னப்பற்றிக் கொன்றிடும் சூழ்ச்சியைத்
தப்ப நானுந் தயார்” எனச் சென்றனன்.

“எடுத்தனன் இரத்தக் கூர்வாள், இடுக்கினன் புலி நகத்தை
அடுத்தனன் குறித்த சூழல், அன்பிலான் மோசங் கண்டே,
பிடித்தனன் வயிற்றைக் கீறிப் பிளந்தனன், பகையை முற்றும்
முடித்தனன், பொருளைவாரி முதல்விக்கு நிவேதித் தானே.

“ஒன்னலர் வஞ்சத் தீமை ஒழிந்தது, முதற்போர் வென்றோம்!
உன்னடிக் கொப்பு வித்தோம் உதவிய பொருளை முற்றும்.
மன்னறம் வாழ, நாடு மங்கலம் பொலிந்து வாழ
அன்னையே வீரசக்திக் கனலெமக் கருளு வாயே!”

“பேச வந்த பெரும்படை யாளனை
மோச மாக முடித்தவன் சேனையை
நாச மாக்குவம் நா” மென ஷா, பிடி
மீசை யைமிடுக் காக முறுக்கினான்.

கொள்ளி போலக் கொதித்திட வெஞ்சினம்,
வெள்ள மாப்படை கொண்டு விரைந்தனன்.
துள்ளி வந்த துருக்கர் படையினை
அள்ளி வீசி யழித்தனன் வீரனே !

“சூரி யனையெச் சூறை யணைத்திடும்
வீரிய னிவன், வெல்லற் கரியவன்;
போரி லாதன்பு பூண்பது நன்” றெனக்
கோரி னான்அதில் ஷாகுண மாகவே.

“தேசத் திற்கும் அறத்திற்குந் தீமைசெய்
நாச காலர் நலிந்திட வேயிவன்
ஆசை கொண்டவன், அன்றி யிஸ்லாமியர்
நேசங் கொண்டவன். நேர்மை தவறிலான்.”

இவன் படையில் இஸ்லாமியர் உள்ளனர்,
அவர்க ளுக்குக் குரானும் அளிக்கிறான்!
தவறி வந்த தனியிள மாதரை
அவர வர்க்குரி யாரிடஞ் சேர்க்கிறான்!
“இத்த கையவன்” என்று தன் ஒற்றர்கள்
ஒத்தி யம்பினர்! உண்மை யறிந்ததும்,
வைத்த வெம்பகை மாறி அதிலனும்
உத்த மனுக் குறுதுணை யாயினான்.

தந்தை யுள்ளந் தழைத்துத் தழுவினான் !
முந்து கொண்ட முனிவை முனிந்தனன்.
சிந்தை பூத்து “நற் செல்வநீ வாழ்” கெனத்
தந்த னன்மன தாரத்தன் ஆசியை.

தந்தை யுந்தந்தை யாக மொழிந்தனன்;
மைந்த னும்மைந்த னாக வணங்கினான்;
“நிந்தை யற்ற நெறியி லொழுகுமுன்
சந்த திக்கினிச் சாவிலை” என்றனன்.

சுற்றி யெங்குந் துணிந்தமர் செய்தவன்
சிற்ற ரசரைச் சேவகங் கொண்டொரு
முற்ற ரசை முடிவற நாட்டினான்;
வெற்றி கண்டு வெருவினன் **பாதுஷா !**

அடங்கி லான்அர சாட்சியிந் நாட்டிலே
இடம் விரிந்து பரவிய தெங்குமே;
உடனித் தீதை யொடுக்குவ தேமுதற்
கடமை யென்னக் கருதினன் பாதுஷா.......

சொற்ற வாயுஞ் சுடும்; அவன் பேரிசை

கற்ற நெஞ்சுங் கனலென வெந்திடும்;
மற்று ரைப்பதென்? மாரதச் சிங்கத்தால்
அற்று றக்கம் அமைதி யிழந்தனன் !

"பரவை போலப் படைத்திரள் கொண்டென்றன்
அரசைத் தான்பற்றி யாளத் துணிந்தவன்,
சிரசைக் கொய்" கெனச் **சேட்டனை** யேவினான்;
முரசு விம்ம முடுக்கினன் சேனையை....

இறைவன் கட்டளை யேந்திய வெம்படை
கறைகொள் மேகங் கலித்தெழு மின்னெனப்
பறை முழக்கிப் பறந்தது; பூநகர்,
சிறை பிடித்துச் செகுத்திடச் செம்மலை......
சினங்கொதி புலியி னம்போற் **சேட்டன் பூநகர்** புகுந்து
கனம்பெறு போர் முறுக்கக் கரந்துள சூழல் கண்டே,
மனந்திடங் கொண்டெழுந்த மாரதச் சிங்கம் அந்நாள்,
புனைந்தொரு புதிய வேடம், பூனைபோற் புலியை வென்றான்.

கூற்றுலாம் பகைவன் சூழல், குறட்டைவிட் டுறங்கும்போது,
நீற்றுருப் பூனை போல நெருங்கியோர் சாதுக் கூட்டம்,
காற்றெனப் புகுந்த துள்ளே... கனலெனச் சீறிக் கொல்ல,
வேற்றவர் குடல் கலங்கி வெருட்சிகொண் டோடினாரே!

சேட்டனுஞ் சென்ன லேறித் திடுமெனக் குதித்த போது,
போட்டதோர் வலியவெவ்வாள்; பொருக்கென வுயிரையேந்தி,
வீட்டினின் "றையோ" வென்றே விரல் இழந் திவன் எடுத்த
ஓட்டம்போய் தில்லி சுல்தான் உலைந்திட நின்ற தன்றே....

ஆக்ராச் சிறை தப்பல்

வெல்லுஞ் சேனையை வென்று முடித்தனன்.
கொல்லுஞ் சூழ்ச்சியைக் கொன்று முடித்தனன்.
இல்லை சாந்த மில்லாவழி யென்றந்தத்
தில்லியன் அழைத் தான்சிவன் சென்றனன்.

அஞ்சறு வீரன் கண்டான் அரசனை ஆக்கிராவில்;
துஞ்சறு சமயப் பற்றுந் துகளரும் எளிய வாழ்வும்
மிஞ்சிய பாது ஷாவை வியந்தனன். பாதுஷாவும்,
நெஞ்சுரங் கொண்டான் செய்கை நேரிய தெனவுணர்ந்தான்.

நிறையுடன் இரண்டு பேரு நேசமா யிருக்கு நாளில்,
இறைவனும் வஞ்சர் சொல்லை யேற்று நம் வீரர் ஏற்றைச்
சிறைசெய்தான்; சிவாஜி வீட்டிற் "சிவசக்தி காக்க" வென்றே
முறையிட்டான் மோசஞ் செய்த மோசரைத் தப்பவேண்டி...

"தருமத்தை நிலை நிறுத்தத் தாரக மாக முன்னோர்
நிருமித்த வழி நடந்தேன்; நிறைவுநா னின்னுங் காணேன்,
கருமத்தை முடிக்க வேயிக் கட்டினை யுதறிச் செல்லும்
மருமத்தை விளக்கிக் காவாய், மாதவ சக்தி தாயே !"

ஆயிர மின்னல் போலே அன்னைவந் தபய மீந்தாள்!
போயது துயரம்! சூழ்ச்சி பொலிந்ததும், அறிந்த வீரன்,
நோயெனப் படுக்க, நண்பர் நூறுபேர் சிகிச்சை செய்தார்...
வாயிலுந் திறந்தார் தந்தை மகனொடுந் தப்பு தற்கே...
விட்டது நோயென் றார்கள், வீரனைத் தில்லி மன்னன்
மட்டறு மகிழ்ச்சி காட்டிப் பார்த்தனன்; மராட வீரன்,
"இட்டமித் திரருக் கெல்லாம் விருந்துகள் இடுவேன்" என்றான்.

கட்டளை யேற்ற தோழர் கனவிருந் தாக்கி னாரே....

நேசர்க்குப் பண்ட மென்றே நெடியபல் கூடை சென்ற!
வேசையர் நடனக் கூத்தில் வெறிகொண்டார் காவலாட்கள்!
வாசலைக் கடந்து சென்ற வலியதோர் கூடையென்னே!
தோசையென் றிருந்தார் மற்றோர்; சூரனும் விடுபட் டானே!

மூக்கினில் விரலை வைத்தான் முகலவர் கோனும்; வாயிற்
காக்குநர் தமையொ றுத்தான்; காற்றினும் வேகமாக,
ஊக்கினன் ஒற்றர் தம்மை; ஒருலட்சம் வராகனென்று
வாக்களித் தானவ் வீரன் சிரத்துடன் வருவா ருக்கே!....

வாசியி லேறிய வன்றிறல் வீரன்,
ஓசனை நான்குற ஓர்வனம் புக்குப்
பாச மறுத்த பரங்களைக் கூடிக்
காசி யடைந்தனன் காவி யுடுத்தே.

ஐம்பொறி வென்ற வருண்முனி போலே,
கைம்மலர் தன்னிலோர் கப்பறை தாங்கி,
பொம்மக தேவவென் றையம் புகுந்தே,
செம்மல் சிவாஜி திரிந்தனன் சுற்றி.

அறிந்தவர் போற்றி யறிந்தது சொல்லார்,
துறந்தவ னென்று பகைவர் துறப்பார்,
செறிந்து பிடிக்க வருஞ்சில தெவ்வர்
மறைந்தவன் போகிற மாய மறியார்.

தான்வரத் தானம் வழங்கு மனைவி,
தான்வரக் கண்டு தழைத்தன ளின்பம்,
கோன்வரக் கண்டு குளிர்ந்தது நாடு,
பூநகர் மீண்டும் புரந்தனன் வீரன்.

சத்திரபதி

வெருவிய பாது ஷாவும், வீரனை வெல்லொ ணாமல்,
உருவிய சூழ்ச்சி வாளை உரையிலிட் டுண்மை யான
பெருமைகள் பேசி, மன்னர் பிரானெனும் பட்டஞ் சூட்டித்
திருவுடன் சுதேசங் காக்கச் செய்தனன் சேம மாக.....
செருவினி லனுமான் வாழ்க, தீமையைச் செற்றோன் வாழ்க,
அருமருந் தனைய நண்பன், அரனருட் சக்தி மைந்தன்,
தருமத்தைக் காத்த தீரன், சத்திர பதிவாழ் கென்றே
திருமுடி சூட்டினார்சு தேசத்தார் கேச ரிக்கே.

கடமைக் குயிர்தரு சேனையுங் கலங்காமன வுரனும்
திடபக்தியுஞ் செயல்வெற்றியுந் திருவோங்கிய புகழும்,
இடமேவிய வரசும்மிக வினிதாகிய குணமும்,
உடையான்உல கெக்காலமும் ஓதும்அதி மனிதன்.

அடிமைத்துய ரிருள்போக்கிடும் ஆண்மைச்சுட ரானான்,
இடருக்கெதிர் இடர்செய்துபே ரிடர்தீர்த்தினி தீந்தோன்,
வடநாட்டிலுந் தென்னாட்டிலும் கொடிநாட்டிய மன்னன்
இடிமின்புய லுடன்மாமழை யெனவேவினை புரிந்தோன்.

மக்களுக் கினிய தந்தை, மன்னவர் மன்னன், உள்ளப்
பக்குவ ஞானிகட்குப் பண்புள தொண்ட னானான்,
அக்கிர மங்கள் செய்யும் அரக்கனின் கால னானான்
சக்கர நெறிநின் றார்க்குத் தருமமே யானான் மாதோ !

தாயினுக் கினிய பிள்ளை, தந்தைக்குப் புகழைத் தந்தோன்,
நேயருக் கினிய நேயன், நிகரிலா வுலக வீரன்,
தூயனி ராம தாஸன் சொல்மொழி கேட்கு மன்பன்,
ஆயுளை யெல்லாந் தேச சேவைக்கே யளித்தான் மாதோ !

“இனையசி வாஜி மன்னன் வணங்கிய இராம தாசின்,
புனிதமாக் கதைசொல்” லென்று புனிதனுங் கேட்க, நல்லோன்
“இனிதினி துனது கேள்வி; ஏகுவோம் ஐந்தால் ஆங்கே
முனிவரின் வாக்கி னாலே முனிவரைக் கேட்போ” மென்றான்.

வாளினில் வீரன், போரில் வாகைகள் அணிந்த வீரன்,
தோளினில் அறஞ்சு மந்த துகளறு வீரன்; பூமி
ஆளுறு வீரன், யோக பலத்தினால் அடக்கித் தம்மை
ஆளுறும் வீர ருக்கே அன்புறு வீரனானான்....

அத்தகை சிவாஜி யாக்கை அடங்கிய ராயக்கோட்டை
இத்ததி காணப்பெற்றோம் இதயத்தில் வீர மூற,
சத்திய தருமத்திற்கே தம்முயிர் வழங்கு கின்ற
உத்தம வீர ரிந்த வுலகுள மட்டும் வாழ்க ! 360
மாசறு வீரன் வாழ்வை மனமுறப் பருகிச் சுத்தன்
“பேசரும்பெருமைபெற்ற பிரான்கதை செவியிற்கொண்டான்
காசினி யனைத்து மிந்தக் கதையினால் வீர சக்தி
ஆசியைப் பெற்று வெற்றி யடைந்திடு முண்மை” யென்றான்.

இன்ன சொல்லி முடித்திடு மெல்லையில்,
“என்ன கர்க்கண் இளமன் வரு” கெனக்
கன்ம மனக்கலி யன்கடி தந்தந்தே
முன்னின் றான்முக மூடிய தூதனே...

இடமு நாளும் இசைந்திடின் உன்னகர்
உடன் வருவ துறுதியென் றன்புடன்,
விடை யெழுதி விடுத்ததும், சித்திமான்
கடிதின் ஒற்றரைக் காண்மினென் றேவினான். 372

17. பஞ்சவடிப் படலம்

வேதங்கள் அனைத்தும் ஒன்றாய் விளம்பிடும் உண்மையான
ஆதிசுத் தான்மன் யானென் றறிந்திடத் தியான மோனச்
சாதனஞ் செய்து, முற்றிச் சகசநிட்டையில் விளங்கு
மாதவர் வாழும் பஞ்ச வடியினைப் புனிதன் கண்டான்.

உரையினுக் கரிய ஞானி யுளமென மலையும், ஆர்வக்
கரைபுரண் டோடுந் தெய்வக் கவியென விமலை யாறும்,
விரைமலர், கனியுங் காயும் விளைபசு வனப்பு மோங்கி
வரையறு தவத்திற் கேற்ற தண்டக வனமுங் கண்டான்.

வானமு மலையும் ஊட்டி வளர்த்திட, வளர்ந்து சென்றே,
நானிலப் பயிர்கள் ஓங்க, நல்லுயிர்க் குலஞ்செ ழிக்கத்
தானமாய்த் தன்னை நல்கித் தரத்தரத் தழைத்துப் பொங்குந்
தேனினு மினிய கோதா வரியெனுந் தெய்வ யாறே.

அரன்பொது மன்றில் ஆடும் ஆனந்தக் கூத்தைப் போலும்,
பரமனைப் பரவு கின்ற பக்தர்பா மாலை போலும்,
துரியரின் வீணா தண்டந் தொனிக்குமோங் காரம் போலும்,
விரியலைக் கரங்கள் வீசி விரைந்தது விமலையாறே.

தாய்முலைப் பாலைப் போன்ற தளிரிளம் பயிரை யூட்டிக்
காய்கனி தானி யங்கள் கணக்கற விளைத்து நல்கித்
தேயத்தின் பசியை நீக்கித் திருவருண் முனிவ ருக்குத்
தூயநல் லுதவி செய்யுஞ் சுதந்தர வள்ள லாறே.
தீங்கனி ரசமும், வாச மலர்வனஞ் செழித்த தேனும்
தாங்கிடும் அமுத வெள்ளம், தங்கமும் பசிய சீரும்
ஓங்கிடு மிதன் பரப்பில் உலவிடு மனத்தி னுக்கு
நீங்கிடுங் கவலை, சாந்த விடுதலை நிலவு மம்மா!

பாருயிர் அறஞ்செ ழிக்கப் பாய்ந்திடும் விமலை யாறு,
கார்வரைக் கல்லு ருட்டிக் கான்மரம் பறித்து மோதிப்
போரலை விம்மப் போந்து பொருகடல் கலக்கு நீரால்,
வார்சிலை இராம னேவும் வானரப் படையை மானும்.

வரைகளிற் பொருளின் மாண்பும்,வனங்களிற்கலையின் மாண்பும்
திரையெழுந் தோடும் ஆற்றிற் செவ்விய சொல்லின் மாண்பும்
கரையிலா வுயிரின் போக்கிற் கலந்திடும் பண்புங் கொண்டே
உரைமிகும் ஐந்தால் வேத வுருவென விளங்கிற் றம்மா !

போட்டிபொ றாமைகோபம் போர், செருக் கோங்கி நெஞ்சை
வாட்டிடும் உலகை நீத்து வஞ்சமில் நதியும், புள்ளும்,
பாட்டிசை வனத்திற் பாலும் பழங்களுந் துய்த்து மேலோர்,
நாட்டிசை யோங்க நல்ல கலைகளை நல்கி னாரே !

திருவுறு மாந்த ருக்குச் செந்நெறி யிலகக் காட்டிப்
பருவநன் மழையைப் போலப் பயன்மிக விளைத்து, நாளுந்
தருமமுங் கலையுந் தந்த தபோவன முனிவருள்ளம்
உருவுகொண் டொழுக்க முள்ள வுலகென விரிந்த தம்மா!

இத்தகை வனத்தி னூடே, யியற்கையின் அழகிற் சொக்கி,
சித்திமான் அரிய காட்சி திசைதொறு மினிது காட்ட,
சத்திய மைந்த னுக்குச் சாதுக்கள் வரவு கூற,
சுத்தனும் வணக்க மாக முனிவரைத் தொழுது சென்றான்.

எழிலுறும் இயற்கை யன்னை, யினமலர் நகை குலுங்க,
களிபெரும் உவகை தூண்டக் கானமா வரவு கூற,
பொழிலுறு கனியு திர்த்துப் புள்ளினந் தென்றலோடும்,
வழிநடைப் பாட்டொலிக்க வரதனும் வழிந டந்தான்.

மாரத வீரர் முன்னே வழியினைத் துலக்கிச் செல்லத்
தேர்பரி கரிகள் சூழத் திருநெறி முனிவர் கூடி
ஆரணங் கூறி வாழ்த்தி, யமைதியாங் குடிலில் ஏற்கப்
பாரணங் கீன்ற தூய பாக்கியன் இனிது சென்றான்.

சாந்த முனிவர் ஆசிரமம்

கலகலப் பாகப் புட்கள் கனிவிருந் துண்டு பாடிக்
குலம்வளர் குஞ்சைக் கொஞ்சிக் கூடுகள் கட்டி வாழும் ;
கலையினங் கட்டி லாத கன்றினத் துடனே யாடும்,
இலையினக் குடில்கள் காணும் சோலையொன் றெதிரே கண்டான்

ஆலுடன் வேம்பும் கூடி யாக்கிய நிழலிற் காணும்
வேலுடன் அமைந்த கூரை வீட்டினுள் வீற்றி ருக்கும்,

சால்புடை அந்த ணாளன் சாந்தமா முனிவன்; அன்னோன்
கால்படு தூசியாமோ கணக்கிலா நூற்கு மூாமே!

உளங்குளிர் காட்சி யாளன், ஒருமையி லூன்றி நாளும்,
வளங்கொளுந்தவத்தின்மிக்கோன், வாய்மையே வடிவமானோன்
விளம்பர மெதுவு மின்றி வியன்செயல் பலவுஞ் செய்தோன்,
இளம்பொலி வுடைய மூத்தோன் இருடிகட் கிறைவ னாவான்.

முன்ரகு ராமன் பின்னே இராமதா சனைய சித்தர்,
மன்னிநின் றரிய தூய மாதவம் புரிந்த சூழல்.
இன்னவன் வாழு மிந்த நிலயமே யென்னின் வேறு
பன்னுவ தென்னே யென்று பழுதிலார் பரிந்து சொன்னார்.

"பாக்கியம் பழுத்த" தென்னப் பகரவும் **புனித** *னாங்கே,*
ஊக்கிய வுவகை யோடும், உத்தமச் சீடர் ஏற்றார்.
நோக்குயர் முனிவன் முன்னே, நுவலரு மின்ப வெள்ளந்
தேக்குறத் தொழுது நின்றான், சித்தரி னுள்ளந் தேர்ந்தான்.

"உலகெலாங் கோயி லாகி, உயிரெலா மேனி யாகிப்
பலபலத் தோற்ற மெல்லாந் தன்னருட் பான்மை யாகி,
அலைமனம் அடங்கி நிற்கும், அமைதியில் ஒருமை யாகி,
நிலைபெய ராத வுண்மை நேயனே போற்றி போற்றி!"

"ஆய்வுறுங் கலைக ளெல்லாம் அருக்கன்முன்மீன்கள் என்னத்
தேய்வுறச் சுடரும் ஞானச் செங்கதிர்ப் பிழம்பே! என்றன்
வாய்மனங் கடந்த மோன வானமே! தானே தானாய்த்
தோய்வுற வுலகில் ஐந்து தொழில்புரி யருளே போற்றி !"

மாசிலான் போற்றிட மகிழ்ந்து **மாமுனி**
"காசினிக் கருட்சுடர் காட்ட வந்தனை,
தேசுற வாழ்கநீ தெய்வ மைந்த" வென்
றாசிகள் கூறினான், அன்பு பொங்கியே!
"வந்தனை தசரத ராமன் வந்தநாள்;
சிந்தனைக் கினிய நீ; செகத்தின் மிக்கநீ,
முந்தவன் கார்முகம் முடித்த செய்கையை
இந்தநாள் யோகத்தால் இயற்றுவாய்" என்றான்.

"கலியனென் றொருபெருங் காதகப் பதர்,
அலகறும் அரக்கரை அதர்ம வீரரைப்
புலிநரிக் கூட்டம்போற் புகுத்தி யிங்குமே
கலகங்கள் செய்வதைக் காணுவா" யென்றான்.

"செருக்குடன் பீரங்கித் திமிரும் கொண்டவன்,
உருக்கினால் உலகினை வெல்லும் உள்ளத்தான்;
கறுக்கொண்டு மாந்தரைக் கருவ றுத்திட
உருக்கொண்ட மாவலிக் குடந்தை யானவன்."

"இன்றுநீ யிலகிடு மிவ்வி டத்திலே,
அன்றிருந் தரக்கரை யழித்த ராகவன்,
ஒன்றியுன் னுளத்தினில் ஊன்றி நல்லறம்,
வென்றிட வருள்" கென விரதன் கூறினான்.

முனியுரை வாசகம் முற்றுங் கேட்டு, நம்
இனியனும் இனிவரும் வினையை யெண்ணியே
"கனிதவ முற்றிய கரும வீரனாய்ப்
புனிதவுன் னாசியாற் பொலிவன்" என்றனன்.

"தூண்டிய கருமமுந் துணிந்த தைச்செய
வேண்டிய தருமமும் விளங்க வூக்கிடும்
மாண்டகு ராமனின் மாண மெய்க்கதை
ஈண்டெனக் கிசைத்திடின் இனிய தா" மென்றான்.

"அன்னதே யின்றெனக் கமைந்த பாக்கியம் ;
மன்னனும் அமைச்சனு மனமு வந்துடன்
என்னுடை யெளியநல் விருந்தை யேற்" கெனும்
முன்னரே யொருதிரு முகம்வந் தேற்றதால்.

மங்கலப் புன்னகை மலர்ந்த பொன்முகம்,
பங்கய வேல்விழி, பவள மூரல்வாய்,
பொங்கிள மயில், குயில், அன்னம் போன்றவள்
புங்கவன் அருளினிற் பொலியுங் **கௌரியே.**
நீண்டநாள் அறிந்தவன் போல நின்மலன்
காண்டலுங் கருத்தினைக் கவர்ந்த கண்ணினாள்,
ஈண்டிய வுவகையள், இனிய தேனுபோல்
வேண்டிய வேண்டுமுன் விரும்பி யீந்தனள். 120

முக்கனி யமுதினை, முதிர்ப ருப்பினைப்
பக்குவ மாக்கிய பச்சி லைகளை
அக்கணங் கறந்தநல் லாவின் பாலினை
இக்குவின் சாற்றுடன் இனிது தந்தனள்.

அமுதளி யமுதினை யமுது செய்தவர்,
குமுதநாண் மலர்நகை கொண்டு சென்றதும்,
அமைதியால் அவரவர் அலுவல் ஆனபின்,
சமரச முனிவனைச் சார்ந்து கேட்டனர். 128

18. இராமாயணப் படலம்

கதைதரு முனிவன், செஞ்சொற் கவிக்கலை தந்த கம்பன்,
விதவித நீதி சொல்லும் வித்தகத் துளசி தாசன்,
மதிமிகு புலவர், நாட்டு மக்களெல் லாரும் போற்றித்
துதிமிகும் இராம நாமம் சொல்லுவார் வெல்லு வாரே.

நிலமகள் இயற்றி வந்த நீண்டபுண் ணியங்க ளெல்லாம்,
நலமுறு மிராம னென்னு நாமத்தால் அவதரித்து,
கலகமுங் காமநோயுங் கடுந்தவச் செருக்கும் பூண்டார்
பலமதை நலித்த றத்தைப் பாலித்த சரிதை கேளீர்!

அறம்பொருள் இன்பம் வீடென் றருமறைப் பொருளைநாட்டி,
மறந்தரும் அரக்கர் தொல்லை மறைந்திட வில்லை யேந்தித்
திறந்தரு முனிவர் கூடிச்செய்தவம் பலிக்க வேண்டித்
துறந்தறங் காத்தராமன் சொல்லுதற் கினிய நாமன்.

இராவணன்

செவ்விய கேள்வியாளன், சிவனிடம் வரங்கள் பெற்றோன்,
ஒவ்வருந் தவத்தின் மிக்கான், உயர்மலை பெயர்க்க வல்லான்,
அவ்வியம் காமங் கோபம் அகந்தையின் வடிவ மானான்,
இவ்வுல கதிர வைத்த இராவணன், இலங்கைக் கோமான்.
கைகசி விச்சிர வசுவைக் காமுற

எய்திய மூத்தவன், இவன்பின் வந்தவர்—
மெய்ம்மனக் கும்பகன், விரகச் சூர்ப்பணை
செய்யவி பீடணன் சிறந்த சிந்தையான்.

குணத்திலுந் தவத்திலுங் கொடிய கொள்கையர்,
நிணத்திமிர் பிடித்தவர் நிருத ராயினார்
இணக்கமும் வணக்கமு மெய்தி, யிந்நிலந்
துணுக்குறக் கிளர்ந்தனன் சூழ்ச்சி மிக்கவன்.

கலைமிகக் கற்றவன் சாம கானனாம் ;
தலையினைத் தந்தும்வெந் தவமி யற்றினோன்;
மலையினைச் சிலைசெய்த மங்கை பாகன்பால்,
அலைவறு மாயுளும் வாளும் ஆர்ந்தனன்.

தேவரு மாந்தருஞ் செய்ய தூயரும்,
யாவரும் வெருவிடத் திக்கின் யானையும்
சோவுறத் துன்பமே துணிந்து செய்தனன்,
தாவுறு மனத்தினைத் தடுக்க லாற்றிலான்.

வன்பகை விளைப்பதும், ஒருவன் வாழவே
மன்பதை பதைத்திட வதைகள் செய்வதும்,
அன்பதை யறிந்தர சாள வேண்டிலார்
புன்பகை நெஞ்சினிற் போந்த போரன்றோ?

நீதியும் இரக்கமும் நேர்மை யும்இலா,
வேதியன், வேதத்தை விளம்பக் கற்றவன்,
பூதல மெங்குமே புகழ்கண் டின்புற
வாதனை யாகிய வழியைப் பற்றினான்.

கடக்கரும் இலங்கையைப் பாது காத்தபின்,
வடக்குறு தண்டக வனம் வரைக்குமே
அடக்குறு முறைகளுக் கடிமை செய்தனன்
விடக்கரும் பாம்பெனும் வெய்யர் சேனையால்.

காற்றிற்குங் கடலுக்குங் ககன ராசிக்குங்
கூற்றிற்குங் கட்டளை குறிக்க முன்னின்றான்
நாற்றிசை மனிதரை நரரென் றெள்ளினான்
போற்றிய பொருவலி யரக்கர் போற்றவே.
கோபத்தைப் பெருக்கிய கொடிய வாழ்வினால்
ஆபத்தைப் பெருக்கினன் ; ஆன்ற சான்றவர்
சாபத்தைப் பெருக்கினன் ; சதைச்செ ருக்கினாற்
பாபத்தைப் பெருக்கினான் பகைபெ ருக்கினான்.

அதஞ்செயும் அரக்கனை யடக்கி வீழ்த்திட
நிதந்தவ முனிவரு நிகரில் வீரரும்
கதந்தர வெழுந்தனர்; கனலைப் போல்வளர்
சுதந்தர வுணர்ச்சியுந் தோல்வி காணுமோ?

இடருறு முலகெலாம் “இனிச்செ யலிலோம்
கடவுளே வந்தெமைக் காப்ப துன்பரம்,
விடுதலை விடுதலை” என்று வீறிட்ட
கடுமையே கார்முகங் காட்டி வந்ததால்.

மன்னுயிர் நன்மையே மகுடந் தாங்கிடுந்
தன்னுயிர் நலமெனுந் தசரதப் பெயர்

மன்னவன் மரபொளிர் மைந்தர் நால்வருள்,
முன்னவன் **இராமனக்** கருணை மூர்த்தியாம்.

ஈன்றனள் இராமனை யினிய கோசலை;
ஈன்றனள் பரதனை யிளமென் கைகசி;
ஈன்றனள் சுமத்திரை இலக்கு வனுடன்
சான்றவர் போற்றிடச் சத்து ருக்னனை.

குவலயம் வருந்திய கொடிய துன்பங்கள்,
கவலைகள் யாவையும் கதிர்முன் வெண்பனித்
திவலைக ளாயின; சேம மேயினி
நவிலுவ மென்றனர் நல்ல வீரரே.

வன்றவன் வரமுனி, வன்புலன்களை
வென்றவன், ஆத்தும வீரன், யோகத்தில்
ஒன்றிய வசிட்டனே, உயர்ந்த கல்வியை
நன்றிளஞ் சிறுவர்க்கு நல்கி னானரோ.

அன்றிளம் இராமன்கை அம்பும் வில்லுமாய்
நின்றதைக் கண்டவர், "நிருதர் யாவரும்
பொன்றினர்............ பூமகள் புண்ணியங்களே
வென்றன" என்றனர், வென்றி வீரனால்.
அருங்கலை யகலமும், அறிவின் ஆழமும்,
ஒருங்குயர் ஒழுக்கமும், ஓங்கு மைந்தரைப்
பெருங்களிப் பெழுந்திடப் பேணுந் தந்தைபால்,
வரந்தரு கௌசிகன் வந்து நின்றனன்.

"அன்புடன் மக்களை யாளுங் காவலா,
வன்பகை யரக்கரென் மகங் கலைக்கின்றார்,
உன்முதற் செல்வனை யுதவு வாயுடன்,
என்வினை வென்றிடும்" என்று சாற்றினான்.

"கண்ணினும் உயிரினும் காதல் செய்மணி
வண்ணனை யொருகணம் பிரிந்து வாழ்கிலேன்.
எண்ணிய கருமத்தை இயற்ற நானுளேன் ;
திண்ணமி தென்றனன்" திகைத்த தந்தையே.

கேட்டதே கேட்டிடக் கேடில் மாமுனி
வாட்டத்தைத் தவிர்த்திட வசிட்டன் மெய்யுரை,
கோட்டமில் மனத்தனாய்க் கொண்டல் வண்ணனைக்
காட்டக முனிவனின் காப்பி லீந்தனன்.

பிரிவறு தம்பியும் பின்றொ டர்ந்திட,
நரிபுலிக் காட்டிடை நடக்கு மெல்லையில்,
கரிபொரு தாடகி, கண்ட மூவரை
எரிபசிக் கடைப்பனென் றெதிர்ந்து சீறினாள்.

"கொல்" எனக் குருமுனி, கொடியள் மார்பிலே
சொல்என இராமனின் சுடுச ரம்புக,
நல்லருள் கூடிட நலியுந் தீமைபோல்,
பொல்லவள் வீழ்ந்தனள் புழுதி மண்ணிலே.

"பின்னுறும் பேரிசை பெருகுஞ் செய்கையை
முன்னுற விளக்கினை. மூரி வில்லனே,
என்னுடை யாசிகள் ஏற்" கென் றேமுனி

தன்னுடை மந்திரக் கணையுந் தந்தனன்.

வீழ்த்திச்சு பாகுவை விரிக டலிலே,
ஆழ்த்திமா ரீசனை அம்பின் வேகத்தால்,
காத்தனர் இருவருங் கண்ணிமை யென
வாழ்த்திடு முனிவரன் வளர்த்த வேள்வியை.
மகத்தினை முடித்தபின், மனதிற் பற்றறச்
சகத்தினைத் தாங்கிடுஞ் **சனகன்** "என்னகர்
அகத்தியம் வருக" வென்றழைக்க, மாமுனி
உகப்புடன் செல்வரை யுடன்கொண் டேகினான்.

செல்வழி, செம்மலின் சேவ டித்திறன்
கல்லுறும் அகலிகை யுயிர்க்கக் கண்டதால்,
தொல்முனி சாபத்தைத் துடைத்த தேவனை
நல்லணங் கிவ்வகை நவின்று போற்றினாள்:

"விண்ணர சிந்திரன் வேட்கை கொண்டதால்,
பெண்ணறம் பிழைத்தனன், பேதை செய்கையைக்
கண்ணுறு கௌதமக் கணவன் சாபத்தால்
மண்ணினிற் கல்லென மாறி நின்றனன்.

"கார்மணி வண்ணனே, கருணைக் கண்ணனே,
பார்தொழும் வள்ளலே, பதும பாதத்தின்
ஓர்துகள் பட்டிட வுயிர்த் தெழுந்தனன்
தீர்வதென் பாபமும் ; திருந்தி வாழ்கின்றேன்..."

இல்லறத் திருவினை யில்லஞ் சேர்த்ததும்,
செல்வரும், தவமுனி செப்புங் காதையால்,
ஒல்லையிற் றொலைகடந் துயர் மணிக்கொடி
நல்வர வேற்றிடு மிதிலை நண்ணினார்.

சகத்தினை யறிந்தவன் ; சகச ஞானமாம்
சுகத்தினை யறிந்தவன் ; சுடரும் பேரின்பம்
இகத்தினில் அரியணை யிருந்த தன்னவன் ;
மகத்தினிற் பெரியவன் சனக மன்னனே.

ஆயவன் முகமலர் அன்பு கூறிடத்
தூயனைக் குமரரைத் துதிகள் சொல்லியே
ஏயநன் முறையினில் ஏற்று, நட்பினால்
நாயமா யறிவன நன்ற றிந்தனன்.

"நல்லறம் பெருகிடும், ஞாலமின்புறும்
இல்லறம் பெருகுமென் இளமென் சீதைக்கும்—
வல்லநீள் வில்லொன்றை வளைக்க வல்லையேல்,
தொல்பெரும் அயோத்தியின் சோதி மைந்தனே !
இட்டமி" தென்றிடச் சனகன், ஏறுபோல்
சட்டெனத் தாவியி ராமன் வில்லினைப்
பொட்டென வளைத்தனன் ; கணையைப் பூட்டுமுன்
பட்டென முறிந்ததப் பண்டை வில்லுமே !

வீரரும் வேந்தரும் வியந்து போற்றியித்
தீரனே யமைந்தவன் சீதைக் கென்றனர்.
வார்முர சியம்பின; மணவி ழாவணி
ஊரெங்கும் விளங்கின; உளங்கள் பூரித்த.

கேட்டதுந் தசரதன் கிளர்ந்து பொங்கிக்கொண்
டாட்டமும் பாட்டமும் அணியுஞ் சூழ்ந்திட
நாட்டுடன் மிதிலையை நண்ணிச் சீதையை
வேட்டிடும் வீரனை "மெய்ய, வாழ்" கென்றான்.

ஆரழ கனைத்துங் கூட்டி அருளமுதுடனே வேதா
வாரிசத் திருவின்மிக்க வடிவினை யமைத்த தன்னாள்,
பூரண மதியு மானும், பொன்னிள மயிலும் போன்றாள்,
தீரனுக் கேற்ற கற்புத் தீபமே யனையாள் சீதை.

கற்பகக் கனிபிழிந்து காதலின் கலையளாவி
அற்புதக் கவிகள் காணும் அருட் சுவைபலவுங் கூட்டி
நற்பொரு ளழகுமேவு நலங்கிளர் இலக்கியம்போல்
விற்புய வீரன் வேட்கும் சீதையும் விளங்கினாளே.

வாய்மையுந் திருவும், வீர வடிவுகொண் டறத்தைக் காக்கத்
தாயுளம் பூண்டு வந்த தசரத ராமன், அன்பர்
நேயன், அதருமக் காட்டை நீறுசெய் கனலே யன்னான்,
மாயிரு ஞாலம் தெய்வ மணியென வணங்குந் தீரன்.

கண்களாற் கண்ட போதே, காதலாற் கருத்தொன் றான
பெண்சக்தி வீர ராமன் இருவரும் பிரியா தொன்றிப்
புண்ணிய யோகம் போகம் பொருந்திய காட்சி போன்றார்
மண்ணுல கெல்லாம் வாழ்த்தி மங்களங் கூற மாதோ !

இவ்வணந் தம்பி மாரும் இல்லற மேற்ற பின்பு
திவ்வியக் கோலங் கொண்டு திரும்புழி, பரசுராமர்
வெவ்விய செருக்கை ராமன் வீழ்த்திட, வெற்றியோங்கிச்
செவ்விய நகரஞ் சேர்ந்து, சேமமாய் வசித்தார் சின்னாள்.
யாக்கையும் அதனைச் சுற்றும் யாவையும் குமுறுங் காலத்
தீக்கிரை யாகுமென்று தெரிந்தறம் புரிந்த **தந்தை,**
வாக்குயர் அமைச்சர் ஒப்ப, மணிமுடி மகனுக் கீந்து,
நோக்குயர் யோகஞ் செய்ய நோக்கினான் பிறவி தீர.

நீடுலாம் அரச நீதி நெறியினை வசிட்டன் சொல்ல,
நாடெலாம் இராம னாளு நாளெதிர் பார்த்து வந்து,
வீடெல்லாம் விருந்து செய்ய வீதிகள் அலங் கரிக்க,
கேடெலாங் கொண்டு வந்தாள் கெடுமனக் கூனியந்தோ!

வாட்டிய பொறாமைத் தீயைக் கைகசி மனத்தில் மெல்ல
மூட்டி "நீ தசரதன்பால் முன்னிரு வரங்கள் பெற்றாய் ;
நாட்டையுன் மகனே யாள நம்பியும் பதினான் காண்டு
காட்டினை யாளச் செய்வாய் கணவனைத்தூண்டி" என்றாள்.

சாகசத்தாலே யன்புத் தலைவனை வசப்படுத்திக்
கேகயி வரத்தைப் பெற்றாள்; இராமனுங் கேட்கச் சொன்னாள்;
சோகமுற் றயர்ந்த தந்தை சொற்படி காடு செல்லத்
தாகமுற் றெழுந்தான்; வீரத் தம்பியுஞ் சினந்தெழுந்தான்.

பெண்மொழி கேட்டுத் தந்தை பிதற்றினான். எதிர்த்து நிற்கும்
விண்ணையும் வீழ்த்தி யுன்னை வேந்தனாய்க் காண்பல் யானே;
அண்ணனீ யாள வேண்டும்; அரணியம் செல்ல வொட்டேன்.
எண்ண நீ மாற்றி" டென்றான் **இலக்குவன்** அலக்க ணுற்றே.

"நல்லதே சொன்னான் எந்தை, நல்லதே செய்தாள் எந்தாய்;

நல்லதே விளையு மின்று நாடிகந் தடவி சென்றால்;
அல்லலைப் போக்குந் தூய தவப்பயனாகும்; இந்த
வில்லிற்கு மினிதே தம்பி! வெகுளலை” யென்றான் வீரன்.

‘நானுன்னைப் பிரியே’ னென்று நடந்தனன் இளவல் பின்னே,
‘நானுடல் உயிர் நீ ’ யென்றே நடந்தனள் சீதை முன்னே;
ஏனையோர் மனதை யாற்றி, இடர்க்கண்ணீ ராற்றைத் தாண்டி,
மோனஓங் காரம் போல மூவருங் கானஞ் சென்றார்.

இழந்தனர் மக்களின்பம், இழந்த தயோத்தி சாந்தம்,
இழந்தனன் இறைவன்ஆவி இத்ததி; **பரதன்** வந்தே,
இழந்தனன் பொறுமை; அண்ணல் ஏகிய வழியே சென்றான்,
இழந்தனள் இடர்கட் கெல்லாம் இறைவிகை கேசி யெல்லாம்.
பக்தியும் பணிவு மிக்க குகன்விடும் படகி லேறி,
முத்திறை கங்கை தாண்டி, மூவரும் வனம் புகுந்தே,
சித்திர கூடந் தன்னிற் சிந்தையற் றிருக்கும் போது,
சத்தியப் பரதன் வந்து சரண்புகுந் தினைய சொன்னான்:—

“அன்னையென் றென்னைப் பெற்றாள், அறிவிலி யாசைப் பேயே;
என்னுயிர்க் கின்னல் செய்தாள்; என்னுயிர் தன்னின் மிக்க
உன்னுயிர்க் கின்னல் செய்தாள்; உன்னிடை யுயிராந் தந்தை
தன்னுயிர் பிரித்தாள்; இன்று தருமமுங் கலங்கும் அண்ணா !

அரசினை யாளவாராய் அண்ணலே; காட்டி லேயுன்
மரவுரிக் கோலங் காணேன், மனதுசற் றிளகா யாகில்,
விரதம்பூண் டிளவ லோடுன் பணிசெய விருப்ப” மென்னும்
பரதனைத் தேற்றி நம்பி பரிவுட னினைய சொன்னான்.

“கோதிலாய், தந்தைசென்றார், கொடியனேன் பெயரைக் கூவி;
மாதவஞ் செய்தோர் சொல்லை மறுவறக் கடைப்பிடித்தே
போதரு வேன யோத்தி; புரிதிநீ யரசெ” ன் றீந்த
பாதுகை சிரத்தி லேந்திப் பரதனுந் திரும்பி னானே.

அண்ணலின் பாதரட்சை யரியணை வகிக்க நாளும்,
கண்ணுகு நீரி னாலே கழுவிநாண் மலர்சொ ரிந்தே,
புண்ணியப் **பரதன் நந்தி கிராமத்தில் விரதம்** பூண்டு
மண்ணறங் காத்து மன்னன் வரவினைப் பார்த்தி ருந்தான்.

வற்கலை யணிந்த தூயர், வனம்வனந் திரிந்து, யோக
நற்கலை யணிந்த சித்தர் நல்வர வேற்றுப் போற்ற,
முற்கலைத் தமிழளித்த முனி, மொழி யுடனே தந்த
பற்பல பகழி தாங்கிப் பஞ்சமா வடிய மர்ந்தார்.

பூரண யோகஞ் செய்யும் புண்ணிய முனிவர் கூடிப்
பூரியர், அரக்கர் செய்யுங் கொடுமையைத் தாங்கமாட்டோம்
கார்நிகர் கருணை வள்ளால் காப்பதுன் பாரம் என்ன
வீரனும் வில்லு யர்த்தி விளம்பினான் அபய வாக்கே !

“திண்புய முண்டு; வீரத் தினவுறு வில்லும் உண்டு;
பண்புறு சொல்லுமுண்டு; பழுதறு தரும முண்டு;
தண்புவி வாழத் தீய தறுகணர் வீழக் காலம்
அண்மையில் வந்த தாலே அஞ்சலீர்; அபய மீந்தேன் !
வேதத்தைப் படித்தோ ரேனும், வேள்விகள் செய்தோ ரேனும்,
பூதலம் வென்றோ ரேனும், புகழ்பலபடைத்தோ ரேனும்,
நீதியுங் கற்பு மில்லா நீசரை நீறு செய்தும்

வேதனை தீர்ப்பேன் இந்த விரதமென் சரித" மென்றான்.

எண்டிசை யெதிரொ லிக்க வியம்பிய சபதங் கேட்ட
தண்டக வனத்தி லுள்ள தவமுனி வோர்களெல்லாம்,
"பண்டறங் காக்க வந்த பகவநீ வாழ்க! வீரக்
கொண்டலேவாழ்க!உன்னாற் குறையிலோம்" என்று சொன்னார்.

கண்ணிலாக் காம நோயே காதகக் குல மழிக்கப்
பெண்ணுருத் தாங்கிச் **சூர்ப்ப ணகை**யெனும் பெயரும் பூண்டு
மண்ணிடைப் பிறருக் கான மாதரை யன்னை யென்றே
யெண்ணுறு மிராமன் முன்னே யிளநகை புரிந்த தம்மா !

காவியப் புலவர் செய்யுங் கற்பனை கடந்த தீரன்,
ஓவியப் புலவர் காணா வுட்புற வழகன் மேலே,
ஆவலாய் வந்தாள், ஆசை அவலமாய்ப் போகச் சீதா
தேவியைக் கொல்ல வெய்ய தீவிழி பார்த்து நின்றாள்.

வம்புசெய் யரக்கி மாயம் வார்த்தையால் அடங்கா தென்றே
தம்பி,மூக் கறுத்தே யோட்டித் தமயனின் மானங் காத்தான் ;
வெம்பிய மூளி மீண்டும் வெங்கர தூட ணாதிக்
கும்பலைத் தூண்டி விட்டாள்; கோதண்ட விருந்திற் கம்மா

பொம்மெனப் பொருதத் தீயர் பொடிபட முடித்தான் வீரன்
இம்மெனச் சினந்த ரக்கி யிலங்கைசென் றண்ணன் முன்னே,
விம்மினாள்; விளைந்த தெல்லாம் விளம்பினாள்; "அந்த வீரச்
செம்மலென் கணவ னாகச் சீதையைக் கொள்வா" யென்றாள்.

"பூதலம் போற்றுகின்ற பூவையர் திருக்க ளெல்லாம்
சீதையாய்ப் போந்த தந்தச் சித்திரத் தெழுத வொண்ணா
மாதினைக்கொணந்தாயாகில்,வாழ்ந்துபோம் இலங்கை" யென்று
போதனை புரிந்தாள்; அண்ணன் புத்தியுங் கெட்டதம்மா!

"மலைபெயர் வீரன்; யானம் மாதினைப் பெயர்க்க வல்லேன்
கலைதெளி புலவன், அன்னாள் காதலைப் பெறவும் வல்லேன்;
இலையொரு தடையிங் கென்னை யெதிர்ப்பவ ரில்லை"யென்றே
தலைகிறு கிறுக்குங் காமத் தணலெழ விரைந்து சென்றான்.
பிறகுறும்போரையெண்ணான்பெண்மையின்சிறப்பையெண்ணான்
உறவுள தங்கை நாசி யுரைத்திடும் கருத்தை யெண்ணான்,
அறமறு காம நோயால், அறிவிழந் தரக்க னுள்ளம்
பிறமனை புகுந்த போதே பிடித்தது சனிய னம்மா !

மானத்தை யுதறியே, விமானத்தி லேகி, **மாய
மானை**விட் டதைத்து ரத்தி, மான்விழி மணாளன் ஏகத்
தானொரு துறவி வேடந் தரித்தொரு நொடியிலிங்கே
சானகி தனைக் கொணர்ந்து, சாந்தமா யிருக்கச் சென்றான்.

வந்தது, சீதை நெஞ்சைக் கவர்ந்தது மாய மானும்;
பிந்துறு சூழ்ச்சிநோக்காள் "பிடித்ததைத்தருக" வென்றாள்,
தந்திர மானுந் தாவித் தாவிமுன் னோட, ராமன்
பந்தெனத் தாவிச் சென்று பாணம்விட்டதனைக் கொன்றான்.

நெடுநெறி யிழுத்துச் சென்றே யிளவலை நீளக் கூவிச்
சடுதியிலிறந்த மானின் சத்தங்கேட் டுலைந்த சீதை
"கெடுதலே வந்த தாங்கே கேள்வனே கூவுகின்றான் ;
கடுகிடு கொழுந்த" வென்றே கட்டளை யிட்டா ளம்மா

இராவண சந்நியாசி

சினமும் காமமும் சேர்ந்து கலகஞ்செய்
மனமறைத் தொரு மாயத் துறவியும்,
தனிமை கண்டு சானகியை யண்மிமுன்
இனிமை பேசி யிராவணங் காட்டினான்.

சாமி யென்றுப சாரஞ்செய் தாயினைக்
காம ராட்சசன் கையுடன் அள்ளியே
பூமி யஞ்சிடப் பூவை புரண்டழ
நாம வேலை யிலங்கையை நாடினான்.

வீர நண்பன் சடாயு “விடேன்” எனப்
பார் மகளை விடுவிக்கப் பாய்ந்தனன்:
ஓரி ரத்தத் துளியுள மட்டிலும்
போர் கொடுத்துப் புகழினைத் தாங்கினான்.

தாவு மான்விழத் தம்பியும் வந்ததும்
தீவி னையெனச் சீதை மணாளனும்,
காவலற்ற குடிலைக் கடுகினான்,
“ஆவி போயது வே!” யென் றலறினான்.
கானின மரங்காள்; செய்ய கனியுண்டு பாடும் புட்காள்!
மானிளம் பிணைகாள்! மஞ்ஞை வளர்கலை யருவி யீரே!
வான்சுடர் மணிகாள் உங்கள் வனப்பினும் வனப்பு மிக்க
தேன்மலர்த் திருவென் சீதை சேர்திசை யறிகிலீரோ?

ஓடினான்; அங்கு மிங்கும் உயிரனை யாளைக் கூவித்
தேடினான்; உயிரொ டுங்குஞ் சடாயுவாற் செய்தி கேட்டு,
வாடினான்; அள்ள வந்த கவந்தனை மடித்தான்; அன்பு
கூடிய சபரி வாழுங் குடிலினை யணுகினானே.

பாதையை நீவிநாளும் பாங்குற விறகுவைத்துத்
தீதறத் தொண்டிசைத்த திருவினாள் **சபரி** வந்த
சாதியைப் பாரான் அன்புத் தன்மையைக் கண்டுவந்து
மாதவ **மதங்கன்** ஏற்று மகிழ்வுறப்புகழ்ந்து சொன்னான்:

அன்பினாற் புனிதமானாய் அன்னையே நினது தொண்டின்
பண்பினால் மனம் பழுத்துப் பக்குவமானதாலே
இன்புடனிருத்தி யிங்கே இராமனே விருந்தாய் வந்து
தின்பனுன்கனியை முத்தி சேர்ப்பனென்றருளினானே.

வந்தனன் இராமன் ; முன்னே வணங்கி நற்கனி விருந்து
தந்தனள் சபரி முத்தி தந்தனன் கருணை வள்ளல்
அந்தநல் லாளும் ஆங்கே வானரர் ஆளும் குன்றை
முந்து நீரடைவீர் வெற்றி முகிழ்க்குமென்றிசைத்துச் சென்றாள்.

மலைவளர் மல்லர், வீர **வானரர்** ; சுயேச்சை மிக்கார்;
கொலைவளர் கொடுங்கோ லுக்குக் கூற்றனார்; அரக்கர் வாழும்
அலைவளர் இலங்கைக் கோமான் அஞ்சிடும் ஆண்மை யாளர்,
நிலையறம் வாழவாழு நெறியினிற் சிறந்தார் மன்னோ !

மதிமிகு பலவான் வீர **மாருதி** யெம்பி ரானைத்
துதியுடன் வணங்கி, “யெங்கோன் சுக்கிரீ வனுக்கு மூத்தோன்;

கொதிமன வாலி, செய்யுங் கொடுமைதீர்த்தருள்க" வென்னக்
கதிதரும் வள்ளல் "அன்பீர், சுதந்தரங் காண்பீர்" என்றான்.

தாரத்தைக் கவர்ந்து, தம்பி தலையையுங் கொய்ய வேயாங்
காரத்தைக் காட்டிப் போர்செய் கடுமன வாலிதன்னை,
வீரத்தைத் தீட்டி, யம்பால் வீழ்த்திச்சுக் ரீவ னுக்கே
காரொத்த கருணை நாதன் கனமுடி சூட்டி னானே.
நன்றியும் நடையு மிக்க நண்பனாம் சுக்கி ரீவன்,
வென்றிசெய் யிராம னாணை விருப்புடன் சிரமே லேற்று,
வன்றிறல் கொண்ட வீர வானரப் படையை விட்டான்;
தென்றிசை **அனுமான்** சென்றான் சீதையைத் தேட மாதோ! 340

ஆழியான் ஆழி பெற்றே ஆழியை யனுமன் றாண்டி
ஊழ்வினை சூழி லங்கை யூரெலாந் தேடித் தேடி,
பாழ்மன வரக்கன் சோலை பத்தினித் தெய்வங் கண்டு,
"வாழியி ராம" னென்றோர் மரத்திடை மறைந்தி ருந்தான்.

வெய்யவா ளரக்கிமாரின் வெருவுறு துன்பஞ் சூழ
ஐயனை எண்ணியெண்ணி யகம்புறம் வருந்தி நோகத்
துய்யநல் லான்மா பந்த தொந்தத்தினிடையே போலச்
செய்தவக் கனலை வீசும் தேவியை யனுமன் கண்டான்.

முட்டைக்கண்மூளியோர்பால் மூர்க்கப் பிடாரியோர்பால்
தட்டை மூக்கரக்கியோர்பால் தாடகைக் கும்பல் ஓர்பால்
மொட்டைமண்மண்டையோர்பால்முழுக்கருங்குரங்கியோர்பால்
கட்டைத் தொண்டையினார் சீதை கலங்கிட மிரட்டினாரே.

தேனமர்சோலை வீரத்திறல்மிகு தூதன் வந்தான்
மான்விழிச் சென்ற ராமன் வலியபோர் புரியவந்தான்
நான்கொண்டு வந்தமானை நாதன்கொண்டோடு முன்னே
ஊன்கொண்ட இன்பமுண்பேன் என்றுடன் அரக்கன் வந்தான்.

அரம்பையர் கவரி வீச அரிவையர் கலவை பூச
வரம்பெறும் வாளை யேந்தி, மண்ணதிர் வேகங் காட்டி
நிரம்பிய கற்பினாளை நேருக்கு நேரே பேசிக்
கரம்பிடித் திடுவேன் என்று காமுகன் கடுகினானே ! 360

பாவியர் பயமுறுத்தப் பதியினை யெண்ணி யெண்ணி,
ஆவிசோர்ந் துடலிளைத்தே யங்கணீர் பெருகி வாடுந்
தேவியை யந்த வேளைத் திருவிலி யரக்கன் பார்த்தே
நாவினா லிரந்து, பின்னே நடந்ததை யனுமன் கண்டான்.

"வெள்ளிமா மலையெடுத்தேன், வேழங்க ளெட்டும்வென்றேன்
தெள்ளிய மறைகள் கற்றேன், தேவரை யேவல் கொண்டேன்,
வெள்ளநீ ருலகை யாளும் வேந்தன்யான்; எனைக்கண் பாராய்!
அள்ளியென் சிரத்தே வைத்துன் அழகினுக் கடிமைசெய்வேன்."
அன்றுநான் வஞ்சமானை அனுப்பிவந் ததனைக் கேட்டாய்,
கொன்றந்த நரனையுன்னைக் கொணரவும்வல்லேன்; என்னின்
உன்றனாருயிரு நீங்கும் உன்னுயிர் நீங்கிவிட்டால்
என்றனாருயிரு நீங்கும் என்பதாற் சூழ்ச்சிசெய்தேன்.

நினைத்துநீ உருகும் அந்த நீலமாமுகிலன்னானை
வனத்திடைக் காணேன் இங்கு வருகையும் அரிது காணாய்,
மனிதரென் முன்னிற்பாரோ மானெங்கே சிங்கமெங்கே !
பனிமொழிப் பாவாய் என்னைப் பார் இந்தப் பார்உனக்கே.

அழகெலாந் திரண்டுவந்தாய் அமுதெலாம் அளைந்த சொல்லாய்,
குழலுடன் யாழுங்கொண்ட கிளிமொழிக் குயிலே நெஞ்சு
குழையநின் முறுவல்பூத்த குமுதமா மதியை என்பால்
பழகுறத் திருப்பின் இந்தப் பாரினுக் கரசி நீயே

தேவரும் பணிவார் உன்னை; தேவியர் ஏவல் செய்வார்,
பூவினர் போற்றுவார்கள் புண்ணியம் பார்த்து நின்றாய்,
ஆவியுன் னிடமே வைத்தேன் அரசையுன் மடியில் வைத்தேன்,
காவியங்கண்ணிற் கென்னைக் காணிக்கை யாகவைத்தேன்.

விண்ணெட்டப்புகழ்ந்துதன்னை வேட்கையா லிறைஞ்சு வானைக்
கண்ணொட்டக் காணாள்; பின்னே கதுமெனத் திரும்பிக்கையால்
மண்ணொட்டுந் துரும்பெடுத்து வீசித்தன் மனத்தில் வேகும்
புண்ணொட்டும் சொல்லைச்சொல்லிப்போவென்றாள் புனிதசக்தி

"சீதையே சித்தம் வைப்பாய்" என்றினுந் தீயன் காமப்
போதையி லுளறி நின்றான். பூமகள் துரும்பைப் பார்த்தே,
"சீதையை யன்றுன் சீரும் தேசமும் சாம்ப ராகும்
தீதனைத் திருடி வந்தாய், திருவிலி போபோ" வென்றாள்.

"புண்ணியன் அற்றம் பார்த்துப் பொய்த்துற வேந்தி யென்னை
மண்ணுடன் பெயர்த்து வந்து மார்தட்டிப் பேசுகின்றாய்.
விண்கதிர் மலர்த்தும் பூவை மின்மினி மலர்த்த லுண்டோ?
பெண்மையின்பெருமைகாணாய் ஆண்மையின்பெருமையில்லாய்.

பத்தினி யினைய சொல்லப் பதகனும் "திங்க ளொன்றில்
சித்தம்வைத்திலையேல், உன்னைச் செறுவ" னென்றுருவி நீண்ட
கத்தியைக் காட்டிச் சென்றான். கலங்கிய கற்புத் தெய்வம்,
அத்ததி இராம நாமம் கேட்டனள்! அனுமன் வந்தான் !

ஆழி கண்ட தேவி !

"அன்னையே இராம தூதன், அனுமன்யான், காண வந்தேன்;
உன்னையே யெண்ணி யெம்மான் உளந்துடித் துருகு கின்றான்;
அன்னவன் ஆழி கொள்வாய். அறிந்ததும் உனது சூழல்
அன்னரே யரக்கர் வீழ்ந்துன் அருந்தவம்பலிக்கும்" என்றான்.

இறந்தவன் எழுந்தது போலே இழந்தது கிடைத்ததுபோலே
மறந்தது நினைந்ததுபோலே மலடிக்கு மகவினைப் போலே
அருந்திடப் பசிக்கமுதெனவே ஆபத்திலுதவியைப்போலே
வருந்தினோர் மருந்தினைக்கண்ட வகையென யாழிவந்ததுவே.

கண்களில் ஆனந்தக் கண்ணீர் கருத்தினிற் கனிந்த நல்லன்பு
புண்களைப் போக்கிய மருந்து போன்றதம் மோதிரப் பொலிவே
மண்மகள் அகம்புறமகிழ்ந்தே மாருதி வீரனை வாழ்த்தி,
பண்பெறு செஞ்சொலுரைத்தே பகவனை நினைத்தனளாங்கே.

ஆழியைக் கண்ட தேவி, அங்கணில், அகத்தில் ஒற்றி
"வாழியெம் பெருமான்! வீர மாருதி வாழ்க!" வென்றாள்.
மூழ்கிய கவலை யற்று, நகைமலர் முகத்தைக் காட்டி,
ஆழியான் செய்தி கேட்டுத் தன்னிலை யறியச் சொன்னாள்.

வீரமாருதியே நீசெய் வியன்பணிக்கென்ன வேண்டும்,
கோருதியென்னச் சீதை குழைமன அனுமானாங்கே
சோருதலின்றி யின்னும் சுதந்தர ராமசேவை

சீருறச்செய்வதொன்றே சிந்தையும் செயலுமென்றான்.

நாதனை வாழ்த்திச் சூளா மணியினை நல்கி, "யின்னும்
மாதமொன் றுயிர் வகிப்பேன் வருகையை நோக்கி, உண்மை
ஓதுதி" யென்றுசொன்னாள்; உணர்ந்தன னுரைப்பேனென்று,
சீதையை வணங்கி யந்தத் தீரனும் விடைபெற்றானே.

வருகின்ற போரின் வெம்மை வஞ்சகர் அறிய...... வீரன்,
அருநிழற் சோலை முற்றும் அழித்தனன்; பகையழித்தான்,
வெருவுறு நாக பாசம் வீசிமா ருதியைக் கட்டிச்
செருவலி யரக்கன் முன்னே யிந்திர சித்தன் சென்றான்.

எரிவிழி யாலே நோக்கி, இடியென சிரித்த ரக்கன்
வரிசையாய்த் தனது சீரும் வலிமையும் வரமுஞ் சொல்லி,
"அரியகா வழித்தாய்;என்றன் அரக்கரைச் செற்றாய்;நீயார்?
தெரிவுறச் சொல்வா" யென்னத் தீரனுங் கூறினானே !
"வெய்யமா தவம் புரிந்தும், வேதவேள் விகளைச் செய்தும்,
கையினால் மலை பெயர்த்தும், கண்ணுதல் வரங்கள் பெற்றும்,
வையமும் வானு மஞ்ச வன்கொடுங் கோல் பிடித்தும்,
ஐயநீ காமத் தாலே யனைத்தையு மிழந்தா யன்றோ !"

"வன்றவம் புரிந்துங்கெட்டாய்; வாழ்ந்திட விருப்ப மென்னில்,
இன்றுநீ தேவி தன்னை யிராமன்முன் சேர்த்திரந்து,
நன்றவன் சரண்புகுந்து, நாரியர் ஆசை விட்டு
வென்றகங் காரந் தன்னை வேதிய னாவா" யென்றான்.

"ஆரடா புத்தி சொன்னாய், அறிவிலிக் குரங்கே!" யென்று
பேரிடி முழக்கஞ் செய்து, "பின்புறந் தீக்கொ ளுத்தி,
ஊரைவிட் டிவனை முன்னே ஓட்டுமின்! வருக ஓர்கை
போரினிற்காண்பேன் அந்தப் புகழ்பெறுநரனை" என்றான்.

கொளுத்திய தீயால் ஊரைக் கொளுத்திவந் துலக மெல்லாம்
களித்திடக் "கண்டேன்கண்டேன் கற்பினுக்கணியை" யென்றே
துளித்தருட் கண்ணீர் பெய்து, தூயமெய் வீரத் தூதன்,
அளித்தொளி மணியை, அண்ணல் அருளினைப் பருகி நின்றான்.

சீதைசெய் தவமுஞ் சொல்லுந் தெளிவுறச் சொல்லி, யின்னும்
"மாதமொன் றதனில் அந்த மமதைகொள் அரக்கர் வீழப்
பூதலத் தறமுங் கற்பும் வீரமும் பொலியச் செய்வோம்;
ஆதலின் எழுக சேனை" யென்றனன் அன்பு வீரன்.

இலங்கைப் போர்

ஆண்டகை யனுமன், சாம்பன், அங்கதன், சுக்கி ரீவன்;
ஈண்டிய சேனை வெள்ளம் இரைகடல் அணையொன் றிட்டுத்
தாண்டிடச் சீதை நாதன் தம்பியோ டிலங்கை சேர்ந்தான்,
மூண்டது கொடிய வெம்போர் முடிந்தது, தீயர் கூட்டம்.

மந்திரத் தலைவர் தம்மை மனப்படி நடத்தி யாளுந்
தந்திர மன்றி, வேறு தருமமொன் றறிகி லாதான் ;
முந்துகும்பகர்ணன் சொன்ன முதுமொழிகொள்ளான்; பின்னே
சிந்தனை தூய தம்பி **வீடணன்** செஞ்சொல் ஏலான்.

அறமனை யானைத் தேடி, வீடணன் அடைந் தரக்கர்
மறவினை யெல்லாஞ் சொன்னான். மாண்புறு வீர வள்ளல்,
திறமுள தூதுவிட்டுந் தேர்கிலான் அரக்கன்; காம

மறலியாட் கொண்ட பின்பு மந்திரம் பலிப்ப துண்டோ ?
எழுந்ததி ராம சேனை, எறிதிரைக் கடலைப் போலே,
எழுந்தது போர் முழக்கி இராவணன் அசுரச் சேனை.....
கொழுந்தெரி கணைகள் பாய்ந்து கொன்றன கூற்றைப்போலே.
விழுந்தனர் அரக்கர். "நீதி வெல்"கெனத் தருமம் ஆர்க்க!

பட்டனர் தலைமை வீரர், பட்டனன் கும்ப கர்ணன்.
பட்டனன் அதிகாயன்பின் பட்டனன் பாசன், அந்தோ,
பட்டனன் பெரும்போர் செய்து படைமிகு மேகநாதன்
பட்டது மூலசேனை; பட்டினும் உணரான் வெய்யோன்.

தொடுத்தபோர் நிறுத்தினாலத் தோகையுஞ் சிரிப்பாளென்றே
எடுத்தனன் சக்தி பெற்ற படைக்கலம்; "இராமன் வீழப்
படுத்ததும், எனதே யந்தப் பத்தினி" யென்று சொல்லி
விடுத்தனன் அம்பு மாரி; விதியுடன் போர்பு ரிந்தான்.

கைகளின் குப்பை, மேலே கால்களின் குப்பை, விண்ட
மெய்களின் குப்பை, வீரன் வெட்டிய தலையின் குப்பை;
வெய்யவெங் கணையின் குப்பை, மீதொரு குப்பை யாகப்
பொய்யுடல் வீழக் காற்றுப் போனது, வீணன் ஆவி !

ஆர்த்தன வெற்றிச் சங்கம்! ஆர்த்தனர் தேவர் கூடி!
ஆர்த்ததிவ் வுலக மெல்லாம், ஆயிரம் புகழி யம்பி!
ஆர்த்தனர் "ஜயராம்" என்றே வானரர்; அனுமான் சென்றே
போர்த்தொழில் வென்ற செய்திதாயிடம் புகன்றான் அன்றே.

"வென்றதி ராம னம்புன் விரதத்தீ சுட்ட வெய்யோர்
பொன்றினர், புகழுனக்கே, பூமக ளேயுன் கற்பு
நின்றது; தரும மிங்கு நிலைத்தது; நல்ல காலம்
துன்றிய துலகுக் கெல்லாம்; சோபனஞ் சொல்ல வந்தேன்."

"நிலமகள் கண்ணீர் சோர, நிறைதவர் புண்ணீர் சோரக்
கலைமகள் வெட்கக் காமன் கணையினாற் கண்ணி ழந்தே,
குலமகள் உனைக்க வர்ந்தான், கொத்துடன் குலம ழிந்தான்,
நலமிலாக் கொடுமை செய்தார், யாவரே நன்று வாழ்ந்தார்!"

"மூக்கினை யிழந்த மூளி மூட்டிய காம வெந்தீ
தாக்கிய தலையு நெஞ்சுந் தரையினில் உருண்ட காட்சி
நோக்கிடாய், கணவனன்றி நோக்குவே றில்லாத் தாயே!
வாக்கினால் இராமன் சொன்ன வாய்மையும் பலித்ததம்மா."
"கதந்தரும் அரக்க ராலே கவலைகொள் மாந்தர்க் கெல்லாம்
சுதந்தரம் அளிக்க வில்லுஞ் சொல்லுங்கொண் டவதரித்தான்;
மதந்தரும் அரக்கன் மார்பை மண்புழு வுண்ணச் செய்தான்;
இதந்தரும் தரும மன்னான் இராகவன் வாழ்க மாதோ !"

பத்தினித் தெய்வங் கேட்டுப் பரமவா னந்த மெய்திச்
"சத்திய வீரன் எம்மான் சரத்தினால், உலக மஞ்சுந்
தொத்துநோய் ஒழிந்த தென்றன் சோகமோ டசோகின் கீழே,
மெய்த்தவம் புரிந்ததாலே பெண்மையும் விளங்கிற்" றென்றாள்.

"சிந்தையிற் பெரியை; வீரச் செய்கையிற் பெரியை; ஓங்கும்
புந்தியிற் பெரியை; கற்ற புலவரிற் பெரியை; ஈங்கு
வந்தனை கடலைத் தாண்டி வரதனின் ஆழி கொண்டு
தந்தனை; தந்த போதே தருமமும் வென்ற" தென்றாள்.

“உண்மையே வயிர வாளாய், உறுதியும் அன்புங் கொண்ட
திண்மையே திரண்ட தோளாய்த் தீரமே படையாய்ச் செய்ய
வண்மையே நெஞ்சாய், நல்ல தருமமே வாளி யாகிக்
கண்ணிலங் காத்த கண்ணன் கண்மணி போன்றாய் வாழி!”

“துயர்படர் காட்டை யெல்லாந் தூருடன் சுட்டெ ரித்தே
உயர்நல மோங்க வள்ளல் உயர்த்திய கொடிபி டித்தாய்,
அயர்வற இராம நாம மாகிடும் அமுதால் இன்பப்
பயிரினை வளர்த்தாய்; தூய பண்பநீ வாழி” யென்றாள்.

தீயினுந் தூய ளென்றே தெரிந்திட விளக்கி, அன்பர்
நாயகன் கற்பின் மிக்க நாயகி தன்னை யேற்றான்;
பாய்கடல் இலங்கை யாட்சி வீடணன் பங்கென் றீந்து,
தாய்நகர் அயோத்தி சார மானத்திற் றாவிச் சென்றான். 520

பாதுகை வணங்கி யண்ணல் வரவினைப் பார்த்தி ருக்கும்
சாதுவாம் பரதன் வந்து, தழுவினன்! கண்ணீர் சோர்ந்தான்;
ஓதரு முவகை பொங்கி, ஊரினர் ஒன்று கூடி,
“மூதுல காள வாராய் முடிபுனைந்” தென்று சொன்னார்.

ஊரணி செய்து மக்கள் உளமகிழ் வெய்த நன்னாள்,
ஆரண முழங்க, ராமன் அரியணை யேறி, யோக
பூரணன் **வசிட்டன் சூட்டும் பொன்முடி** தாங்கி யிந்தத்
தாரணி வாழத் தூய தருமத்தைப் போற்றி னானே.
முடிபுனை திருவிழாவில் முகில் வண்ணன் அன்பு மேவி
அடிபுனை அனுமனுக்காங் கணிமணி மாலை தந்தான்
கடிகடித் தவனுடைத்தான்; காரணம் கேட்க ராமன்
கடவுளுன் பெயரைத் தேடிக் கனல் மணியுடைத்தே னென்றான்.

துறவியின் வேள்வி தந்த தூயநல் லவியின் வந்தான்
துறவி கோதமன் பின்சென்று தூயநல் வேள்விகாத்தான்
துறவிகட் கிறைவனாகத் துலங்கிய சனகன் பெண்ணை
அறவியல் மணம் புரிந்தான்; அரசையும் துறந்து சென்றான்.

இல்லறந்துறந்த நம்பி இனமணி முடிதுறந்தான்
நல்லரண் மனைதுறந்து நாட்டினின் றடவி சேர்ந்தான்
வில்லறந் துறந்திலாதான் விரதமாமுனிவர்க் கீந்த
சொல்லறங்காக்க வீரச் சுதந்தரப் போர் புரிந்தான்.

காதலைத் துறந்தான் வீரக் கலையினிற் சிறந்த வள்ளல்
தாதையைத் துறந்தான் ஆன்ற தருமத்தைக் காத்தராமன்
சீதையைத் துறந்தான்; என்னின் செய்கடன் இனிதுசெய்தான்
மேதகு துறவினாலே மேதினிக் கபய மீந்தான்.

வாழிய இராமன் வீரம், வாழிய சீதை கற்பு,
வாழிய இளவல் சேவை, வாழிய பரதன் அன்பு,
வாழிய அனுமன் ஆற்றல், வாழிய குகன் வணக்கம்,
வாழிய உலக மெல்லாம் அறநெறி வாழ்க மாதோ! 548

19. ஒற்றுக் கேள்விப் படலம்

அருவியுங் குருவியும் அந்தி மாமலர்,
மருவிய வசந்தமு மகர வீணையும்,
சுருதியிற் கலந்திடத் தூய காதையைப்
பருகினர் அமுதெனப் பக்தர் யாவரும்.

பொய்ப்பொருண் மயக்கினைப் போக்கி, யிவ்வகை
மெய்ப்பொரு ளுணர்முனி வேந்தர் ஞானத்தைத்
துய்த்தினி திருந்திடத் தூயன் வேண்டினான்.
அத்தகை அமைதியை அளித்த தக்கதை.

பண்புடை முனிவனைப் பணிந்து தூயவன்,
"இன்பத்தி லின்பமாம் இராம நாமத்தில்
அன்புடைத் தாஸரின் அரிய மாக்கதை
உன்புது வாக்கினால் உரைத்தி" யென்றனன்.
"காலையிற் கடன்முறை கழிந்தபின், அதே
வேலை" யென் றருளவும் விரத மாமுனி
மாலையின் கடன்முறை செய்து மன்னவன்,
சோலையில் அமைச்சுடன் சுற்றி வந்தனன்.

அத்ததி கலிநகர் அடைந்த **ஒற்றர்கள்**,
"இத்ததி யமைச்சனும், இளைய மன்னனும்
சித்திமா நகருக்குத் திரும்பிச் செல்வதே
உத்தமம்" என்றுரைத் துயிர்ப்பு வீங்கினார் !

எய்திய ஒற்றரை யிருத்திச் சித்திமான்,
செய்தியை முற்றிலுந் தெரியக் கேட்டனன்;
கைதவக் கலிநகர் கண்ட காட்சியைப்
பொய்தவிர் ஒற்றரும் புகன்று நின்றனர்.

சத்தியன் ஆட்சிக்குந் தரும வாழ்விற்கும்,
சுத்தனின் உயிருக்குந் துகளில் வீரர்வாழ்
சித்தியின் பெருமைக்கும் தேச நன்மைக்குங்
கத்தியைத் தீட்டினான் கலிய ரக்கனே.

நாவினால் அழைத்தந்த நஞ்ச நெஞ்சினான்,
கோவிளங் குமரனைக் கொடுமைக் கோட்டத்திற்
காவல்வைத் திடநெடுங் கனவு கண்டனன்,
ஆவினை வாவெனும் அரியைப் போன்றவன்.

குடியரும், பதகரும், கொலையும் அஞ்சிடும்
கொடியரும், குலங்கெடு காமக் கூத்தரும்,
தடியருந் திருடருஞ் சண்டைம் பூதத்தின்
அடியருங் கூடினால் அமைதி நிற்குமோ?

திருந்திய மனமிலாச் சிறுமை வேந்தரும்
பொருந்தினர் சிலருமப் பொய்யன் பக்கமே,
பெரும்படை கூடிய பேயர், இப்புவி
வருந்திட வெறிகொண்டு வாழ்கின் றாரையா!

வலிகொளும் படைக்கல வரிசை கண்டதுங்
கிலிகொளுந் தருமமும்; கேடு சூழ்ந்திடுங்
கலிகொளும் அந்நகர் கயவர் கூடிய
புலிகொளும் புதரெனப் புகுந்து கண்டனம்.
அணிமணி யாடைகள் சுற்றி விற்றிடும்
வணிகரைப் போலவும், வரும்பொ ருள்சொலும்
கணிகளைப் போலவும், கலிந கரெலாந்
துணிவுடன் கண்டனந் துரித மாகவே.

கரியெனப் பெருத்தவர், கண்கள் சேந்தவர்
எரிகொளு நெஞ்சினர், எமனைப் போன்றவர்,

நரியினும் வஞ்சகர்—எந்த நாட்டினர்
தெரிகிலம்—அங்கவர் திரியக் கண்டனம்.

கழுகெனப் புலியெனக் கரிய பாம்பெனக்
கொழுவன விலங்கெனக் கூடி மாந்தரை
விழுங்கிடும் போர்வெறி விம்முந் தீயரால்
அழுங்குரல் கேட்டனம் அண்டை நாடெலாம்.

"தருமமுந் தெய்வமுந் தவமும் தூயநற்
கருமமும் பத்தியும், கருணையும், பர
குருவடி சேவையும், குவிந்த யோகியின்
ஒருமையும் பேடிகள் உளறும் பொய்" யென்பார்.

இளவர சிவ்வன மிருக்குஞ் செய்தியும்
உளவினா லறிந்தனர். ஊறு செய்குவார்,
களவியற் பாதகர் கண்ப டாமலே
வளநகர் செல்வது மாண்பென் றோதினார்.

சேர்ந்த வாழ்வுஞ் சிறந்த வலிமையுந்
தேர்ந்த பாரத தேசத்தி லேகலி
சார்ந்து செய்திடுஞ் சங்கட வெவ்வினை
ஓர்ந்து **சுத்தனும்** உள்ளங் கலங்கினான்.

வாயில் வாய்மையும், வாழ்வினில் மெய்ம்மையும்,
நேய வுள்ளத்தில் உண்மையு நின்றிடுந்
தேயத்தில், அன்புத் தெய்வம் உலாவிடுங்
கோயிலிற் பகை கொட்ட மடிப்பதோ?

தீரர் எத்தனை, தேவர்கள் எத்தனை,
வீரர் எத்தனை, வேந்தர்கள் எத்தனை,
வாரம் வைத்து வளர்த்த தருமத்தைக்
கோர ராட்சச மாயை குலைப்பதோ?
கன்னக் கையுடன் கண்குவித் "தின்றினி
என்ன செய்வ"மென் றேங்கி யிளம்பிரான்
தன்னுள் ஆழ்ந்த சமயம் **அமைச்சனும்**
"இன்னலை யெதிர்ப் போ"மென் றெழுந்தனன்.

"ஒற்றர் ஏகுமின், ஒல்லையிற் சொல்லியே
சுற்றி யெங்கணுஞ் சூழ்ந்தறங் காத்திடுஞ்
சிற்ற ரசரின் சேனையை நாளையே
உற்றிடுஞ் சமர்க் குற்றிடச் செய்குமின்."

"வருக தீமன வஞ்சகர்; வந்து போர்
தருக; நல்ல தபோதனர் அஞ்சவே
அருகு செல்க; அழிக அவர்தலை
திருகுவோ" மெனச் செப்பினன் **சித்திமான்** !

ஈன்ற தாயின் இசைவளர் **சுத்தனும்**,
"ஆன்ற மாதவர் ஆசிகள் பூத்திட,
தோன்று போரிலத் துட்டரை மாருதி
போன்று நொய்யப் புடைப்ப" மென் றார்த்தனன்.

வீரங் கூறி விழிப்புந் துயிலுமாய்க்
காரி ராவைக் கழித்திரு சீலரும்
நீரி லாடி, நியமங்கள் செய்ததும்,

பூரணன் வளர் பூம்பொழி லேகினார்.

காலைக் கோர்புதுக் காந்த மளித்திடும்,
சீல மாதவர், செங்கதி ரின்றொடர்
போல மர்ந்துளப் பூசை புரிந்தனர்;
ஞாலந் தெய்வ நலம்பெற நாளுமே.

ஊது வண்டுடன் ஓது மறைகளும்
போதென நகை பூத்த முகங்களும்
காதுங் கண்ணுங் களிக்க விளங்கிடும்,
சாது சங்கத்தைக் கண்டனன் சுத்தனே.

காணக் காணக் கடவுட் பெரியரை
மாண மாண்புறு மானிட வாழ்க்கையே!
பூணப் பூணப் புனிதர் மலரடி,
ஆணவங் குறை யும்அரு ளோங்குமே.
சித்தர் கூட்டத்தைச் சேவித்துச் சேவித்துத்
தத்துவப் பொருள் சாற்றிடக் கொண்டுளம்,
சித்திமானுடன் சுத்தனுஞ் சேர்ந்தனர்
முத்தி வேந்தன் விளங்கிய முன்றிலே.

புகையுஞ் சாந்துடன் பூவு மணந்திட,
பகவன் மேலருட் பாட்டு முழங்கிட,
மகர யாழுடன் **கௌரி** வயங்கிடச்
சுகமு னிவன் கதையைத் தொடங்கினான்.

வணங்கிப் புன்னகை மாமலர் பெற்றதும்,
குணங்க ளோங்கிடுங் குன்றனை யான்முன்னே,
இணங்கி நெஞ்சம் இருவருங் கேட்டனர்.
உணர்வு தூண்டிடும் உத்தமன் காதையே.

20. இராமதாஸ் படலம்

தெள்ளிய ஞானமுந் தெய்வ பக்தியும்,
ஒள்ளிய ஒழுக்கமும், ஓங்குந் தூயவர்
விள்ளரும் பெருமையை விளம்பப் பேரின்ப
வள்ளலின் கருணையை வழுத்து வாமரோ!

நல்லன கூடியிஞ் ஞாலஞ்சீர்பெறும்;
அல்லன விலகிடும்; அறங்கள் ஓங்குமே;
இல்லதும் உள்ளதும், இனிது தேர்தவச்
செல்வரின் சேவைகள் செய்யும் அன்பர்க்கே!

பொன்னுடன் பொன்னிறப் பொலிவு போலவும்,
விண்ணுடன் விரவிய மேகம் போலவுங்
கண்ணுடன் கதிர்தருங் காட்சி போலவும்,
புண்ணிய ருடனருட் பொலிவும் பொங்குமே.

பன்னருங் கேள்வியின் பயனைக் காட்டிலும்,
தன்னுடல் வெறுத்திடுந் தவத்தைக் காட்டிலும்,
என்னதி யானெனும் இயைபில் மாதவர்
முன்னிலை யிருப்பது முத்தி யாகுமே.

பொய்ம்மன வேற்றுமைப் போரி னாற்கெடும்
வையக மாந்தர்க்கு வழியை நாட்டியும்,
வெய்யவர் வெம்மையை வென்றும், உண்மையாற்
செய்வன செய்தவர் செய்ய சீலரே !

சாதுக்கள் சங்கமே சாந்த மீந்திடும்;
சாதுக்கள் வாசகம் சகல ஞானமாம்;
சாதுக்கள் சந்நிதி சக்தி யீந்திடும் ;
சாதுக்கள் வாழிய, தரும தீபம்போல்!

புண்ணிய பாரத பூமி யெங்குமே,
பண்ணவர், மாசறு பக்தர் சங்கமே!
திண்மக ராட்டிரஞ் செழித்த பக்தரை
எண்ணிநம் கதையினை யினிது சொல்லுவாம்:

புரந்தர விடலரின் புனித பக்தராம்,
நிரந்தர **ஞானி**யும், **நிவிர்த்தி தேவ**ரும்,
அறந்தரும் **ஏக**ரும், அன்பு **நாம**ரும்,
மறைந்தபின் இருசுடர் மணிகள் வந்தனர்!

"சாதியும் வேடமுந் தருக்க வாதமும்,
பேதமும் பொய்ம்மனப் பிழையு மின்றியே,
ஓதுமின் அரியை" யென் றுரைதுகாமணிக்
கீதங்க ளீவது கேடி லின்பமே.

பக்தது காமணிப் பாடல் கேட்டதும்,
சத்திர பதிக்குப சாந்தம் வந்தது:
முத்தனி ராமதாஸ் முனிவன் காட்சியால்
சக்தியும் வீரமும் தழைத்த தென்னுவாம்.

தேசமுந் தருமமுஞ் செழிக்க வீரத்தீ
வீசிய சிவாஜியின் விமல சற்குரு,
மாசறு மாதவன் இராம தாஸனின்
ஆசறு கதையினை யன்பிற் கேண்மினோ !

பம்புகோ தாவரி பாயு நாட்டிலே,
சம்பகம் எனப்பெயர் சாற்றும் ஊரிலே,
நம்பனைப் போற்றிடு நவமி நாளிலே,
அன்பன்இ ராமதாஸ் அவத ரித்ததே.

ஆரணம் ஓதிடும் அந்தண் செல்வர்கள்,
சூரிய ரேணுகர் தூய பெற்றவர்;
நாரண னெனப்பெயர் நல்கி, நம்பியைப்
பூரணக் கலைபெறப் போற்றி வந்தனர்.
சூரிய வணக்கத் தாலே, தூயசிந் தனையி னாலே,
ஆரிய வேதத் தாலே, அனுமனின் அருளி னாலே,
தாரக ஜபத்தால், இராம தாஸெனும் பெயரும் பெற்ற
தீரனுக் கீன்றோர் நல்ல திருமணஞ் செய்யா நின்றார்.

கானமுங் களிப்பு மோங்கும் கடிமண முடிக்கச் 'சாவ
தான'மென்றாசான்சொல்லத் தப்பினேன்பிழைத்தேனென்றோர்
ஞானவீ றெழுந்து தாவி, நதியினை நீந்திச் சென்று,
மோனியாய்த் தவங்கள் செய்து, முத்தியைஅன்பன்கண்டான்.

கனிகிழங் குண்டு, வேறு கவலைக ளனைத்தும் போக்கித்
தனிமலைக் குகை யிருந்து, சபதப தியானஞ் செய்து,
மனதினை யடக்கி வென்று, மமதையை வேரின் மாய்த்து,
புனிதசுத் தான்ம சித்தி பொருந்திய மகான்கள் வாழ்க!

சமநிலை கண்ட சித்தன் சகத்தினை வெறுத்திடாமல்,
தமநிலை நீங்கி யின்பந் தழைத்திடக் கருணை பூத்தான்;

அமங்கலி அன்ன பூர்ணை அன்பனுக் காவி நல்கி
சுமங்கலி யாக நல்ல சுதருடன் வாழச் செய்தான்;

மூர்த்தியுந் தலமுங் கண்டு முறையுறப் பரத நாட்டைப்
பார்த்துநாற் றிசையும் பக்தி பரவசக் கனல் பரப்பி,
வார்த்தைசொல் குருவைத் தேடும் மாணவர்க் குபதே சித்துத்
தீர்த்தனும் கிருஷ்ணா பாயு மகூலியிற் சென்றி ருந்தான்.

இல்லற ஞானி யாகி, இசைதரு புலவ னாகி,
நல்லறத் தொண்டனாகி நாரண னருளைப் பாடும்,
சொல்லர சான துக்கா ராமனுந் தொழுது போற்றி,
எல்லையி லின்பமே யிராமதா ஸனப்பு கழ்ந்தான்.

சிவாஜி வருதல்

பத்தியு ஞானமும் பழுத்த தூயவன்,
அத்தினம் அருந்தவ மளித்த திவ்விய
சத்தியைப் பொழிந்தொரு தரும வீரனுள்,
சத்திய வாழ்வினைத் தாங்க முன்வந்தான்.

வருந்திடும் அன்னையின் வருத்தந் தீர்க்கவே,
மருந்தென விளங்கிய மராட வீரனும்,
அருந்தவன் புகழினை அறிந்து நாடினான்;
இரும்பினைக் காந்தம்போல் இதய மீர்க்கவே !
"எனதுடல் பொருளுயிர் எவையும் உன்னதே;
உனதரு ளேயென துலகும் வாழ்க்கையும்;
மனதுறு பசியினை மாற்ற மாதவக்
கனியென வந்தனை, கடவு ளேசரண்."

"தன்னலந் துறந்தனை ; தவத்தின் மேன்மையால்
இன்னுயிர்க் கருளினை இன்ப மெங்குமே!
உன்னிகர் குருவினை யுடைய பேறுடை
என்னிகர் யா"ரென இறைவன் ஏத்தினான் !

ஆவலாய் வந்துதன் அடி வணங்கிய
கோவினைக் கோமுனி குளிர நோக்கியே,
"மேவினை யென்பணி வென்ற" தென்றவன்
ஆவியிற் பெய்தனன் அருளி னாற்றலே.

ஏகுமின் னுடன்கலந் திணைந்து கூடிடும்
ஆகுமின் போன்றநல் லருந்த வக்கனல்
வேகமாய்ப் பாய்ந்துநம் வீர வேந்தனுக்
காகிய சக்திக ளனைத்து மீந்ததால்.

கொடியபொன் னாசையைக் குமைத்த மாமுனி,
அடியவன் அன்புடன் அளித்த பொற்குவை,
தொடவிலை; துயர்கெடச் சுற்றும் வாழ்ந்தநல்
இடையருக் கீந்தனன், அருளின் ஈகையான்!

"அன்னையின் அன்புடை யண்ணலே, யென்றன்
பொன்னநகர் புண்ணியம் பொலியவாழ்" கென
மன்னவன் அழைத்திட, மாத வச்சுடர்,
"என்னிலை யேயெனக் கின்ப" மென்றனன்.

"குருதுணை, குருதுணை, குருதுணை" யெனா,
இருமலர்ப் பாதத்தை இறைஞ்சி வீரனும்,

மருவினன் வளநகர், மறுவிலான் பொழி
அருளினால் வெற்றிகள் அடைந்து பூரித்தான் !

ஆர்வமுற் றரசன் ஓர்நாள் அருட்பெருங் குருவைத் தேடிக்
கார்வனக் குகையில் நோயாற் கலக்க முற்றிருக்கக் கண்டான்.
"ஓர்மருந் துண்டு; வேங்கைப் பா"லென வுரைக்கக் கேட்டு,
வீரவா ளெடுத்து மின்போல் விரைந்தனன் அடவிக்குள்ளே.
சேய்களைப் பிடித்தான், சிங்கம்; தீயெழ வுருமிப் பாய்ந்த
தாய்ப்புலி தனையடக்கித் தடையறப் பால் கொண்டீந்து,
நோயினைத் துடைத்தான்; அந்த நுவலரும் அன்பைப்போற்றித்
தூயவன் "வாய்மைவீரத்தொண்டநீவாழ்க" வென்றான்.

குருவினைப் பணிந்து வேண்டிக் கொற்றவன் **பரலி** தன்னில்,
திருமடங் கோயில் கட்டிச் செய்யநல் லடியா ரோடும்
அருகினில் இருத்தி, நாளும் அவனடி தொழுது வந்தான்;
பொருளுடன் அருளு மோங்கும்புண்ணியப் பொலிவு பெற்றான்!

இலகிடத் தரும மெங்கும், இகற்படை செய்யுந் தீய
கொலைகள வொழிய நல்ல குலமகள் கற்பு வாழ,
நிலைபெறு வீர நீதி நெறியினை யிலகக் காட்டிப்
பலவகை யுதவி செய்தான் பரிவுள குருவு மாங்கே.

அலைமனம் அடக்கி யாளும் அருந்தவ யோகி போன்றே
நலிபகை அடக்கி யாண்டு, நானிலம் புகழை நாட்டி
மலையெனச் சிறந்த வீரன், மாண்புறு **சத்தா ரா**வில்
நிலைபெறு நாளிற் கண்ட நிகழ்ச்சியை விளம்புவோமே.

மாதவச் செல்வன் ஊரில் மறுவறு பிட்சையேற்று
மேதகு வேந்தன் கோயில் மேவலும், வீரச்செம்மல்
பாதமா மலரில் வீழ்ந்து, "பகவனே அரசு முற்றும்,
ஏதெனக் குரிய தெல்லாம் உன"தென எழுதிப் போட்டான்!

"உய்வித்தாய் என்னை; யென்றன் உடல்பொருள் உயிருனக்கே.
ஐயநீ ஐய மேற்றல் அழகிலை; அரச னாக
வையகம் புரப்பாய்" என்று வணங்கியே வேந்தன் சொல்ல,
"மெய்யநின் அரசையாளமேற்கொண்டேன்"என்றான்ஞானி

"விட்டது பார" மென்றுவிடுதலை வீர னாங்கே,
பட்டணத் தெருக்கள் சுற்றிப் பகவனோ டிரந்து வந்தான்;
இட்டசோ றுண்டு, பின்னர், "இறைவநீ யாள்க; யானுன்
கட்டளை செய்யுந் தொண்டன்; கட்டற வாழ்வே" னென்றான்.

போற்றிமெய்த் துறவை, யாசான் புன்னகை பூத்து, "நீயே
நாற்றிசை யுலகை நன்று நடத்திடத் தகுவை; நீடு
நோற்றனன் உனக்கே; நாட்டு நோவினைத் தீர்க்க, வாளின்
ஆற்றலைப் பெற்றாய்,என்றன் அன்ப நீ அரசாள்" என்றான் !
சாதுவின் மொழியைக் கேட்டுச் சரண்புகு சீடன், அன்னோன்
பாதுகை பீடமேற்றிப் பறந்திடக் காவிச் சண்டா,
மூதுரை போற்றி, யாள முனைந்தனன்; அவனுக் கின்னும்
கோதறு போதந் தன்னைக் குறித்தனன் குரவனாங்கே !

இராமதாஸ் போதம்

மாரதச் சுடரே, பாரத மணியே,

வீரருக் கரசே, பாரினுக் கொளியே,
சாது சங்கம் சாந்தமாய் வாழ,
வேத தருமம் விளங்கிட நாட்டில்,
அறந்தாங் கிடவே பிறந்தாய் நீயே !
துறந்தாய் தன்னலம்; சிறந்தாய் பொதுநலம்;
போற்றாய் உலகை ஆற்றல் மிகுந்தாய்.
நோற்ற சக்தியை ஊற்றினே னுன்னுள்;
ஊழ்வலி யாலே யுலைத்தநா டுய்யத்
தோள்வலி வேண்டும்; வாள்வலி வேண்டும்.
மருத்துவன் போலே, மாநில வுயிரை
வருத்தும் புண்களை அறுத்தெறி வீரா !
பேடிகள் போலே ஓடி யொளியும்
பீடைப் பழக்கம் பிறகிட் டொழிக;
போர்முர சார்த்ததும் புயங்கள் விம்ம
வீரவா ளேந்தி விடுதலை முழக்குக !
சிங்கம் போலே, தீயிற் சுட்ட
தங்கம் போலே, தியாகிகள் வேண்டும்.
புலியெனக் கேட்டதும் கிலிபிடித் தோடும்
அலிப்பதர் வேண்டோம், ஆண்மை வளர்கவே !
சத்திய யுகத்திற் சாந்தம் பலிக்கும்,
இத்ததி கலியெமன் இடர்செயுங் காலை,
அறச்சமர் புரியும் ஆட்பலம் வேண்டும்.
திறமை வேண்டும் தீமை தீரவே.
பெண்டிர் கற்பும், பெரியார் தவமும்,
தொண்டர் நலமும், தூயநல் லறமும்,
ஆக்களும், சேய்களும், அமைதியாய் வாழக்
கோக்கள் புயவலி வீக்குதல் கடனே.
மெத்தப் பயந்து வீரங் குன்றிச்
செத்தநாட் டிற்குச் சீவ னளிப்பாய்,
குனிதலை நிமிர்ந்து, கொடுங்கோல் குமைய
மனிதர் மனிதராய் வாழ்ந்திடச் செய்வாய் !
கருத்தில் வீரக் கனலைத் தூண்டாய்
திருத்திக் கோழையைத் தீர னாக்குவாய் !
கரிபரி யிரதம் காலாட் படையுடன்
உரிமையைக் காக்கப் பெருமையோ டெழுவாய்!
தோல்வி யென்பது துணிந்தவர்க் கில்லை
சால்புடை யோர்க்குத் தளர்வுமிங் கில்லை.
கடற்படை தன்னைக் கண்ணெனக் காப்பாய்
உடற்சுமைப் பயிற்சியை உயிரெனப் போற்றுவாய்.
சோனியுஞ் சொத்தையுஞ் சொள்ளையும் வேண்டோம்!
மானங் காக்கும் மாண்புளோர் வருக!
அருச்சுனன் பீமன் அனுமான் போலவே
திருத்தகு வீர தீரரை வேண்டுவோம்.
சிக்கனம் போற்றித் தேசம் வாழவே
பக்குவ மான பணிகள் புரிவோம் ;
இணங்கும் பிறரை இணங்கி யேற்போம்;
குணங்கும் மாந்தர் கோணலை நிமிர்த்துவோம்!
அறவோர் அனைவரும் உறவோ ராவார்;
அறிஞர் அனைவரும் ஆதரம் பெறுவார்;
புல்லியல் அதர்மப் புதர்களை நீக்கி
நல்லியற் சோலை நாட்டுதல் கடனே.
மறத்திமிர் கொண்டு மாந்தரை வருத்தும்
அறப்பகை யாளரே ஆவர்நம் பகைவர்.
நேர்மையும் பண்பும், சீர்மையும் போற்றுங்
கூர்மதி யாளர்நங் கூடப் பிறந்தோர்.

அருளும் பொருளும், அன்பும் கல்வித்
திருவும், கலையும், சீரிய தொழிலும்,
உள்ளொற்றுமையும், உலகொற் றுமையும்,
தெள்ளிய ஒழுக்கமும், ஒள்ளிய நினைவும்,
பயிரின் வளமும், பசுவின் வளமும்,
உயிரின் வளமும் ஓங்கிச் செழிக்கவே!
கருத்திற் கடவுளுங் கையிற் செயலும்
இருத்திமன் னுயிர்க்கெலாம் இன்பமே செய்வாய்!
அருளும் பொருளும் ஆனதே வாழ்க்கை,
திருவும் அறிவுஞ் சேர்ந்ததே செயலாம்,
அரசுந் தவமும் அமைந்ததே செங்கோல்,
பரமும் இகமும் படைத்ததே இன்பம்;
திண்மையே சக்தி, உண்மையே வெற்றி,
பெண்மையும் ஆண்மையும் பேணுக வுண்மை;
மாசறு வீரா.... தேசுறும் அன்பா,
நேசருக் கினியாய் நிகரிலா நிருபா,
துறவுக் கொடியைத் தூக்கிப் பிடித்தே
அறநெறி போற்றி, அறிஞரைக் கேட்டுக்
காலங் கருதிக் கடமையைக் காத்து,
ஞாலங் கருதி நலமெலாஞ் செய்து,
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம்" எனும்
தாரக மந்திரச் சக்தியைப் பெருக்கி,
சத்திர பதியாய்ச் சத்தியச் சுடராய்,
இத்தல மெல்லாம் இசைத்திட வாழ்கவே!

சிவாஜி

ஆணை தாங்கி அவனியை ஆளுவேன்,
காண நின்ற கருணைக் கடவுளே!
ஆணவப் பகை யற்றது நின்கழல்
பூணப் பெற்றனன் பூரண மெய்தினேன்.

அறிவு தந்தநின் அன்பருள் இன்றியான்
சிற கிழந்த சிறுகிளி போலுவேன்;
மறலி யஞ்சுநின் மாணடி பற்றினேன்:
இறைவ, வேறெனக் கோர்கதி யில்லையே! 240

என்றி றைஞ்சி யிறைவன் அருள்வழி,
நின்று நீதி நிலவ நிருபனும்
நன்று நாட்டிடை நல்லறம் பாலித்தே
வென்றி வீர விளக்கென் றிலங்கினான்!

எண்ணு மெண்ணங்கள் எண்ணலுஞ் செய்து நீள்
புண்ணி யப்புகழ் பொங்கப் புனிதனும்
மண்ணின் வாழ்வுதன் மாதவச் சித்தியால்
விண்ணின் மிக்கு விளங்க விளங்கினான்!

அன்பு வீரன் அரனடி சேர்ந்தபின்,
தன்பு விப்பணி தாழ்வறச் செய்தபின்,
புன்பு லாற்பொறை போக்கிப் புனிதனும்
இன்ப விண்ணி லிருக்கக் கருதினான்.
சீரடியார் புடைசூழச் சித்த னோர்நாள்,
"சிறையுடலை யுதறியினிச் செல்வேன்கேளீர்;
ஆருயிருக் குயிராம்சுத் தான்மா யானே
அழிவின்றி அடியாருள் இருப்பேன் காணீர்!
பாருலகிற் பிறந்தபயன் பரம னன்பே;
பயன்கருதாப் பொதுநலமே பயில்வீ" ரென்றான்.
ஆர்வமுடன் "ஹரஹர"வென் றனலாய், மின்னாய்,

அருட்சோதி தனிற்கூடி யதுவே யானான் !
எண்ணரிய வினையுடலை எடுத்த மாந்தர்
இருவினைதீர் இறைவனையே யெண்ணி யன்பு
பண்ணிடுக; பாருக்கு நலமே செய்க;
பரிதியினை வான்மழையைப் பார்த்துப் பார்த்தே
புண்ணியங்கள் போற்றிடுக தீமை போக!
பூவுடனே மணம்போலும் புவியைப் பார்க்கும்
கண்ணுடனே கதிர்போலும் உயிர் கலந்த
கடவுளருள் காப்பாற்றும் கருணையாலே!

கனிதமி ழின்பமென்னக் கெளரி யாழ் இசைத்துக் கொஞ்ச,
முனிசொலும் பொருளும் வாக்கும் முழுமனம் உருகக் கேட்டு,
நனியினி தென்று சுத்தன், நயஞ்சொலிப் பணிந்த பின்னர்,
மனமுறு கவலை தன்னை மாதவன் அறியச் சொன்னான்.

பொறிகளை வென்ற மேலோன், "புனிதவுன் கவலை முற்றும்
அறிகுவேன்; உண்மை; நாட்டில் அதரும மோங்குங் காலம்;
வெறிகொளும் கலியன் சேனை,வேங்கையின் கூட்டம் போலே
அறநெறி முனிவர் செய்யும் அருந்தவங் கலைக்கு மையா!"

"பாரத நாடு பெற்ற பலமெலாம் ஆத்ம சக்தி;
வேரது; கிளையும் பூவும், வீரமும் அறமு மாகும்;
சீருடன் மூன்றும் பேணும் சித்தரை யழிக்க முன்னே
போருடன் வருகின் றானப் புல்லனை வீழ்த்த வந்தாய்."

இவ்வகை முனிவன் சொல்லி, "இன்னமும்" என்றபோதே
வெவ்வெறிக்குரல்கள்கேட்டார் 'வேந்தபோர்' வந்ததென்றே
திவ்விய முனிவர் ஆர்த்தார், தீக்கொழுந் துயரக் கண்டார்!
அவ்விடம் அமைச்சன் வேண்டும் அணிபடை யெழுந்த தம்மா!

சாந்தனின் ஆசி பெற்றுச் சடுதியிற் சென்று, சுத்தன்
பாந்தளும் புலியும் போலப் படையுடன் சீறி யாங்கே,
போந்தவெம் பகைவர் கூட்டம் பொடிபடப் பொருதுவென்று
வேந்தறங் காத்த தன்மை விளங்குற விளம்புவோமால்.

21. கலி சினந்த படலம்

பற்று தீக்கொரு பஞ்செனச் சித்திமான்
ஒற்றர் மூலம் அனுப்பிய ஓலையிற்
குற்றங் கண்டு கொதித்த **கலியனும்**
சுற்றிப் பார்த்துச் சுருட்டினை ஊதினான்!
"ஆசை சொல்லி யழைத்தும் வரானந்த
மீசை யில்லா விடலைச் சிறுபயல்.
மோசமான முடங்க லனுப்பினான்.
மாச மர்த்தன் மதிமிகு மந்திரி."

"எனை மதிக்கிலர்; என்னுடை யாட்பலந்
தனை மதிக்கிலர்; சங்கட மானபோர்
முனை யிலேயிவர் மூளைதகர்கெனச்
சினந்துமீசை திருகிவிட் டம்மென்றான்

கேட்ட **வெய்யர்** கிளர்ச்சிகொண் "டின்றுநம்
தோட்டி னவைத் துடைத்ததுன் சீற்றமே;
காட்டை நீவிக் கலிக்கொடி விண்ணெட்ட
நாட்டு வோ" மென நாப்பறை கொட்டினார்.

சேனை யில்லை..... சிவசிவ வென்றுள
ஞானப் பித்தர், நமதொலி கேட்டதும்,
மோன மாக முழையிற் பதுங்குவார்
தான மாகவுந் தந்து வனத்தையே.

“மன மடக்குவர்; மாதரை அஞ்சுவார்.
வன முறையும் வறட்டுத் துறவிகள்,
இனிதிங் கைம்பொறி யின்பத்திலூன்றியே
செனம் பெருக்கிடிற் சேனைக்கு நன்றரோ?

வேகன் என்றொரு வேங்கை யனையவன்,
மோக மேவடி வானவன், முன்னின்று,
“யோகப் பித்தர் ஒழிக வுலகிலே;
போக வாழ்வு பொலி” கெனக் கூவினான்.

“தாடி வைத்துத் தவமெனக் கண்களை
மூடி நின்ற முனிவரின் மோசமே,
நீட ரசு செலுத்து நிருதரை
நாடழித்து நலித்ததைக் கண்டனம்.”

“ஆண்மை கொண்டும், அலியென வாழுமிவ்
வீண்ம னிதர் விரதக் குடில்களிற்
காணும் இன்னிய காரிகை யாரின்பம்
பூணுவோம் குலம் பொங்கித் தழைக்கவே;
“சரிச வா” செனத் தானவர், துள்ளினார்;
“அரிவை யாருடன் அந்தண் முனிவரைத்
துரித மாகவே தொத்தடி மைசெய்து,
பெரிய மன்னரின் பிள்ளையைப் பற்றுவீர்.”

என்று **வெங்கலி** ஏறுஞ் செருக்கினால்,
“இன்று செவ்வா யிராகுவின் காலமே
நன்று; நாத்திகச் செங்கொடி நாட்டுவீர்!
வென்றி வாளினுக்கே” யென வீறிட்டான்.

“கதியி லாத கருணை முனிவரை,
மதி யமைச்சனை, மன்னவன் மைந்தனை,
எதிர் பகைவரை எற்றி யெறிந்துநம்
புதிய கொள்கை புகட்டக் கொணருவோம்.”

“காட்டில் வாழுங் கனியுண வாளரை,
ஈட்டி யின்றி எளிதினில் வெல்லலாம்,
போட்டி போடும் புரவலன் சேனையை,
வாட்ட வேண்டும் வலிமிகு சேனையே.”

“வேகன், வெய்யன், வெறியன், அகம்பரன்,
போக கேது, புலியன்! முதலினோர்,
மேக மின்னென வாட்கணம் வீசியே,
போக வேண்டுமிப் பூமியதிரவே.”

இடி முரசம் இயம்பின; செந்நிறக்
கொடி பறந்தன; கோபக் கலித்திரள்
படி நடுங்கிடப் பாய்ந்தது; பட்டிகள்
பொடிபடப் படை போகும் வழியெலாம்.

கலை யழித்தனர்; கற்பை யழித்தனர்;

கொலை புரிந்தனர்; கொள்ளை யடித்தனர்;
தலை தெறிக்கத் தருமம் அழித்தனர்
கலியன் ஏவிய கள்ளக் கயவரே!

"குருதி கக்கக் கொடுங்கொலை செய்குவோம்,
நிருதர் யாம்; எதிர் நில்லன்மின்" என்றவர்,
அருகில் வந்த தனைத்தும் அழிவுறப்
பொருது பஞ்ச வடியிற் புகுந்தனர். *68*

22. பஞ்சவடிப் போர் வென்ற படலம்

ஈச னேதுணை யென்னு முனிவரை
ஏசி, வீட்டில் எரியினை மூட்டினார்;
பூசை மாமலர் பொங்கும் பொழில்களை
நாசஞ் செய்தனர், நாமெனுந் தீயரே.

"பாப புண்ணியம் பார்த்திடுவீ" ரென்றார்,
சாப மிட்டனர் சாது முனிவரர்;
கோப வெங்கனல் கொட்டு மரக்கரைத்
தூபம் போட்டினுந் தூண்டின மெய்யுரை.

தாக்கினார், தகர்த்தார், தவத்தை அவம்
ஆக்கினார்; அழித் தார் அரு ளாளரை;
வாய்க்கு வந்ததெல் லாஞ்சொல்லி வைதனர்;
பேய்க்கு ணத்தினர் செய்கையைப் பேசவோ?

பெண்ணி னத்தின் பெருமை யறிகிலார்;
கண்ணிற் காமக் கனலுற நோக்கினார்.
புண்ணியர் உயிர் போம்வரைப் போர்தர
எண்ணிக் கச்சை யிறுக்கிமுன் னின்றனர்.

மற மனத்தர் மதுவெறி யேறிச்செந்
நிற முகத்தர், நிலைகுலைந் தோடவே,
அற மனத்தர், அருந்தவத் தால்வருந்
திறமை காட்டினர்; தெய்வத்தைக் கூவினார். *20*

ஓச்சிக் காலை யுயர்த்தினர் ஆசனம்;
மூச்சடக்கினர்; முத்திரை வைத்தனர்,
பேச்ச டக்கிப் பெருஞ்சபஞ் செய்தனர்,
ஆச்சி யத்தை யனலெழ வார்த்தனர்.

கூற்று தைத்த சிவனடி கும்பிட்டார்,
போற்றி ராமனைப் பூசித் தெழுந்தனர்.
தூற்ற ரக்கருந் தூயரைக் கண்டதும்,
ஆற்றல் குன்றி அதிர்ச்சியொன் றெய்தினார்.

ஊக்கி யுட்கனல், யோக முனிவரர்,
தாக்கு முன்பு தயாநிதி யாகியே,
நீக்க மற்று நினைத்திடும் அன்பரைக்
காக்குந் தெய்வக் கருணையைச் சிந்தித்தார்.
"துங்க மான துரிய முனிவரர்,
சங்க மின்று தவிக்குதித் தீயரால்,
எங்குநீ" யென் றியம்பிடு மெல்லையில்
இங்கி தோவென் றிடிமுர சார்த்ததால்

ஆனை, தேர், பரி, ஆயுதந் தாங்கிய
சேனை கொண்டுநந் தீரன் அமைச்சுடன்
சோனை யம்பு சொரிந்து கலிநகர்த்

தானை யஞ்சிடத் தாவி வளைத்தனன்.

வாழி மெய்யறம்! வாழிய சித்தியன்!
வீழி பொய்யர், விடுதலை வாழ்கெனா,
சூழு மந்தணர் தூவ மலர்மழை,
ஆழி போலச் சயமுர சார்த்ததால்.

சித்திமான்

துய்ய நீநற் றுணைசெய் முனிவரை
வெய்யர் தீண்ட விடாதிவ் விடத்திலே;
ஐய நான்சென் றமரிற் பகைவரை
நொய்ய வாட்டி நொருக்கி வருகின்றேன்,

என்ற மைச்சன், இமைக்குமுன் னேகியே
நன்ற ரக்கர் நலியப் புடைத்தனன்;
ஒன்று கூடிய ஒன்னலர் இன்னவன்,
"கொன்று போடுவன் கூ" வென ஓடினார்.

இடி விழுந்த மரமென் றிகலவர்
கொடி விழுந்தது. . . கோதுறு மேனியில்
அடி விழுந்தது. . . கோவென் றலறியே
படி விழுந்தப் பாதகர் சேனையே ....

ஆய்ந்து மீண்டும் அரக்கர் கொடும்படை
பாய்ந்து நேசப் படையினைத் தாக்கியே,
தேய்ந்து தேய்ந்து திறலற்றுப் பின்னுறச்
சாய்ந்து சாவின் விருந்தென லாயதே....

எறிந்து கற்கள் எரிமலை போலவே,
செறிந்து மோதிடுந் தீயர் பெரும்படை
அறைந்து வீழ்த்தி யழுத்திய பின்னரும்,
குறைந்து மீளவுங் கூடியெதிர்த்ததால்.
வெருகும் பாம்பும்வெவ் வேங்கையு மென்னவே
பெருகி வந்த பிசாசர் படையினை,
அருகு வந்ததும் ஆறென வுண்டது
செருவிற் சிங்கத்தைச் செற்ற செயப்படை.

காடு மேடுங் கலங்கிச் சிலர் பின்னே
ஓடு கின்றனர், ஓய்ந்து சரண்புக
நாடு கின்றனர், நாமென் செருக்கினாற்
சாடு கின்றனர் தானவர் சிற்சிலர்.

வேகன் முனிவரைப் பொருதுதல்

இத்ததி யிவ னைவிடுத் திவ்விடம்
கத்து வேதமுங் காவியுங் கொண்டுழல்
சொத்தை மாந்தர் சுவர்க்க மடைந்திட
மொத்து வோமென ஓடினன் வேகனே.

கொழுத்த பாவிகள் கூடி வருமுன்பே,
வழுத்தி **சுத்தன்,** வரைக்குகை யொன்றினில்,
பழுத்த பண்ணவ ரைப்பதுக் கிப்பகை
அழுத்து மெல்லை யணிபடை கூட்டினான்.

வருகின் றாரென ஒற்றர் வழுத்தலும்,
அருமை வீரரை யாண்டகை நோக்கியே,

‘கரும வீரர்க் குரிய கடமையைப்
பெருமை யாகச் செய் வோ” மெனப் பேசினான்:

நாட்டின் சேமமும் ஞாலத்தின் சேமமும்,
வீட்டின் சேமமும், வீரரின் சேமமே !
ஓட்டி வெம்பகை, அன்பை யுறுதியாய்
நாட்டி யின்று நலஞ்செய வம்மினோ.

வெற்றி யோங்குக! வெம்பகை வீழுக,
ஒற்று மைசெழித் தோங்குக மேதினி !
நற்ற வங்களு ஞானமு மோங்கிடக்
கொற்ற வன்கொடிக் காவி கொடுப்பமால்!

வீரர் இவ்வகை வீறிட் டெழுந்ததும்,
காரு மின்னுங் கடுப்புயல் வேகமும்,
சேர்வ தென்னத் திரண்டு **கலிஞரும்**
போர் முழக்கம் பொலியப் புகுந்தனர்.
இவ்வு லகெலாம் எங்கள் உலகமே,
இவ்வ ரசெலாம் எங்க ளுரிமையே;
எவ்வு யிர்களும் எங்க ளடிமையே,
எவ்வ மின்றி யிணங்கிடின் உய்குவீர்.

திண்ணெ னப்**பகை** செப்பலு மிவ்வகை
விண்ண திர்ந்தது, மெல்லுயி ரஞ்சின;
புண்ணியன் ஒரு புன்னகை பூத்தெதிர்
நண்ணி வேகனைக் கண்டு நவின்றனன்.

உலக வாழ்க்கை உலகினர்க் கல்லது,
கலக வஞ்சக் கயவருக் காகுமோ?
உலகி லுள்ள வுயிர்கள் இறைவனார்
இலகு கோயில் இதற்கெதி ரில்லையே.

கொட்டடா பறை கோயிலுஞ் சாமியும்,
எட்டுத்திக்கிலும் இல்லை; யிப் பொய்யினை
வெட்டடா வென **வேகன்** விளம்புமுன்
முட்டி மோதி முனைந்தது வன்படை.

“வெம்மை யேயுயிர்ப் பாம்வெறி யீருமைச்
செம்மை யாக்குது” மென்றுநந் தீரனும்,
பொம்மெ னப்படை யேவிப் பொருதனன்.
விம்ம கந்தை விழுந்துமண் ணாகவே.

நிவரும் ஆணவ நெஞ்சரின் ஆவியைச்
சிவரத் தீயுமிழ் செஞ்சின வாளினாற்
கவருஞ் சுத்தன் கதிரினைக் கண்டதும்
அவல மாகிக்கை யஞ்சினன் வேகனே.

விட்டி லென்ன விதிர்த்து மறைந்துபின்,
துட்டர் சேனை துணுக்கெனத் தோன்றியே,
வெட்டும் தந்திர வேகமுந் தோற்றபின்,
எட்டி நின்றிறு மாப்புகள் பேசிற்றால்.

ஊறு செய்யும் உரிமைகொள் எங்களை
ஊறு செய்தனை யின்றுனை நாளையே
கூறு செய்துன் குலத்தினை வேரற
நீறு செய்து நெடுங்கொடி நாட்டுவோம்.

திருட்ட ரக்கர் இனையன செப்பலும்,
அருட்டுணை பெறும் ஐயன் அமைதியாய்,
"மருட்டு மாயத்தைக் கண்டு மயங்கிலோம்,
இருட்டிற் காதவன் அஞ்சுவ தில்" லென்றான்.

"எமை யிருட்டென் றிகழ்ந்தனை" யென்றுடன்,
அமைதி யற்றவர், ஆணவப் **பேயினர்**,
தமை யிழந்து சமர்செயத் தாவினார்;
நமனு மங்கு நகைத்தெதிர் தாவினான்.

வாவு வாசியி லேறிவந் தேஅறை
கூவு **வேகன்** குலைகுலைந் தோடவே,
ஏவி யம்பை யெதிர்த்தமர் செய்தனன்,
பூவினில் இணை யற்ற புனிதனே.

முரசு கொம்பு முரடு தடாரிகள்,
"அரசுடன் அறம் வாழி" யென் றார்த்தன;
பரசு, சூலம், பகழி பறந்தன!
சிரசுங் கைகளுஞ் சிந்தின மண்ணிலே.

கூற்ற லைக்குங் கொடியவர் வெம்புயற்
காற்ற லைக்குங் கலமெனப் போர்முனை
தோற்று வீழ்ந்து, தொகைதொகை யாகவே
ஆற்றலை புகுத் தாழி கலந்தனர்.

ஆண்முன் ஆண்மை யழிந்தவெவ் **வேகனும்,**
நாணமற்று நகார மடித்திடினும்,
மாண மாதவ மங்கலப் பெண்டிரைக்
காண வந்தனன் காமச் செருக்கினால்.

காய்த்திடும் பருவத்தைக் காட்டு மூலையில்,
மாய்த்திட லாகுமோ, மலர்க்கண் பாவையீர்,
சேய்த்திரள் இன்பமுஞ் சீருஞ் செல்வமும்,
வாய்த்துநல் வாழ்வினை வாழ வாருங்கள்.

தாடியு மீசையுந் தண்டுங் காவியும்,
வாடிய மேனியும், வாழ்வை யஞ்சியே
ஓடிடுந் துறவையும் ஒருங்கு கொண்டுழல்,
பேடியர் காதலைப் பெற்றென் பெற்றதே?
தேனினும் அமுதினுந் தீஞ்சொற் கிள்ளையீர்,
மானினும் மயிலினும், மணிப்பு றாவினும்,
மீனினும் அழகுடை மெல்லி ளந்தளிர்
மேனியீர், மேனியின் பயனை வேண்டுவீர்.

வலிவுட னிளமையும் வாய்ந்த நங்கையீர்
அலிகளைப் போலிங்கே அழித லின்றியே,
கலிநகர் வாருங்கள், காதலின்பத்தை,
நலிவறப் பருகிட வாழு நாளெல்லாம்.

வேகனிவ் வகைசொலி வேட்கை யோடுற,
யோகமே வாழ்வெனும் **யுவதி மாரெலாம்**,
ஏகமாய்ச் சூலத்தை யெடுத் தெதிர்த்துடன்
"மோகமே போ" வென முனிந்து தள்ளினார்.

தோற்றனை ஆண்டகை சுத்தனா ரிடம்,

ஆற்றலைப் பெண்டிர்முன் அரங்கி லேற்றினை,
கூற்றுனைக் கூவுது கொடிய னேபுயற்
காற்றொளிர் கதிரினைக் கலக்க லாகுமோ?

“இணங்கிடா தெம்மையும் எதிர்த்து நின்றிடும்,
அணங்குகாள், உம்மையாம் அள்ளிச் செல்லுவோம்.
கணந்தனில் உங்களை கலிபு ரத்திலே
மணம்புரிந் தெம்முடன் வாழக் காணுவோம்.

“தூக்குங்கள்” என்றதுந் **துட்ட ராட்சஸர்,**
மேக்குவி கையுடன் மெல்லி டையினர்,
“காக்கவா கடவுளே” யென்று கத்தினார்
“தாக்குங்கள்” என்றொரு தானை வந்ததால்.

கட்டழ கரசியாங் கௌரி தேவியைத்
துட்டவெவ் வேகனே தூக்கிச் சென்றிடத்
தொட்டனன், ஆங்குநம் சுத்தன் வேலினாற்
பட்டனன் முருகன்முன் சூர பத்மன்போல்

எஞ்சிய பகைவரும் இறைஞ்சிச் சுத்தனைத்
தஞ்சமென் றடைந்துயிர் தப்பி வாழ்ந்தனர்.
அஞ்சறு படையுடன் அமைச்சன் வந்து “நம்
வெஞ்சமர் முடிந்தது வெற்றி” யென்றனன்.
குற்றுயிர் துடித்திடுங் கொடிய **வேகனும்**
முற்றிலுஞ் செருக்கற முதல்வன் பாதத்தைப்
பற்றினன் பணிந்தனன், “பகவ நின்கையாற்
செற்றிடப் பெற்றனன் சிறியன்” என்றனன்.

“பிழைபொறுத் தருளுவாய் பெரிய வென்மன
முழையினிற் பதுங்கிய மூட மோகங்கள்
இழைகொடுஞ் செய்கையால் இறக்கின் றேனையா,
மழையினுங் கருணைசெய் மன்ன கேட்டியால்.

தானவத் தீவினிற் சனித்த தானவன்,
ஞானமும் பத்தியு நன்ன டக்கையும்
ஈனமென் றிகழ்ந்தவன், எந்த நாளுமே,
நானெனுஞ் செருக்குற நடந்த பாவியான்.

மங்கையர் கற்பினை, மனிதர் வாழ்வினை,
புங்கவர் தவத்தினைப் புவிய றத்தினைப்
பங்கஞ்செய் பணியொன்றே பணிய தாகினேன்;
இங்கதை யியற்றிடக் கலியன் ஏவினான்.

மோகியாம் அரக்கியின் மோகங் கொள்கலி,
போகமும் யோகமும் பொருந்திப் புண்ணிய
நாகரி கம்வளர் நல்ல நாட்டினை
வேகமாய்த் தனக்கென வெல்ல வேட்டனன்.

சித்தியை மரபுடன் சிதைத்துத் துன்மதி
வைத்தது சட்டமென் றாள வையகம்,
இத்ததி பெரும்படை கூட்டி எம்மையும்,
சுத்தனைக் கொல்லெனத் தூண்டி விட்டனன்.

கொடியவன், கொடுஞ்செயல் குறித்து வந்துன்றன்
அடியவ னாகியே ஆவி நீங்கினேன்.

முடிவுரை முடிந்ததென் மூச்சு நின்றதும்,
மடியினைப் பா” ரென **வேகன்** மாய்ந்தனன்.

வெவ்விய வாழ்வினை விட்டுச் சாகையிற்
செவ்விய சிந்தனை செய்து தப்பினாய்;
இவ்வள வியற்றிய திறைவனே யெனத்
திவ்விய கோமகன் செப்பி னானரோ.
மடியினைப் பார்த்திட மடக்கு வாளுடன்
கடிதமொன் றிருந்தது — **கலியன் ஆணையே.**
படியெனச் சித்திமான் படித்து நெஞ்சகந்
துடிதுடித் ததன் பொருள் சொல்லுவானரோ.

பஞ்ச வடியிலே, பசுப்போல் வாழும்,
துஞ்சா முனிவரை வெஞ்சிறைப் பிடிமின்,
அரிவையர் தம்மை அள்ளி வாருமின்,
உரிமையர் நாமே உலகினுக் கென்றே
ஆங்கே சுத்தனும் அமைச்சனும் உணர
ஓங்கி யுரைமின்! ஒளிந்தொளிந் தேகிச்
சமயம் பார்த்துச் சத்தியன் மகனை
எமபுர மேற்றி, எத்தனாம் அமைச்சனை
நம்புறந் திருப்ப நயமாய் முயலுமின்;
சம்பம் பேசிற் சாகத் திட்டுமின்:

அங்கே போர்வினை யானதும் படைகள்
இங்கே வருகவே இரண்டு நாளில்;
சித்தியைச் சூழ்வோம், தீயினாற் செயிப்போம்.
கத்தி முனையிற் கலியர சோங்குமே !

வெருவுரு கலியனின் விருப்பங் கண்டுளம்,
மருகினர் “பின்னந்த மடைய னார்தலை
திருகுவம்” என்றனர் சேனை வீரர்கள்
உருகினன் சுத்தனும் உலகை யெண்ணியே !

அத்ததி முனிவரர், ஆசி கூறியே,
பத்தினி மாருடன் பரிந்து வந்தனர்.
இத்தினம் வெற்றியி னின்பந் தந்தநம்
சுத்தனைத் துதித்ததைச் சொல்லு வாமரோ !

23. அபயமளித்த படலம்

உருகிய செம்பைப் போலே, உள்ளமு முகமு மாகி,
வெருவுறு மரக்கர் தீதை வெகுண்டது செக்கர் வானம்;
பொருவினில் வென்ற சுத்தன் புண்ணியம் புரிந்த தெண்ணித்
திருவுறு திங்கள் காட்டிச் செயநகை புரிந்த தன்றே !

புள்ளினம் பாடவில்லை; பூவின மணக்கவில்லை;
கிள்ளைகள் கொஞ்சவில்லை; கிளர்மறை யொலியு மில்லை;
தெள்ளிய நதியுங் காற்றுந் திங்களோ டுரைப்ப தொன்றே.
விள்ளரு மோனக் காடு விரிச்செனக் கிடந்த தம்மா !
புயல், எரி மலை, பூ கம்பம் போலெழும் பொய்யர் வெம்போர்
இயல்பெறுஞ்சாந்தவாழ்வின் இசைநரம்பறுத்துப் பொல்லாத்
துயர்பல செய்து, காட்டைச் சாம்பராய்த் தூவிச் சென்ற
பயங்கரக் காட்சி கண்டு பதைத்தது முனிவ ருள்ளம்.

சோலையை யழித்துத் தூய தவச்சுடர் துலங்கும் பர்ண
சாலையை அழித்துச் சென்ற சண்டமா ருதத்தை யெண்ணி,
மாலையுந் திகைத்த தந்த மலைகளுந் திகைத்து நின்ற;

காலையில், வேத கானம் பாழினைக் கலைத்த தம்மா!

இவ்வுல கெல்லாம் இறைவநின் உறையுள்,
   எங்கெங்கும் உயிர்க்குயிர் நீயே
எவ்வகைப் பொருளும், இறைவநின் பொருளே,
   ஈந்துதுய்த் தருட்பணி புரிந்தே,

வவ்விடா தொருவர் பொருளைமற் றொருவர்
   வழங்கிநூ றாண்டுகள் வாழ்க !
திவ்விய வுண்மைப் பொன்முகங் காட்டித்
   திருவருள் புரியருட் சுடரே!

இருந்தவா றிருந்தே, இயங்கிடும் பொருளே,
   ஏகம், அநேகமாய் வளர்ந்தாய்;
அருந்துணை நீயே, அகந்தொறும் கனல்சுத்
   தாத்துமத் தெய்வமே, உன்னைத்

திருந்துநல் லறிஞர், யாவுமாய்த் தெளிந்தே
   திகைத்திடார் பகைத்திடார்; அன்பே
பொருந்தியெந் நாளும் சுதந்தர ராகப்
   பொலிகுவர் பூரண வொளியே!

எப்பொருள் அறிந்தார் அறிந்தவர் ஆவார்,
   எப்பொரு ளாளர் இன் புறுவார்,
எப்பொருள் இரவு பகலென்ப தின்றி,
   இறப்பையும் பிறப்பையும் வென்றே,

சிற்பர வொளியாய், அமரவாழ் வருளுந்
   தேன்விளை ஞானவூற் றாமோ
அப்பொருள் உண்மை யறிவினுக் கென்னை
   அக்கினிக் கடவுளே நடத்தாய்.
என்று வேத மிசைத்து முனிவரர்,
இன்று தங்கள் இடர்களைப் போக்கியே
நன்று செய்த நலம்பெறு நம்பியின்
வென்றி தன்னை வியந்துளம் பூரித்தார்.

பார திரப் பலம்வளர்த் தெங்குமே
போர திரப் புரிந்து மதங்கொண்ட
சூரபத்மனைச் சுட்ட முருகனே,
வீர சுத்தனாய் வேகனை வீழ்த்தினான்.

செருக்கு மிஞ்சித் திமிர்கொண்ட பாவிகள்,
உருக்கு போன்ற வுளத்தர் கலிநமர்
பெருக்கு சேனை யினும் பெரும் பேயென
நெருக்கி நம்மை நலிக்க நினைக்குமால்.

தருமந் தாங்குந் தவமுனி வோர்களே
கருமந் தாங்கும் உலகினர் காப்பென்ற
மருமங் கண்டுநம் வாழ்வை யொடுக்கவே
வருமத் தீயரின் வாட்படை நாளையே.

தன்ன லஞ்சுய சாதி மதத்திமிர்,
பொன்மண் ணாசை, புவியெம தென்கிற
மன்னர் செய்யு மதிகெடு போர்வினை,
இன்னல் செய்யு மினியுல கெங்குமே.

எல்லை யற்ற துயர்செய் யிகற்படை
சொல்லை மீறித் தொகைதொகை யாகவே,
தொல்லை செய்யத் தொடருமுன் ஓர்வழி
ஒல்லை காண உளங்குவிந் தெண்ணுவோம்.

அலைகள் மோதி யலைக்குங் கலமென
நிலை குலைந்திடு நீதி தருமத்தை
உலைவி லாவழி யுய்த்தருள் பாலிப்பாய்
தலைவ, சுத்த தயாபர மூர்த்தியே.

சுத்த முக்த சுதந்தர சக்தியால்,
சத்தி யச்சுடர் தந்தெமை யாண்டிட
இத்த தியிங் கெழுந்தருள் செய்கநாம்
நித்தியந் தொழு நின்மல தேவனே.
அன்று சூரனை வேல்கொண் டழித்தவன்,
என்று மன்பர்க் கிதஞ்செய் சிவக்கனல்,
ஒன்று பட்டநம் உள்ளத்திற் கூடியே
இன்று நல்கும் இனிதின் அபயமே.

அந்தண் மாதவர் அன்புள நன்றியால்,
அந்தி வண்ணன் அனல்வடி வாகிய
செந்தி லாண்டவன் சீர்வடி வைக்குக
மந்தி ரஞ்சொலி வாழ்த்தி வணங்கினார்.

கதிநீ, மதிநீ, கதிர்வேல் முருகா,
துதிசெய் யடியார் துணைநீ யரசே,
விதிசெய் வினையும் விலகப் புரிவாய்,
புதிதா கியவாழ் வருள்புங் கவனே!

சக்திக் கனலே, சமர்செய் பகையைக்
குத்திக் குமுறும் கொதிவேற் கரனே,
தொத்தித் துயர்செய் பிணியைக் களைவாய்
பத்தர்க் கருளும் பரமன் மகனே.

பவபந் தனைசிந் துக!பற் றறுக!
தவசா தனைசித் திதழைத் தொளிர்க!
கவலை, கதிர்முன் பனிபோல் ஒழிக
சிவஷண் முகஓம் செறுவேல் முருகா!

அருளார் முகமும், அடியார்க் கபயம்
தருபொற் கரமும், தணலார் விழியும்,
கருணைப் பொலிவும், கனிவாய் நகையும்,
திருமார் பழகுந் திகழும் முருகா !

சிதையா துதியா னம்நிலைத் திடவே,
பதையா துமனம் பணிவா கிடவே,
இதயத்தி லெழுந்து பொலிந் திடுவாய்,
உதயக் கிரிபோல் ஒளியார் முருகா !

தாயிற் பெரிதான தயா பரனே
நேயர்க் குபசாந்த நிகே தனனே,
காயத் திரியின் கருவே குகஓம்,
தேயச் சுடரே, சிவஷண் முகனே.

அன்பர்க் கெளிதாய் வருவாய், அபயம் !
நம்பன் அருளும் நலமார் கனலே,
உன்பொற் பதமென் னுளமூன் றிடவே,
எம்பால் வருவாய் குருவா யிறைவா.

இரவும் பகலும் இதயத் துனையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்,
புரியுந் தொழில் பூசனையா கிடவே,
பரிவுற் றருள்வாய் பரிபூ ரணனே.

பண்ணின் ஒலியே, பரிதிக் கொளியே,
கண்ணின் மணியே, கனியின் சுவையே,
மண்ணின் வளமே, மலரின் மணமே,
விண்ணின் விரிவே, அறிவின் விளைவே.

பழிசெய் யசுரர் பயபந்த மிலா
வழிகாட் டியதிண் வடிவேல் முருகா,
அழியா தொளிரும் அமரக் கனலைப்
பொழியென் உயிரிற் பொலிஓம் குகனே.

நேய மூன்றி நினைத்துத் துதித்துளே
கோயில் கொண்ட குகைக்கன லொன்றியே,
தூயர் தூயனைச் சுற்றித் தியானித்தார்,
வாய கத்தைக் கடந்த மவுனராய்.

செய்ய மாதவச் சித்தருள் ளேவளர்
தெய்வ குண்டலித் தீயெழுந் திப்புவி
உய்ய வந்த ஒருவனுள் ளேவளர்
துய்ய சோதிச் சுடரிற் கலந்ததே.

பொறிய டங்கி மனத்திற் பொருந்திட,
நெறிநின் றம்மனம் நெஞ்சி லடங்கிட,
அறிவி லேயஃ தடங்கச்சுத் தானந்தச்
செறிவி லேயொரு சித்தி மலர்ந்ததால்.

காந்த மின்பொறி காட்டுங் கனலென
ஏந்து மாதவர் இன்பக் கனலிலே,
நீந்தி யுள்ள நிலையினை யோதினார்;
சாந்த மாமுனி சாற்றிய சாற்றுவாம்.

இலங்கு மாதவ மேந்திடுஞ் சித்தர்காள்,
கலங்கி டாது கடமை புரிகுவோம்;
நலங் கிளர்ந்திடும்; தீமை நலிந்திடும்;
துலங்கு மின்பம்; தொலைந்திடுந் துன்பமே.
தொத்துறு மனத்தின் பாசந் துடைத்தொரு கவலை யின்றி
முத்தியில் உலவி யிந்த முதுவனம் வசித்து வந்தோம்;
இத்ததி யுலகுக் கெல்லாம் இடரென முளைத்த தீயர்
கத்தியைச் சுழற்றி வந்து நம்மையுங் கலக்கி விட்டார்.

அத்தகை அரக்கர் வாழ்வை யழித்தொழித் தமர வாழ்வை
இத்தல மாந்தர்க் கெல்லாம் இயன்றிடச் செய்ய வந்த
சித்தனிங் கொருவன் உள்ளான், செருவிலு மிணையி லாதான்,
சுத்தனென் றறியத் தக்க சுடரொளிக் குமரன் வாழ்க !

தந்திர மெல்லாம் வல்ல சதுரனாம் அறிஞன், சித்தி
மந்திரி யுடனே யின்று மாதவர் குலத்தைக் காத்தான்;
இந்தவாள் வீர னுள்ளே இன்றுநந் தவத்தை வார்த்தோம்.
சந்ததம் அறமும் அன்புந் தழைத்திட வுலக மெல்லாம் !

கதந்தரும் அரக்கர் சேனை, கடலெனச் சூழ்ந்து நாட்டின்

சுதந்தர வாழ்வைச் சின்னாள் சிதைத்திடும்; துயர்கள் ஓங்கும்;
பதந்தருங் கரும ஞான பக்தியோ கங்கள் போற்றி
இதந்தரும் பெரியோர் வாழ்க்கை இடர்ப்படும்பகைவர்போரால்.

தானமுந் தவமுங் குன்றும்; தருமமுந் தயவும், பெண்கள்
மானமுங் கற்புங் குன்றும்; மானிடர் விலங்கு போலே,
ஞானசூ னியராய் வாழ்வார்; நல்லதைச் சொல்லிக் கேளார்;
வானமும் பொய்க்கும்; எங்கும் வறுமையு மிருளுஞ்சேரும்.

பொறுமையிற் கழுதை யாகிப் பொறாமையிற் பாம்பே யாகிச்
சிறுமையிற் புழுப்போ லாகித் தீமையிற் புலிக ளாகி,
வறுமையிற் பாலையாகி, வஞ்சத்தில் நரிக ளாகி
வெறுமையுற் றீன வாழ்வை விரும்புவோர் பலரு மாவார்.

பாருயிருக் குயிர தாகிப் பலப்பல பான்மை யான
ஓருயர் பொருளை யெண்ணார்; உள்ளதும் உடலே யென்பார்,
ஆருயிர் ஆண்பெண் சேர்க்கை யளிப்பதென் றறிவு சொல்வார்,
காருகு மழையுஞ் செய்வோம் கதிரையும் படைப்போமென்பார்

ஆத்திக வேத மெல்லாம் அனலிட்டுப் பொசுக்கு மென்பார்,
நாத்திக வாதம் பேசி, நாத்தடிப் பேறக் கற்றார்,
சாத்திரச் சண்டை கோடி சாதியு மதமுஞ் செய்யும்
ஆத்திரச் சண்டை கோடி அடிமைநா டெங்கு மாமே.
குருவினைத் தூற்று வார்கள்; கோயிலை யிடிப்பார்; மாதர்
கருவினைக் கரைப்பார், தீய காமத்தாற் கண்ணி ழப்பார்,
பொருவினை செய்ய வெய்ய பொறிகளைக் குவிப்பார், நாட்டுத்
திருவினைக் கொள்ளை கொள்வார் தீவினை யரக்கர் மாதோ!

தன்னலப் புலிக ளாகித் தம்மவர் கொழுக்க வேண்டி,
இன்னொரு நாட ழிப்பார், இகல்வெறி மதமே பூண்பார்;
சொன்னதைக் காவார்; மற்றோர் சுதந்தர ராகப் பாரார்;
மன்னர சில்லார் நல்ல மக்களி னரசி லாரே.

பூசிய முகமும் போலிப் பற்களும் பொய்ம் மினுக்கும்,
வேசையின் நடையும், கண்ணும் வீணகங் காரப் பேச்சும்,
ஆசையைக் காட்டி யாளை அம்பல மாக்கு நட்பும்,
மோசமாய் வலுக்கு மிந்த மோகநா கரிகத் தம்மா !

பணத்திமிர் கொண்டோ ராலே, ஏழைகள் பாடு பட்டும்
உணத்தகு சோறில்லாமல், பசியினால் உயிர்து டிப்பார்,
நிணத்திமிர் கொண்ட ரக்கர் நீள்சமர் பெருக்கி யெங்கும்
பிணத்தினைக் குவிப்பார்; மோகப் பேய்பிடித் தாடுவாரே.

பஞ்சமுங் களவுங் கொள்ளைப் படைகளின் ஊழிக் கூத்தும்,
வெஞ்சமர்க் கொலையும், எங்கும் விடுதலைப் புரட்சிப் போரும்,
அஞ்சிடும் அரசர் வீழ்வும், அரசியற் சூது வாதும்
செஞ்செவே லென்ன மாற்றும் பசுவளச் செகத்தை யம்மா!

நெறியுடன் நெறிகள் மோதி, நிலத்துடன் நிலங்கள் மோதி,
வெறியுடன் வெறிகள் மோதி, வெடியுடன் வெடிகள் மோதி,
பொறியுடன் பொறிகள் மோதிப் புயலுடன் புயல்கள் மோதி,
அறிவிழந் தவலமாகி அழியுமிவ் வரக்கர் ஆட்சி.

அத்ததி அமைதி யென்றே அலறுவார் உலக மாந்தர்,
தத்தம தாற்ற லாலே தருமத்தை நாட்ட மாட்டார்,

புத்திவந் திறைவா நீயே புகலெனப் புலம்பு வார்கள்;
இத்ததி சுத்த னென்னும் இரவிவந் தருளு மம்மா.

வெறிபிடித் தலையும் கால வினைகளை மறந்தே, யோக
நெறிபிடித் தொழுகிச் சுத்த ஞாயிறு நிலவுகின்ற
குறிகொண்டு சுத்த சங்கங் கூட்டிநாம் வாழ வேண்டும்
அறிவரு ளாற்ற லெல்லாம் அதற்கென வழங்கி நாளும்.
இங்கினித் தவயோ கங்கள் இயற்றிட வசதி யில்லை;
வெங்குலக் கலியர் நாளை விரைந்துவந் திடும்பை செய்வார்.
நங்குலம் இமய மீது நலமுறக் கூடி வாழ்ந்து,
மங்கல மைந்த னுக்கே மாண்புறத் தொண்டு செய்க !

சாந்தனிவ் வாறு பேசச் "சரியது சரி" யென் றாத்ம
வேந்தர்கள் ஆமோதித்து, விமலனை நோக்கி னார்கள்.
ஏந்தலும் வணக்கஞ் சொல்லி, முனிவரின் இதயந் தன்னைக்
காந்தமின் சாரம் போலக் கவர்ந்திடும் வார்த்தை சொன்னான்:

சுத்தன் திருவாக்கு

ஓம் என வேதம் ஓதிடும் பொருளைத்
தாம் எனத் தெளிந்த தவமுனி வோர்காள்,
மனத்தை வென்ற மாசிலா வீரர்காள்,
சினத்தை வென்ற தீரர்காள், வணக்கம்!

காமம் வெகுளி கலக்க மின்றி,
தாமதம் ராசதம் சத்துவ மாகிய
முக்குணங் கடந்த முத்தர்காள் வணக்கம்!
சிக்கற வாழும் சித்தர்காள் வணக்கம்!
மின்விளக் கணியில் விளங்கொரு சுடர்போல்,
பன்மதத் துள்ளும் பரம்பொருள் ஒன்றெனத்
தேர்ந்து சமரசந் தெளிந்த காட்சியீர்,
சேர்ந்து வாழுந் திறமை யறிவீர்,
அருணச் சாந்தமும், ஆத்தும சக்தியும்,
கருணை யுள்ளமுங் காட்டி யுலகெலாம்,
இன்புற நோற்கும் அன்புச் சுடர்காள்!
பன்மையில் ஒருமையே பார்க்கும் யோகிகாள்,
இருவினைக் கட்டை யெற்றி யெறிந்து,
செருவினை யில்லாக் குருமர புடையீர்!
சூரியன் போலத் துலங்குஞ் சாட்சியாய்ப்
பார்விளை யாட்டைப் பார்க்கும் புலவீர்,
இயற்கை யுலகில் இறைவனைக் கண்டு
மயக்கற வுள்ளே வாழுந் துறவீர்,
நீண்ட தவக்கனல் ஈண்டெனுள் ஊற்றி
ஆண்டுகொண் டருளிய மாண்டகு பெரியீர்,
இன்றே யென்னை நன்றுநான் அறிந்தேன்;
இன்றே யென்கடன் இன்னதென் றறிந்தேன்,
இன்றே யிறைவன் என்னுள் எழுந்து,
நன்றே செய்திறல் ஒன்றை யளித்தான்.
இனியென் பேச்செலாம் இறைவன் பேச்சே,
இனியென் செயலெலாம் இறைவன் செயலே.
நானென் பதுவும், நாடென் பதுவும்,
ஊனென் பதுவும், உயிரென் பதுவும்,
எல்லாம் அவனே, என்னையா ளுடைய
வல்லா னுக்கே வணக்கம் வணக்கம்!
அவனே புகலென் றடைந்த முனிவர்காள்,

அவனே நமக்கினி அருள்வழி காட்டுவான்.
எப்படி இறைவன் எங்கே யுய்ப்பான்,
அப்படி யவன்வழி அடியேன் செல்வேன்.
அவ்வழி நீவிர் அஞ்சா தடைமின்,
செவ்வழி யதுவே, தீதறு நல்லீர்!
சாதுவா யிருந்து தவம்வளர் உமக்கும்,
தீது செய்யச் செருபடை கொண்டு,
செற்ற கயவரைத் தெய்வமே யின்று
நிற்கு நிலையற நீக்கிய தறிவீர்.
கொன்றுயிர் குடிக்குங் கொடியரை யெதிர்த்து,
நின்றது நாமே; வென்றது தெய்வம்
நடந்தது நடந்தது; நடப்பதைப் பேசுவோம்.
கடந்திட வேண்டுங் காடுகள் பலவாம்;
சுயநலக் கலியர் தொடங்கிய நாடகம்,
பயங்கரப் படலமாய்ப் படரும் உலகெலாம்.
இரத்தச் சுருள்கள் இறுமாந் தவிழும்;
உரத்த படைவலி உலகை நடுக்கும்.
மண்ணிலுங் கடலிலும், விண்ணிலும் அரக்கர்
எண்ணவும் அஞ்சும் இகல்விளைப் பார்கள்.
சத்திய மறிந்த **சாந்த முனிவர்,**
இத்தினஞ் சொன்னவை யெல்லாம் நிகழும்;
நமது புண்ணிய நாட்டு மக்களும்
தமது தருமந் தவிர்ந்து வீழ்வார்.
சாதி சமய சாத்திர கோத்திர
வாதமும் புத்தி பேதமும் பொறாமையும்
புயலெனக் கிளம்பும் போர்முர சடித்தே;
அயலவர் நாட்டை அபக்கென விழுங்குவர்.
நிறத்திமிர், நிலத்திமிர், மறத்திமிர் வலுத்தே,
அறத்தினைப் பழிக்கும் அழிவினைப் புரியும்.
ஒற்றுமை யென்றே உதட்டபி மானம்
வெற்றுரை பேசும், வேற்றுமை பெருகும்;
உட்சினம் வைத்தே உறவுகள் பகட்டும்.
கட்சிகள் பெருகிக் கலகக் காடாம்.
பயிற்றா துள்ளம் பாழ்படு மாந்தர்
வயிற்றுப் பலியாய் வாழ்வை வழங்குவார்.
ஒருவர் சோற்றை ஒருவர் பறிப்பார்;
ஒருவர் சொத்தை ஒருவர் திருடுவார்;
ஒருவர் உரிமையை ஒருவர் அடைவார்
ஒருவர் வாழ்வை ஒருவர் கெடுப்பார்.
காயிதப் போரும் கருணையில் லாமல்
ஆயுதப் போரும், அரசியற் சூதும்,
சாதிப் போரும், சமயப் போரும்,
வேதப் போரும், வேலைப் போரும்,
வீட்டுப் போரும், வீதிப் போரும்,
நாட்டுப் போரும், ஞாலப் போரும்,
இரக்கமில் லாமல், உறக்கமில் லாமல்,
அரக்கர் செய்யும் அசுரப் போராம்.
எங்கும் புரட்சி, எங்கும் போர்ப்புயல்,
எங்கும் வறுமை, எங்கும் கொள்ளை,
எங்கும் கொலைகள், எங்கும் பயங்கரம்,
எங்கும் புண்ணீர், எங்கும் கண்ணீர்
நினைக்க நினைக்க நெஞ்சம் நடுங்கும்,
அனைத்தும் அரக்கர் அழிச்சாட் டியங்களே.
இத்தகைத் துன்பம் ஏனெனக் கேண்மின்:—
பித்துப் பிடித்த பேய்மனத் தாலே,

புத்தி கெட்டுச் சுத்தான் மாதரும்
சக்தி கெட்டுச் சமரஸங் கெட்டு,
நாசஞ் செய்யும் நான்என தென்னும்
பாசஞ் சுற்றிப் பண்பினை யிழந்து,
கட்டுக் கடங்காக் காட்டு மிராண்டிகள்,
கொட்ட மடிப்பார் குவலய மெங்குமே,
உயிர்வதை யாலே யுண்டு கொழுப்பார்,
உயிர்க்கொலை யாலே யுலகை யெல்லாம்
கொலைக்கள மாக்கிக் கொற்றவர் யாமெனத்
தலைதலை கிளம்பித் தடியர சியற்றுவார்.
வேகப் படைகள், வீண்வெறி பிடித்த
மோகப் படைகள் முன்முன் சென்று
முடியர சுகளைக் குடியர சாக்கும்;
குடியர சுகளைக் கொலையர சாக்கும்.
ஆழிப் புயல்போல் ஆட்சிகள் கிளம்பி
ஊழிப் புயலாய்ச் சூழுமிவ் வுலகை!
மனத்தைப் பிடித்த தினவுந் தனித்தனி
இனத்தைப் பிடித்த கனத்த செருக்கும்,
படர்தரும் பஞ்சமா பாதகக் கூத்தும்
இடர்தரும் போரும் இயற்கை பொறாமல்,
ஆண்டவ னிடத்தில் அலறிய பயனாய்,
ஈண்டவன் புரியும் இரண சிகிச்சையே.
புன்மை வரினும், புகழே வரினும்,
நன்மைக் கென்றே நடப்பார் மேலோர்.
குண்டுபீ ரங்கி கொண்டுபோர் புரிவோர்
குண்டுபீ ரங்கி கொண்டே யழிவார்.
வாள்வீச் சினையோர் வாள்வீச் செதிர்க்கும்,
தோள்வரை தனையோர் தோள்வரை தாக்கும்.
தாக்கித் தாக்கித் தகர்த்துத் தகர்ந்தே
ஊக்கமாய் இடர்கள் ஒழிந்து போகும்.
புயலும் இடியும் பூகம் பங்களும்,
இயற்கையி னெழுந்தே யியங்குதல் போல,
நகார மடித்து நானெனக் கிளம்பும்,
விகார மனத்தில் விளைவன போர்கள்,
மனிதனைப் பிடித்த மமதை நோயை
இனிதுறக் கெடுக்கவே இவையெலாங் கிளரும்.
பண்டைக் கசண்டுகள் பாழ்பட் டொழியும்;
சண்டைக் கப்புறம் சகத்திற் கெல்லாம்
புதிய வாழ்வைப் பொலிவுற நாட்டவே
அதிமனி தர்கள் அருளுடன் வருவார்.
இருள்வழி யேகி யிடர்ப்படும் உலகம்,
அருள்வழிச் சென்றே அமைதி பெறுமே;
அறிவுந் திருவும், அன்பும், வீரமும்,
அறமுந் தவமும், ஆத்தும சக்தியும்,
உள்ளொற் றுமையும், உலகொற் றுமையும்,
கள்ள மற்ற கருணை யொழுக்கமும்,
இறைவனோ டிணையும் இயற்கை யின்பமும்,
குறைகளை வென்ற நிறைகுணப் பண்பும்,
தாக சோக மோகங் கடந்தே,
யோகமும் சுத்த போகமும் பொலியும்.
தெய்வ வாழ்வைத் திருவரு ளாலே
வையக மீது வளமுற நாட்டலே
கடமை நமக்காம்; கால சக்தி,
நடத்து கின்ற நாடகந் தன்னில்,
வரையிலாக் காட்சிகள் வளர்ந்து செல்லும்;

திரையை யுயர்த்தித் திருவரு ளிச்சை
மணி யடித்ததும், மாதவக் கனலுடன்
அணியணி யாகப் பணிசெய வருவோம்.
அப்போ திறைவன் அன்பரை நடத்துவான்;
இப்போ ததனை யியம்புதல் அரிதாம்.
கால சக்கரம் கடவுளை நோக்கும்
காலமே நமது காலம தாகும்.
அதுவரை நாமெலாம் அடக்க மாகப்
பொதுநலம் புரியப் பூரண சக்தியை
வளர்ப்போம்; இமாலய வரைமிசை யிருந்தே.
உளப்போர் வென்ற உண்மை வீரர்காள்!
அவம்புரி யரக்கர் ஆற்றலை வீழ்த்தத்
தவம்புரி நெறியே சக்தி யளிப்பதாம்,
செல்வீர் முனிவர்காள், சிவகை லைக்கு,
வெல்வீர் உங்கள் விருப்ப மெல்லாம்
புரியத் தக்கன புரிந்தபின், யானும்
உரியகா லத்தில் உம்மிடம் வருவேன்.
சித்தி நகரைச் சீரழித் திடவே
இத்ததிக் கலியன் இறுமாந் தெழுந்தான்.
என்னைக் கொல்லவும், எந்தையைக் கொல்லவும்,
அன்னையை யழிக்கவும் ஆத்திரங் கொண்டான்.
வெறிமிகு படையால் வெஞ்சமர் தொடுப்பான்.
முறியடித் தவனை, முன்னே யெனது
நாட்டையும் வீட்டையும் நலமுற நாட்டிச்
சேட்டை செய்யும் தீயரை யொடுக்கி,
என்னிடம் உயிர்வைத் திருக்கும் தந்தையை,
இன்னிய பணியால் இன்ப முறுத்தியே,
எந்தாய் இந்திரை இசைந்தெனக் காணை
தந்ததும் இமாலயஞ் சார்வேன், முனிவீர்!
கடமை பெரிது; காலமோ சிறிது.
கடவுள் அளித்த காலந் தன்னை
அவனை யறியவும், அருட்பணி புரியவும்,
தவக்கள னாக்கித் தழைப்போம்; பெரியீர்.
கத்தியைத் தீட்டும் கலியொழிந் தினிய
சத்திய யுகமே தழைக்கத் தழைப்போம்.
சுத்தன் சித்தன், சுதந்தரப் பெருமான்,
அத்தன், எம்மை யாண்டவன் அருளால்,
அவன்பெயர் தாங்கும் அடியேன் கொண்ட
நவம்பெறு கொள்கை நலம்பெற நாளும்
சிவம்பெறு நல்லீர், தெய்வப் புலவீர்,
தவம்பெறு சித்தி தந்தருள் வீரே.
அக்கா லத்தின் அரக்கரைக் காட்டிலும்
இக்கா லத்தின் அரக்கர் வலியரே;
கல்வியும், கணக்கும், கலையும் தொழிலும்
செல்வச் செழிப்பும் தீரமும் வேண்டும்.
உடையணி வேண்டும், உலகம் மதிக்கும்
படையணி வேண்டும், பயன்பெறு தவத்தால்
ஆத்தும சக்தி யடைந்திட வேண்டும்.
தீத்திரள் போலே சிற்சக்தி வேண்டும்.
இராமனும் சிவாஜியும் இராம தாஸனும்,
ஒரேதிரு மேனியில் ஒன்றிட வேண்டும்.
பத்தியுங் கருமமும் பரம ஞானமும்,
முத்தியும் வீர முயற்சியும் சேர்ந்த
புதிய வாழ்வு பொலிந்திட வேண்டும்.
முதிய ஞானமும், முன்னேற்ற வீறும்,

சாந்தமும், சிவமும், சச்சிதா னந்தமும்,
சேர்ந்த வாழ்வே தெய்விக வாழ்வாம்.
பக்குவ மறிந்து பரமன் அருளால்
இக்கருத் தென்னுள் இலகிய தின்றே.
நாட்டி னியல்பை நயமுற வெனக்குக்
காட்டியின் றெழுந்த கலியர் போரில்
முன்சென் றிகலை முடித்த **சித்திமான்,**
என்குல மந்திரி யிசைபெற வாழ்க ! 420
சாரமாங் கதைகளும் சாத்திர நுட்பமும்,
பாரி னியல்பும் பரிந்தெனக் கருளி,
தீரமும், பக்தியும் திருவுறத் தூண்டிய
பூரண சாந்தன் பொன்னடி போற்றி !
என்னைப் பயிற்றுவ தினியவன் கடனே.
முன்இனிச் செல்வோம் முனிவர் கணங்காள்!
சித்தியிற் செய்வன செய்தபின் கருதிய
மெய்த்தவம் புரிவீர் மேதினி வாழவே!

சித்தி செல்லல்

கேட்டனர் முனிவர் சுத்தன் கிளத்திய உண்மை யெல்லாம்,
"வாட்டமொன் றில்லை யிந்த வரம்பெற்ற வேந்த னாலே
நாட்டிடர் நீங்கு" மென்றார். நாமினி இந்த வீரன்
காட்டிய வழியைப் பற்றிக் காணுவோம் இன்ப மென்றார்.
கொண்டநங் கொள்கை வென்றேகுருகுலங் காண்போ மிங்கே
தண்டக வனத்தி லின்றெந் தானைகள் பயில்க வென்றே,
அண்டிய முனிவரோடும் அமைச்சொடுந் தேரி லேறிப்
பண்டிசை முழங்கச் சுத்தன் சித்தியைப் பார்க்கப் போனான்.
துயரிடர்க் காட்டை யெல்லாந் தூள்பட நூறி, வாழ்வின்
உயர்நல மோங்க, நாளை யுலகினில் யோகசித்திப்
பயிர்செழித் தோங்கத் தீயர் பந்தனை நீங்க வேண்டி,
அயர்வறத் தொண்டு செய்யும் அருந்தவ முனிவர் வாழ்க! 460
ஆழிசூழ் உலக மெல்லாம் அறநெறி யோங்கி நன்மை
சூழுக! சுத்த ஜோதி, துலங்குக! மாந்த ரெல்லாம்
தோழமை பூண்டு வீர சுதந்தர ராக நீடு
வாழிய வென்றெல் லாரும் வளநக ரடைந்தார் மாதோ! 464

24. அரசவைப் படலம்

தங்க மாமலை தவழ்ந்திடுந் தரளவெண் மதிபோல்,
துங்க வெண்குடை துலங்கரி யணைமிசை யரசன்,
இங்கி லங்கிடும் இந்திரன் எனக்கொலு விருந்தான்;
மங்க லத்திரு வரசியும் இருந்திட மருங்கே !

சித்தி மாநகர்ச் செல்வரும் புலவருஞ் செறிய
முத்தர் போற்றிடும் பாரத முனியரு கிருக்க,
வித்தகர் புகழ் அமைச்சுடன் வேந்தவை யிருந்தான்.
சத்தியன், புவி தாங்கிடுந் தருமமே யன்னான்.

மகர யாழ்குழல் மத்தளந் தழுவிடக் கலையின்
சிகர மேறிய திருவருட் சிந்தைகொள் புலவர்,
அகர மென்னவே அகிலத்திற் காதியாம் பொருளை,
"பகவ னேசுப மருளே" னப் **பரவினார்** பணிந்தே.

ஆதி சக்தியை, அகண்டசிற் சக்தியை, ஞான
ஜோதி சக்தியைச் சுதந்தர சக்தியை, ஐந்து
பூத சக்தியைப் பரப்பிநீள் புவியினில் ஆடும்

வேத வுட்பொரு ளாகிய விமலனே போற்றி !

பொங்கு நல்லறப் புகழுடன் புனிதமெய் வாழ்வும்,
சிங்க நெஞ்சமும், வீரமும், சிரமுயர் நடையும்,
துங்க மாதவர் ஆசியும், தொல்புவி வாழ்த்தும்,
எங்க ளுக்கினி தீந்தருள் இறைவனே போற்றி !
பல்லி யங்களு முழங்கின, பலகலைப் புலவர்
வல்ல பங்களை வளமுற விளக்கியே தக்க
செல்வ மெய்தினர், செய்வன செய்திட வாங்கே,
சொல்லி லாச்சுறு சுறுப்புணர் வெழுந்தது துடித்தே.

கால் அமர்ந்தது, கண்ணிய மன்னவை அனைத்தும்,
சீல வாணகை திகழுறச் செங்கண்ணால் அளந்தே,
கோல மாமுகம் குலந்தரும் பெருமையாற் குலுங்க,
ஞால மன்னனும் அமைச்சரை விளித்தனன் நயந்தே.

சத்தியன்

மன்னுயிர்க் குயி ராகிய மன்னவன் அருளால்,
அன்னவன் பணி யாகவே அறச்செங்கோல் பிடித்தேன்.
என்னை என்னர சாட்சியை யினிதுற மதிக்கும்
தன்மையீர், பொது நன்மையைத் தாங்கிடுந் தகையீர் !

தக்க கல்வியும், ஒழுக்கமும், தகுந்தநற் றொழிலும்,
பக்குவப் பயிர் வளமையும், பண்புள திருவும்,
சிக்க லற்றவொற் றுமையுடன் செறிந்துநம் அருமை
மக்கள் யாவரும் வாழ்வகை வாழுவ தறிவோம்.

சித்திமான்

வணக்கம் வேந்தநல் வளமையும், வீரமும் அன்பும்,
குணக்க மற்றநற் கொள்கையுங் கல்வியுந் தொழிலும்,
பிணக்க மற்றுள ஒருமையும், பிரிவறு திருவும்,
இணக்க முற்றுன தின்னுயிர்க் குடிகளங் கிருப்பார்.

தாயுந் தந்தையுந் தமயனு நீயென மதிப்பார்;
கோயி லாகவுன் குடைநிழ லரசையே குறிப்பார்;
நேய ராகவுன் னிசையொளி நிலவிட வாழுந்
தூயரே யுனைத் துதித்திடுந் தொண்டராங் குடிகள்.

சத்தியன்

இனிது நும்முரை, என்னருங் குடிகளின் சேமம்,
எனது சேமமென் றியன்றதை இயற்றினன் இயல்பாய்.
தனது நோயினைத் தவிர்ப்பது போலவே, மக்கள்
மனது ளேமறை குறையையு மாற்றிட முயன்றேன்.
உண்ணும் போதிலும், உறங்கிடும் போதிலும், பூசை
பண்ணும் போதிலும், பாரத நாட்டுடை நலமே
எண்ணு கின்றனன்; இறைவனை யிறைஞ்சிநிற் கின்றேன்.
கண்ணுங் காவலு மாயிதைக் காக்கின்றேன்.... அறிவீர்.

இவ்வகை யிமை யிரண்டென நாட்டினைக் காத்தும்,
ஒவ்வறுஞ் சிலர் உட்பகை யெழுந்ததின் றுண்மை,
அவ்வியந் தரும் அரக்கரின் றகங்கரித் தாங்கே
தெவ்வினை தொடர்ந் தாரதைத் தெரிகிலார் யாரே?

கற்ற கல்வியோ டனுபவங் கண்டிட வேண்டி,
இற்றை நாளினில் இளவர சிப்பெரு நாட்டைச்

*சுற்றித் தண்டகம் வந்ததும், சூழ்ந்தவெம் போரைப்
பற்றி யொற்றர்கள் பகர்ந்ததைப் பழுதற வறிந்தோம்.*

*ஒரு மகன், என துயிரினும் அரியவன், என்பின்
வரு மகன், இந்த வையத்திற் கினியன வெல்லாந்
தரு மகன், இன்று தருமப்போர் தருவதை யெண்ணிப்
பெருமை கொண்டனன் பெற்றதன் பயனையும் பெற்றேன்.*

*புத்திமான், புவி போற்றிடும் புலமையிற் சிறந்த
சித்தி மானுடன் சென்றதே வென்றதாம்; எனினும்,
இத்தினம் இகல் வலுத்ததென் றியம்பினார் ஒற்றர்;
சுத்த னுக்கொரு படையணி துரிதமாய் விடுவோம்!*

விஜயன்

*போரெப் போதெனப் புயத்தின வெடுத்தநம் படைகள்,
நேரிப் போதவண் சென்றிட நின்றுள தென்றே,
வீரப் போர்வர விம்மிடும் விஜயனு மாங்கே
நேரப் பேசுழி நீண்முர சார்த்ததைக் கேட்டார்.*

*என்ன வென்னுமுன், வெற்றியென் றெதிர்ந்தநற் றூதர்,
"மன்ன வுன்மகன் மந்திரி யுடன்வரு கின்றான்.
அன்ன வன்முனி கணங்களின் ஆசிசூழ்ந் துற்றான்.
முன்ன ருன்னடி பணிந்திட முந்துவா" னென்றார்.*

*வந்த னன்மகன் வாகைகள் சுமந்தென, மன்னன்
கொந்த ளித்திடும் உவகையாற் குதித்தெழுந் தோடி,
முந்தி னான்வர வேற்றிட முனிகணத் துடனே,
அந்த வேளையிற் சித்திமான் அரசன்முன் வந்தான்.
"வருக" வென்றுதன் மந்திரிக் கிழவனை ஏற்க,
உருகு மன்புடன் வந்தனம் உரைத்தநல் லமைச்சன்,
பெருமை பெற்றதிவ் வுலகமுன் பிள்ளையால்; அவனை
இருவ ரும்அர சவையினில் ஏற்பமென் றுரைத்தான்.*

*"அதுவென் பாக்கிய" மென்றதும் அரசனு மாங்கே,
பொது சனக்கடல் "சயசய புனித" வென் றார்க்க,
சதும றைமுனி வர்துதி சாற்றிடச் சுத்தன்
புதிய வேளென முதியபொற் கோயிலுட் புகுந்தான்.*

25. வரவேற்புப் படலம்

*கரை புரண்ட கடலென் றரசவை,
உரை யுயர்த்தி, "யுலகினைக் காத்திடுந்
துரை வருக, நம் சுத்தன் வரு" கென்றே,
நிரையுடன்வர வேற்றிட நின்றதால்.*

*"வருக சக்தி குலந்தரு மாணிக்கம்,
வருக எங்கள் வரம்பெறு கோமகன்,
பொருந ராழிப் புறங்கண்ட புண்ணியன்
வருக" வென்றனர் மந்திரி மாரெல்லாம்.*

*"அரிய வெற்றி யடைந்தனை அன்பநீ
பெரிய ராசிகள் பெற்றனை; பேசுதற்
குரிய உன்புகழ் ஓங்குக மைந்தனே
விரிக திரென மேதினி யெங்குமே!"*

சத்தியன் குலம் சந்ததம் வாழ்ந்திடச்

சித்தி யின்புகழ் சீர்பெற வந்தனை
சுத்த வீரச் சுடர்மணி வா வென்றே
முத்த மிட்டனர் பெற்றவர் முன்வந்தே.

மங்கல மைந்தநீ வருக, மாண்புடன்
உங்குல மோங்கிட ஒளிர்க பானுபோல்,
பொங்குக உன்புகழ் பூவு லகெலாம்,
தங்கிநன் றோங்கிடுந் தரும தீபம்போல்.

இவ்வகை குமரனை யேற்றுப் **பாரதன்**,
செவ்விய முனிவரைச் சேவித் "தெம்பதி,
துவ்விய தானதுந் தூய சங்கத்தால்;
திவ்விய சித்தர்காள் சேர்க" வென்றனன்.
அவரவர் அவரவர் இடத்த மர்ந்ததும்,
தவமுனிக் கணத்தினை வணங்கிச் சத்தியன்
அவைநிகழ் மணியினை யடிக்கச் சொல்லித்தன்
தவிசினில் அமர்ந்தனன் தருமம் போலவே !

படையணி வீரர் போற்றப் பண்புள வமைச்சர் போற்ற
நடையணி குலுங்கு மாதர் நல்லிசை யுடனே போற்றக்
கொடையணி செல்வர் போற்றக் கொற்றவை போற்ற வெற்றிச்
சுடர்மணி சீயம் போலச் சுத்தனும் எழுந்தான் மாதோ !

நண்ணிய மகனைத் தங்க நவமணித் தவிசில் ஏற்றிப்
பண்மலர் சொரிய, வேதப் பாடல்க ளாலே போற்றி,
"உண்மையில் உதித்த தூய ஒளிமணி வாழ்க!" வென்றே
தண்மலர் சொரிந்தார் அந்தச் சத்தியச் சபையி லுள்ளோர்.

ஆவியாய் உலகைத் தாங்கும் அறத்தினைக் காத்தாய் வாழ்க !
பாவியர் போரைப் போராற் பாழ்படப் படுத்தாய் வாழ்க !
தீவினை தீர வந்த திவ்விய வீர வாழ்க !
நாவினுக் கினிய சுத்த நாமவுன் சீர்த்தி வாழ்க !

சுத்தன்

புன்னகை பூத்த பொன்முகங் காட்டிப்
புனிதனுங் கனிமொழி தேர்ந்தே,
"அன்னையே வணக்கம் தந்தையே வணக்கம்,
அருட்பெருஞ் சித்தரே வணக்கம்,
மன்னுயிர் வடிவாய் உலகினில் ஆடும்
மங்கல சக்தியே வணக்கம்,
என்னுயிர் வாழ்வும் செயல்களும் உமது
கருணையால் இயன்ற" தென் றுரைத்தான்.

கனிப்பொறை வணக்குங் கற்பகக் கிளைபோல்,
கற்றநல் வணக்கமே காட்டித்
தனிச்செருக் கின்றிச் சாற்றினான் கேளீர்;
தகைபெருஞ் சித்திமா னுடனே,
வனத்துறை முனிவர் ஆசியின் றுணையால்
வலிபடை யரக்கரை நலித்தேன்.
எனக்கென வாழ்க்கை யில்லையிங் கினிமேல்
என்னையே யிறைவனுக் கீந்தேன்.
இன்றுல கியல்பைக் கண்டனன் சுற்றி.
இனிவரு நாளையுங் கண்டேன்;
தென்றிசைக் கோமான் செய்விளை யாட்டைத்

திசைதிசை காணுவ தல்லால்,
நன்றுறு வினைகள் எவற்றையுங் காணேன்;
ஞாலத்திற் கிது நல்லகாலம்
அன்றெனத் தெரிந்தேன்; கலிதரும் அரக்கர்
ஆட்டமே வாட்டுமிவ் வுலகை

கஞ்சியே தேடிக் காரிகை யாரின்
கலவியே சுகமென நாடி,
வஞ்சமே புரிந்து, வாய்மையை யிழந்து,
வறுமையே வரவரச் சுமந்து,
நஞ்சமே யுண்ட பஞ்சரக் கிளிபோல்
நாளுமே நலிகின்றார் உலகோர்;
அஞ்சினேன் இவரை, ஆண்டவா வுன்றன்
அருளுற வேயெனக் கருளாய்.

உயிர்க்கொலை புரிவார், கொலையுண வுண்பார்,
உலகினை யுலைத்திடக் கொதிப்பார்;
அயர்விலாப் பொன்பெண் ஆசைக ளாலே,
அதர்மமே கடனெனப் புரிவார்,
பயிர்களை யரிக்கும் விடப்புழுப் போன்றார்,
பாரினில் எளியரை நலிப்பார்.
கயவரின் உறவைக் கனவிலுங் கருதேன்,
கடவுளே யுன்னுற வருளாய்!

பட்சிக ளிடையே கூட்டுற வுண்டு!
பாரினர் ஓரினம் பேசிக்
கட்சிவேற் றுமையாற் கலகங்கள் செய்வார் ;
காக்கைபோற் கூடியே கலைவார்;
உட்சினம் வைத்தே உதட்டினிற் சிரிப்பார்;
ஊரினுக் குழைப்பது போலே
குட்சியை நிரப்புங் கும்பலைக் கூடேன்
குலவுக நின்னரு ளுறவே.

கொள்ளிபோல் விழியார்; பிறர்குடி கெடுப்பார்;
குத்திரங் கோள்பொய்யே யுரைப்பார்,
கள்ளினைக் குடிப்பார், கற்பினை யழிப்பார்;
காலத்தைச் சூதினில் இழப்பார்,
வெள்ளியின் வலையில் வீழ்ந் ததஞ் செய்வார்;
விதவிதக் கொடுமைகள் இழைப்பார்;
உள்ளினும் உள்ளம் சுடும்உற வணுகேன்;
உள்ளவா வுன்னுற வருளாய்.

இவ்வகை யிறைவனை யிறைஞ்சி நாடினேன்.
உய்வகை யவனருளன்றி யுள்ளதோ,
எவ்வகை யவனுளம் ஏவு கின்றதோ,
அவ்வகை நடப்பதென் அறம தாகுமே.

என்னுயிர் வீணையை யிறைவன் மீட்டிட,
மன்னுயிர்க் கதனிசை மகிழ்வு கூடுமால்,
இன்னிய நண்பர்காள், இசைந்து நம்புங்கள்;
அன்னவன் அருளுமை ஆத ரிப்பதே.

முதற்சமர் முடிந்ததென்றுவ கைகொள்ளலீர்;
அதர்மமே தொழிலெனும் அரக்கர் நாளையே,
கொதிசினப் படைகளைக் கொண்டு, சித்தியின்
மதிலினை வளைத்திட வருவ தாகுமே.

ஆயினும் அஞ்சலிர் அன்பு நேயர்காள்,
பேயினுங் கொடியவர் பிறகிட் டோடவே
போயினும் படையுடன் போர்செய் யென்றுளே
நாயகன் கட்டளை நாட்டி விட்டனன்.

ஆதலால் இனிவரும் அமர்க்க ளத்திலும்
கோதறு வீரரைக் கூட்டிச் சித்தியைத்
தீதறக் காப்பதென் செய்ய நற்கடன்
மேதகு கேள்வியீர் விருப்ப மோதுமின்!

மறந்தரு பகைவரை மாற்றி வெற்றிகொள்
அறந்தரு தூயவன் ஆர்த்த வாசகம்,
சிறந்தவுள் ளுணர்ச்சியைத் தூண்டச் சீரவை
பிறந்தது பரந்தது பெரிய மோனமே.

போர்த்த மோன வியப்பினைப் போக்கியே,
சீர்த்தி யோங்கிய செல்வன் முகத்தினைப்
பார்த்துப் பார்த்துப் பரவச மாகிய,
கீர்த்தி வேந்தன் எழுந்து கிளத்தினான்;

வேந்த வையில் விளங்கும் அறிஞர்காள்,
மாந்த ருக்கினி மாறிய காலமே
போந்த தென்று புனித னுரைத்தது,
நாந் தடையற நம்பிடும் உண்மையே.

உடன் பிறந்துடன் உண்டு வளர்ந்தவன்,
கடன் மறந்த கலியனும், **மோகி**யால்,
விடங் கலந்த விரோதியென் றாயினான்,
மடங்க லந்த மனத்திமி ரென்னைவே !

கண்ண யர்ந்துங் கடமை மறக்கிலார்
புண்ணி யப்புவி போற்றும் புரவலர்;
எண்ணி நன்மை யியற்றிட லேயவர்
மண்ணு டல்பெறு மாண்பெனக் கொண்டனர்.

மிக்க மேலவர் செஞ்சொலை மேற்கொண்டே,
தக்க தாற்றித் தருமஞ் செலுத்தினேன்,
இக்கொ டியவன் இன்றென தாட்சியும்
பக்கு விட்டிடப் பாதகஞ் செய்கிறான்.

ஒற்றர் மூலம் உளவறிந் தன்னவன்
பற்றுந் தீய வழிகளைப் பார்த்தனன்;
மற்றுஞ் சொல்லை வளர்ப்பதி லென்பயன்?
சிற்றிற் பாம்பினைச் செற்றிட லேகடன்.

குடிக ளின்பமே கொள்கையென் றாளுமென்
கொடியின் மீதக் கொடியவன் ஏவிடும்
இடி விழுமுன் எதிர்த்து நொருக்கிடக்
கடிய வேகப் படையெழக் காண்பமால்.

உருகும் ஈயத்தை ஊற்றிய தென்னவே,
குரு முனிவர் குடில்களைத் தாக்கிய,
வெருவு செய்தி விழுந்ததும், சுத்தனே
செருவெல் வானெனச் சிந்தித் திருந்தனன்.

புலி நகரெனப் புல்லர்கள் கூடிய
கலி நகரக் கடும்பகை செய்படை
கிலி பிடித்துரங் கெட்டுப்பின் னோடிட
வலிய சேனை வளைகநங் கோட்டையே.

படைத் தலைவன் விசயன் பணியிது;
கடையர் கூடுங் கலிநகர் ஏகியே,
நடை முறைகளை ஒற்றர் நவிலுக;
இடையி லின்னொன் றியம்பிடக் கேண்மினோ,

சிற்ற ரசர்சிலரின் உதவியைப்
பெற்ற னன்கலிப் பேயென் றறிகிறேன்;
ஒற்றர் சென்றவ் வுளவையுங் காண்மினோ;
கற்ற மந்திரி யின்கருத் தோதுக;

நாடு சுற்றி யறிந்து நலமுற
வீடு வந்தநம் வித்தகச் சித்திமான்,
நீடு வாழுறு நீதி யரசினை
நாடு மாந்தர் நிலையை நவில்கவே.

சித்திமான்

சாதி பேதமி லாது சகலரும்,
மேதி னிக்கு விளக்கெனத் தோன்றியே,
நீதி காக்கு நிருபனென் றுன்னையே
ஓதி யுள்ள முவந்தனர் உண்மையே.

தந்தை நீயவர் தாயுன் னரசியே,
பந்து வர்க்கமிப் பாரத நாடெலாம்;
இந்த நல்லுணர் வெங்கும் இருந்தெமை
வந்த னத்துட னேவர வேற்றதால்;

நிறை மனத்தின ரான நிருபர்கள்,
இறைவனா முனை யெண்ணிப் பணிந்தனர்;
பொறை மனத்தர் பொதுசன நேயரும்;
குறை மனத்தன் கொடிய கலியனே.

சாத சோகனும் சந்திர குப்தனும்,
ஆதி பாண்டி யரசரும் போலவே,
நீதி செய்யு நிருபவுன் னாட்டிலே
பேதஞ் செய்யப் பிறந்தனன் பேயனே.

ஆருக்கும் பய மற்ற துரோகியிப்
பாருக் கேயிடர் செய்யும் படைகொண்டான்;
சீருக் கெல்லாஞ் சிறந்த நம் சித்தியின்
வேருக்கே விடம் வார்க்க விழைந்தனன்.

நற்ற வரை நலிக்கச் செயலிலான்,
ஒற்று மையை உலைக்க வுழைக்கின்றான்,
இற்றை நாட்டில் இவன்யம தூதர்கள்,
புற்ற ரவெனப் பூந்து கரந்துளார்.

சுத்தன் சொன்ன சுடர்மொழி யுண்மையே,
சத்தியன் சொல் சமர்வினை தக்கதே.
ஒத்த நெஞ்சுடன் ஓங்கிய வீறுடன்,
சத்து ருவைத் தகர்த்திட நிற்பமால்.

அமைச்ச னிம்மொழி பேசி யமர்ந்ததும்,
இமைத்த லின்றி யிருந்த சபைக்குநல்
அமைதி வாக்கை யருள்கென மன்னவன்,
சமதை கொண்ட முனிவரர் சாற்றினார். 200

முனிவர்

வீரர்கள் பெருக; நாடு விடுதலை பெறுக; ஞான
தீரர்கள் பெருக; தெய்வ ஜீவனம் பெருக; நாளும்
போர்மத வெறிக ளின்றிப் புதுயுகம் பொலிக வெற்றி,
பாரத சக்தி ஜோதி பரவுக வுலக மெல்லாம் !

முனிவ ராசி முடிந்ததுஞ் சத்தியன்
இனிவி னைகள் இயற்ற வெழுந்தனன்;
புனிதன் பொன்முகப் புன்னகை கண்டுநன்
மனவு றுதிகொள் மன்ற மெழுந்ததால் ! 208

பாரத சக்தி

முதலாவது சித்தி காண்டம்

முற்றிற்று